# நெஞ்சில் நிறைந்த ஜகத்குரு

**Personification of Perfection**

என்னும் புத்தகத்தின் தமிழாக்கம்

ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடத்தின் 35வது பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் வாழ்க்கையும்
உபதேசங்களும் அடங்கிய தொகுப்பு


தமிழாக்கம்

**ஸ்ரீ K. சுரேஷ் சந்தர்**



வெளியிடுவோர்

**ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன்**

சென்னை

First Edition : 2005 (2000 Copies)
Reprint : 2012 (1200 Copies
Reprint : 2017 (2000 Copies)

Published by : Sri Vidyatheertha Foundation
Chennai - 600 032

© All Rights Reserved


Copies Available at : Administrative Office
Sringeri Bharathi Vidyashram (Basement)
New No.21 (Old No.11)
Venkatanarayana Road
T Nagar, Chennai - 600 017

Mobile Nos. : 90031 92825 , 97899 99160
Email : srividyatheertha@gmail.com

Price : Rs.50/-

Offset Printing : Sudarsan Graphics
No.27, Neelakanta Mehta Street
Chennai - 600 017
Phone : 2434 4038

# ஸமர்ப்பணம்



ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின்
88வது ஜெயந்தி மஹோத்ஸவத்தில் அவர்களது
பொற்பாத கமலங்களில் இப்பதிப்பு
பக்தியுடன் ஸமர்ப்பிக்கப்படுகிறது

# பதிப்புரை

ஸ்ரீ சங்கரபகவத்பாதாளால் ஸ்தாபிக்கப்பட்ட சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 35வது பீடாதிபதியாக பீடத்தை அலங்கரித்து பீடத்திற்கு மிகுந்த பெருமையைத் தேடித் தந்தவர் ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள். ஸ்ரீ மஹாஸன்னிதானம் என்று பக்தர்களால் அன்போடு அழைக்கப்படும் இவர் 1917ஆம் ஆண்டு பெங்களூரில் அவதரித்தார்கள். 1931ஆம் ஆண்டு ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதி மஹாஸ்வாமிகளிடம் முறையாகத் துறவறம் பெற்றார்கள். இருபத்து மூன்று ஆண்டுகள் தமது குருவிற்கு பணிவிடை செய்த இந்த மஹான் 1954ஆம் ஆண்டு பீடத்தின் பொறுப்பினை ஏற்றார்கள். இவர்கள் பீடாதிபதியாக இருந்த 35 ஆண்டுகளும் சிருங்கேரி மட வரலாற்றில் பொற்காலமாகக் கருதப்படுகிறது.

சிறுவயதிலேயே வாய்மை, எளிமை, தூய்மை, எல்லா ஜீவன்களிடத்தும் அன்பு, இறைபக்தி, வைராக்யம் போன்ற பல நற்குணங்களை வெளிப்படுத்திய ஆசார்யாளின் வாழ்க்கை மிகச் சிறந்த பாடமாகவும், எத்தகைய சூழ்நிலையிலும் நம் வாழ்க்கையை சரியான முறையில் வாழ்வதற்கு ஒரு சரியான எடுத்துக் காட்டாகவும் அமைந்திருக்கிறது. முழுமையின் முழு அவதாரமாகத் திகழ்ந்த இம்மஹானின் ஒவ்வொரு செயலிலும் பூரணத்துவம் தாண்டவமாடியது. நடந்துச் செல்வது, ஆடை அணிவது, விபூதி தரித்துக்கொள்வது, கைக்குட்டையை கையாள்வது போன்ற சிறிய செயல்கள் முதல் மிக உன்னதமான யோக நிலை வரை அவர்கள் செய்த ஒவ்வொரு செயலிலும் முழுமையும் நேர்த்தியும் காணப்பட்டன.

ஒருவன் எப்படி மகனாக வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அவர்கள் சிறுவயதில் வாழ்ந்தார்கள். ஒரு சிறந்த மாணவனாக அவர்கள் பள்ளிப் பருவத்தில் பிரகாசித்தார்கள். ஒரு சீடன், குருவிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு இலக்கணமாக அவர்கள் திகழ்ந்தார்கள். துறவிகளில் மிகச் சிறந்த துறவியாக விளங்கினார்கள். ஓர் உத்தம குருவாகத் திகழ்ந்து தம்மை நாடி வரும் பக்தர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களது தேவைக்கேற்ப

அருள்பாலித்தார்கள். இளம் வயதிலேயே தமது யோக ஸாதனைகள் மூலம் கடும் தவம் புரிந்து, யோகத்தின் மிக உன்னத நிலையான நிர்விகல்ப ஸமாதியில் பல காலம் நிலைத்து இருந்தார்கள். பிறகு பரம்பொருளில் நிஷ்டையை அடைந்து, தமது 20 வயதிற்குள் மிக அரிய ஜீவன்முக்தி நிலையை அடைந்தார்கள். பண்டிதர்களில் ஒப்பற்ற பண்டிதராகவும் காணப்பட்டார்கள். சிருங்கேரி சாரதா பீடத்தின் பீடாதிபதியாக உலகிற்கு நிர்வாக திறன்களை எடுத்துரைத்தார்கள்.

இப்படி பல்வேறு கோணங்களில் ஆசார்யாளின் வாழ்க்கையிலிருந்து நாம் பற்பல பாடங்களை கற்றுக் கொள்ளலாம். இந்த மஹானின் வாழ்க்கை வரலாறு இராமாயணத்தைப் போல் தினசரி பாராயணம் செய்ய உகந்த ஒன்று. இந்த ஜகத்குருவின் வாழ்க்கை வரலாற்றை படிப்பதனால் உள்ளம் தூய்மை அடைவது மட்டுமல்லாமல் மனிதப்பிறவியின் மிக உயர்ந்த இலட்சியத்தையும் அடைய முடியும்.

இந்த நோக்கத்துடன்தான், ஆங்கிலத்தில் 1995 ஆம் ஆண்டு 'Personification of Perfection' என்ற புத்தகத்தை Dr. V. ஜெயசங்கர் அவர்கள் எழுதி, நாங்கள் வெளியிட்டோம். இப்போது அவரது அனுமதியோடு, தமிழில் **'நெஞ்சில் நிறைந்த ஜகத்குரு'** என்ற இந்த உயர்ந்த புத்தகத்தை திரு. K. சுரேஷ் சந்தர் அவர்கள் மொழி பெயர்த்துள்ளார். அவர்களுக்கு எங்களது பாராட்டுதல்களும் நன்றியும். இந்தப் பதிப்பிற்கு வழக்கம் போல் திரு. G. இராமசுப்ரமணியன் மற்றும் திரு. E.R. இரவிக்குமாரும் பெரிதும் உதவியிருக்கிறார்கள். இவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தப் புத்தகத்தை மிக அழகாக அச்சிட்டு உதவிய சுதர்சன் கிராபிக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திரு. N. சுப்ரமணியன் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

இந்தப் புத்தகத்தை **ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் 88வது ஜெயந்தி மஹோத்ஸவத்தில்,** அவரது பொற்பாத கமலங்களில் சமர்ப்பித்து மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

**சென்னை** — **நிர்வாகிகள்**

**13.11.2005** — **ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன்**

# பொருளடக்கம்


*1. தலைசிறந்த ஜீவன்முக்தர் ........................................ 1*

*2. தெய்வீகக் குணநலன்கள் ........................................ 8*

*3. சிறந்த சீடர் ........................................ 17*

*4. இணையற்ற குருபக்தி ........................................ 30*

*5. ஜகத்குருவாகப் பட்டாபிஷேகம் ........................................ 39*

*6. ஆற்றிய அரும்பணிகள் ........................................ 45*

*7. நிகரில்லா குரு ........................................ 55*

*8. மஹா சமாதி ........................................ 66*

*9. அருள் உபதேசங்கள் ........................................ 71*







இளந்துறவி

ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

# 1

# தலைசிறந்த ஜீவன்முக்தர்

**அ**ந்த அமாவாசை தினத்து மாலை வேளையில், காரிருளானது அந்தக் குளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை விரைவாக விழுங்கத் துவங்க, அக்காட்சியானது காண்போர்க்குத் திகிலூட்டுவதாக அமைந்திருந்தது. குளத்தில் பேய்கள் வசிப்பதாக மக்கள் நம்பியதால், அங்கே செல்ல எவருமே துணிந்ததில்லை. குளத்திற்குச் சற்றுத் தொலைவில் கும்பலாக நின்று கொண்டிருந்தனர் பல சிறுவர்கள். அவர்களிடையே ஏதோ ஒரு பரபரப்பு, எதிர்பார்ப்பு! ஏற்றுக்கொள்ளப்பட்ட சவால் நிறைவேற்றப்படுமா என அவர்கள் காத்து நிற்க, திடீரென அவர்களுள் ஒரு சிறுவன் அங்கிருந்து கிளம்பி குளத்தை நோக்கி நடக்கத் துவங்கினான். மெலிந்த தோற்றம் கொண்ட அந்தப் பாலகன் மிகத் துணிவுடன் அக்குளத்திற்குச் சென்று, தன் கை கால்களை கழுவி முடித்துத் திரும்பினான். பேய்களைக் கண்டெல்லாம் பயப்படுகிற ஆள் தானல்ல என்பதைத் தெளிவாக நிரூபித்துக் காட்டிய அச்சிறுவனைக் கண்ட இதர சிறுவர்கள் அதிசயித்து நின்றனர். பேய்கள் வாழும் குளத்திற்கு தனியே சென்று திரும்ப முடியுமா எனும் சவாலை ஏற்று அதை வெற்றிகரமாக முடித்துக் காட்டிய இந்தச் சிறுவன்தான் யார்?

விளையாட்டு என்றாலே சிறுவர்களுக்கு ஆர்வம் அதிகம் தானே. அதேபோல் அச்சிறுவர்களும் அடிக்கடி பற்பல விளையாட்டுகளில் ஈடுபடுவதுண்டு. ஆயினும், அவ்வாறு அவர்கள் விளையாடும் சமயங்களில் ‘குண்டு’ எனும் பெயருடைய, விஷமம் நிறைந்த சிறுவனொருவன் அங்கு வந்து அவர்களது விளையாட்டைக் குழப்பி சிறுவர்களை அவதிக்குள்ளாக்கி விடுவது வழக்கமாகியிருந்தது. குண்டுவின் இத்தகைய செயலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என அச்சிறுவர்களுள் ஒருவனுக்குத் தோன்றியது. ஒரு நாள், வழக்கம்போல், குண்டு தனது வேலையைத் துவக்கிய போது, அவனைவிடச் சிறிய உடல் வாகினையுடைய இச்சிறுவன், சிறிதும் அஞ்சாமல், குண்டுவைப் பிடிக்க முற்பட்டான். இருவருக்குமிடையே ஒரு மல்யுத்தமே உண்டாகிவிட்டது. நிச்சயம் குண்டுதான் வெல்லப்போகிறான் எனும் எண்ணத்துடன் நடப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தனர் அனைத்து சிறுவர்களும். அனால் நடந்ததோ வேறு! சிறிது நேரத்தில் குண்டுவைக் கீழே வீழ்த்திய அச்சிறுவன், வெற்றி வீரனாக அவன் மீது அமர்ந்ததோடு, ஒரு வெற்றுத்தாளை அவனிடம் கொடுத்து ‘இனி மற்ற சிறுவர்களை தொந்தரவு செய்ய மாட்டேன்’ என அவனிடம் எழுதியும் வாங்கிவிட, சிறுவர்களிடத்தே மகிழ்ச்சி கரை புரண்டோடியது. அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சுகின்ற கோழையல்ல தான் என்பதை நிரூபித்துக் காட்டிய அந்தச் சிறுவன்தான் யாராக இருக்கக் கூடும்?

பெங்களூரில் ஆரம்பப் பள்ளி ஒன்றில் எட்டாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்த அப்பாலகன் படிப்பில் சிறந்தவனாக இருந்ததோடு, கீழ் வகுப்புகளில் படித்து வந்த பிள்ளைகளுக்கும் உதவி புரிவதுண்டு. பாலகனின் தகப்பனாரான ராமா சாஸ்திரி ஆரம்பப் பள்ளியொன்றில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்.

தமது மகன் சரியாகப் படிக்கவில்லையென்ற தவறானதொரு எண்ணம் ஒருநாள் ராமா சாஸ்திரிக்கு ஏற்பட்டுவிட, ஒரு கம்பை எடுத்து தமது பிள்ளையின்

உள்ளங்கையில் அடிக்கத் துவங்கி விட்டார். தந்தையின் இந்த நியாயமற்ற செயலைக் குறித்து ஒரு சிறு முணுமுணுப்பையும் வெளிக்காட்டாது அடிகளை வாங்கிக் கொண்ட அந்தப் பாலகன் மேற்கொண்டு அடிகளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு தனது மறு கையையும் நீட்டவே, இதைப் பார்த்துக் கொண்டிருந்த வெங்கடராமய்யர் என்ற ஒரு நபர் மிகவும் மனம் வருந்தி, விரைந்து வந்து ராமா சாஸ்திரியைத் தடுத்து நிறுத்தினார். இந்த நபர் ஒரு ஜோதிடர். ராமா சாஸ்திரியின் இல்லத்தின் ஒரு பகுதியில் வாடகைக்குக் குடியிருந்தார். அடி விழுந்த பகுதியில் எந்த அளவிற்கு காயம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்க்கும் பொருட்டு, பாலகனின் உள்ளங்கையை ஆராய முற்பட்ட அந்த ஜோதிடருக்கு அங்கே காணப்பட்ட ரேகைகள் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தன. உடனே அவர் ராமா சாஸ்திரியிடம், "நீங்கள் பெரும் அதிர்ஷ்டசாலி. இந்தப் பிள்ளை உங்களது மற்ற பிள்ளைகளிலிருந்து வேறுபட்டு விளங்குகிறான். இந்தப் பையன் எதிர்காலத்தில் பெரும் வைராக்யசாலியாகவும் தலைசிறந்த யோகியாகவும் விளங்கப்போகிறான். சிருங்கேரி ஜகத்குருவே இவனை பீடத்திற்குரிய அடுத்த வாரிசாக தேர்ந்தெடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தப் பிள்ளையை அடிக்க வேண்டாம்; ஏனெனில், எதிர்காலத்தில் நீங்களே இவன் முன் விழுந்து நமஸ்கரிக்க வேண்டியிருக்கலாம்", எனக் கூறவும் செய்தார்.

பயமின்மை, கருணை முதலான அரிய குணநலன்களுடன் திகழ்ந்து, இந்த ஜோதிடரின் கணிப்பையும் பிற்காலத்தில் மெய்யாக்கிக் காட்டிய அந்தப் பாலகன் வேறு யாருமில்லை, ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் என்று பூர்வாசிரமத் திருநாமத்துடனும் பின்னர் சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 35வது ஜகத்குருவாகவும் விளங்கிய ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த (ஆசார்யாள்) மஹாஸ்வாமிகளேதான் அப்பாலகன்!

அரிய குணநலன்களனைத்தையும் ஒருங்கே அடையப் பெற்றிருந்த ஆசார்யாள், ஸ்ரீமத் அபிநவவித்யாதீர்த்த

மஹாஸ்வாமிகள் ஒரு ஜீவன்முக்தராக விளங்கினார். ஜீவன்முக்தி என்பது 'உடலில் வாழும் சமயத்திலேயே முக்தி கைகூடப் பெறும்' ஓர் உயரிய, உன்னத நிலையாகும். இத்தகைய உயர்ந்த ஜீவன்முக்தி நிலையினைப் பற்றிக் கேள்விப்படும் வாய்ப்புமே மிகச் சிலருக்கே கிடைக்கின்றது. அவர்களிலும் மிகச் சிலரே அதைப் பற்றிச் சரிவர புரிந்து கொள்கின்றனர்.

சுயநலத்தை மனதில் கொள்ளாமல் காரியம் செய்வது என்பதே நமக்கு நினைத்துப் பார்க்க முடியாததாக இருக்கிறது. இப்படியிருக்கையில் ஒரு ஜீவன்முக்தருடைய நிலையை புரிந்து கொள்ள வேண்டுமானால் அதற்கு எப்பேற்பட்ட மனோநிலை நமக்கு வேண்டும் என்பதை சொல்லத் தேவையேயில்லை. ஜீவன்முக்தர்கள் எவ்வாறு இருப்பார்கள் என்பது குறித்து மிக அழகான சுலோகம் ஒன்றிருக்கிறது.

"வசந்த காலத்தைப் போல் மற்றவர்களுக்கு நன்மையைப் புரிந்துகொண்டு வாழும் அமைதியான, உயர்ந்த மஹாபுருஷர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். மிக பயங்கரமான இந்த ஸம்ஸாரத்தைத் தாங்கள் கடந்தவர்களாக இருந்துகொண்டு, அவர்கள் மற்றவர்களையும், எந்தவித பலனையும் கருதாமல், கடக்கச் செய்கிறார்கள்."

ஜீவன்முக்த நிலையைப் பற்றி எண்ணற்ற விளக்கங்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. இவ்வுலகில் ஒருவன் சாதிக்க வேண்டியவற்றுள் இந்த ஜீவன்முக்த நிலையைத்தான் மிகவும் உயர்ந்ததாக அவை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன. ஏனெனில், ஒரு ஜீவன்முக்தரானவர் பெரும் இன்னல்கள் வந்த போதும் கலங்காத மனத்தை உடையவராகவும், இன்பங்களுக்காக ஒரு சிறிதும் ஏங்காதவராகவும், ஆசாபாசங்கள் மற்றும் பயம், கோபம் இவற்றினின்று முற்றிலும் விடுபட்டவராகவும் திகழ்கின்றார். மேலும், அவரது குலம் தூய்மையடைகிறது. அவரது தாய் அடைய வேண்டியதை அடைந்தவராகிறார், அவர் வாழும் இந்த பூமி புனிதமானதாகிறது.

பூரணத்துவத்தை அடையப்பெற்ற ஒரு மஹானின் குணாதிசயங்களாக சாஸ்திரங்கள் எவற்றை உரைக்கின்றனவோ, அவற்றிற்கெல்லாம் தக்கதொரு எடுத்துக்காட்டாகவே ஆசார்யாளின் வாழ்க்கை அமைந்திருந்தது. பகவான் சதாசிவனில் துவங்கி, பகவத்பாத சங்கரரின் வழியாக வாழையடி வாழையாகத் தொடர்ந்து வரும் சிருங்கேரி ஜகத்குருநாதர்களின் வரிசையில் 35வது குருவாக மலர்ந்து அருள் மணம் வீசி, பக்தர்களுக்கு அருள்பாலித்தவர் ஆசார்யாள். அவரது குருநாதரும், 34வது ஜகத்குருவுமான ஸ்ரீ சந்திரசேகர பாரதி மஹாஸ்வாமிகளும் உலகப் பிரசித்தி பெற்ற ஜீவன்முக்தராவார். 'ஆசார்யாள்' எனும் சொல்லுக்கு, 'சாஸ்திரங்களின் அர்த்தத்தை நன்கு புரிந்துகொண்டு, தானும் அதன்படியே வாழ்ந்து பிறரையும் அதன்படி வாழ தூண்டுவிப்பவர்' என்று பொருள். இந்த விளக்கம் நமது ஆசார்யாள் விஷயத்தில் சரிவர பொருந்தி நிற்கிறது என்பதில் சிறிதும் ஐயம் இருக்கவியலாது.

ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளிடம் சீடராகச் சேர்ந்தது முதல், நமது ஆசார்யாள் 'ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்திரர்' எனும் ஞானியால் புனையப்பட்ட 'ஆத்ம வித்யா விலாஸம்' எனும் செய்யுள் திரட்டை வாசிப்பது வழக்கம். அதில் வரும் ஒரு சுலோகத்தின் பொருள் கீழ்க்கண்டவாறு உள்ளது.

"துறவிகளுள் தலைசிறந்தவர் தமக்குக் கிடைத்ததை விட்டுவிடவும் நினைப்பதில்லை, கிடைக்காததைப் பற்றி ஆசைப்படவும் மாட்டார். தமது அந்தரங்க ஆத்மானந்தத்திலேயே திளைத்திருப்பார்."

ஆசார்யாளுக்கு இந்த சுலோகங்கள் மிகப் பிரியமானவை. ஆசார்யாளின் மனோபாவமும் இச்சுலோகங்களின் கருத்தையே பிரதிபலித்தன என்பதைப் பின்வரும் சம்பவத்தினின்று அறிந்து கொள்ளலாம். ஆசார்யாளின் 61வது வர்தந்தி (பிறந்த நாள்) விழா சென்னையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட சமயம், அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பக்தர்கள் மற்றும் பிரமுகர்கள் பலரும் ஆசார்யாளை மிகவும் புகழ்ந்து உரை நிகழ்த்தினர்.

இறுதியில் அருளுரை நிகழ்த்திய ஆசார்யாள் குறிப்பிட்டதாவது: "ராஜசூய யாகத்தைச் செய்து முடித்த அரசனொருவன் தன்னைப் பற்றிப் பிறர் புகழ்ந்துரைப்பதைக் கேட்டாக வேண்டும் என ஒரு விதி உண்டு. நானோ ஒரு ஸந்யாஸி; அரசனல்ல. தன்னைப் பற்றிப் பிறர் புகழ்வதைக் கேட்டாக வேண்டும் எனும் நிர்பந்தம் ஒரு ஸந்யாஸிக்குக் கிடையாது; அப்படிக் கேட்பது சரியும் அல்ல. மேலும், என்னைப் பற்றிய புகழுரைகளில் எனக்குச் சிறிதும் ஆர்வமில்லை. ஆனால், என்னைப் பற்றிப் புகழ்ந்து பேசும் பலர் நிறைந்த ஒரு சபையில் தற்போது இருக்கவேண்டிய சூழ்நிலை எனக்கு உருவாகியிருக்கிறது. என்னைப் புகழ்ந்து பேசுவதால் மகிழ்ச்சியை அடையும் நீங்கள் அச்சமயத்தில் இங்கு நானும் இருந்திட வேண்டும் என்பதில் குறியாய் இருக்கிறீர்கள். என்னைப் பற்றிய புகழ்ச்சியைக் கேட்பதால் எனக்கு எந்த ஒரு லாபமும் இல்லை; அதேபோல், என்னை விமர்சித்தாலும் எனக்கு எந்த ஒரு நஷ்டமும் இல்லை. ஆகவே, இந்த கொண்டாட்டத்தைக் குறித்து நான் ஆட்சேபணை எதையும் எழுப்பவில்லை. நடைபெறும் அனைத்தையும் ஒரு சாட்சியாக இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

மற்றொரு சமயம், ஆசார்யாளுக்கு நெஞ்சு வலி ஏற்பட்ட பொழுது, வலியின் கடுமையைக் குறைப்பதற்காக அவருக்கு ஊசி மூலம் மயக்க மருந்து கொடுக்கப்பட்டது. மயக்க நிலையில் ஆசார்யாளின் மனது உழலத் துவங்கிய சமயத்தில் அவரது உதடுகள் சுலோகமொன்றை உச்சரிக்கத் துவங்கின. "எங்கும் நிறைந்த என்னை, மனதின் நல்ல மற்றும் தீய செயல்கள் தீண்டுவதேயில்லை" எனப் பொருள்படும் அச்சுலோகம், அப்பேற்பட்ட மன நிலையிலும் ஆசார்யாளிடமிருந்து வெளிப்பட்டது என்றால் ஆசார்யாளின் ப்ரம்ம ஞானம் எந்த அளவிற்கு உறுதியாகவிருந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். இப்படிப்பட்ட உத்தமமான குருவின் தரிசனம் கிடைக்கப்பெற்று, அவரிடமிருந்து தத்துவ உபதேசத்தைப் பெற்று, அதிலேயே மனத்தை நிலைநிறுத்துவோர்க்கு கிட்டிடும் நன்மை மிகப் பெரியதாகும். கிடைத்தற்கரிய இத்தகைய

குருவிடமிருந்து ஆத்ம ஞானத்தையும் ஒருவன் பெற்றால், அவன் அளவற்ற நன்மையை அடைந்தவனாகிறான்.

ஆசார்யாளின் சீடர்கள் சிலர், அவரது அளவற்ற கருணையினால் தாங்கள் தங்களது வாழ்க்கையின் லட்சியத்தை, எவ்விதத் துன்பங்களாலும் பாதிக்கப்பட வியலாதவொரு பேரின்ப நிலையை அடைந்து விட்டதாக தெரிவித்திருக்கின்றனர். அவருடைய சீடர்களின் நிலையே இத்தகையது எனும்போது அவரது உண்மை நிலையை நம்மால் கனவிலும் நினைத்துப் பார்க்க இயலுமா? ஒருக்காலும் இயலாது. ஆயினும் இத்தகைய மஹாபுருஷர், மனித வேடந்தாங்கி நிகழ்த்திக் காட்டிய அரிய பல திருவிளையாடல்களைப் பற்றி அறிந்து கொள்வதில் நாம் நம் மனதைச் சற்றே ஈடுபடுத்தினாலும், அதனால் பெரும் நன்மைகள் உண்டாகும். ஆகவே நாம் நமது கவனத்தை அதில் செலுத்துவோம்.

# 2

# தெய்வீகக் குணநலன்கள்

"**பூ**ர்வ ஜென்ம வாஸனைகள் எனும் நதியானது நல்ல மற்றும் கெட்ட வழிகளில் ஓடிக் கொண்டிருக்கிறது. புருஷப் பிரயத்தனத்தினால் அதை நல்வழியில் திருப்ப வேண்டும்."

தெய்வீகப் பிறவியெடுத்த ஸ்ரீ இராமருக்கு வஸிஷ்டர் கூறும் அறிவுரையாக யோகவாஸிஷ்டத்தில் வருகிறது இக்கூற்று. ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் விஷயத்திலோ, ஒரு பூரண அவதாரமானதால், இப்படிப்பட்ட தெய்வீகக் குணங்கள் இயற்கையிலேயே அவரிடத்தில் விளங்கின.

ஸ்ரீ ராமா சாஸ்திரி, வெங்கடலக்ஷ்மி அம்மாள் தம்பதியினருக்கு, 1917-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் தேதி (தீபாவளி நாள்) புத்திரராக அவதரித்த ஸ்ரீ ஸ்ரீனிவாசன், தமது ஆரம்பக் கல்வியை முனிசிபல் ஆரம்பப் பள்ளியில் முடித்து, பின்னர் தமது எட்டாம் வகுப்பு வரையிலான படிப்பை பெங்களூர் ஆரியவித்யாசாலையில் மேற்கொண்டார். கௌதம மஹரிஷியானவர் ஒவ்வொரு மனிதனும் வளர்த்துக் கொள்ள வேண்டியதாக எட்டுவகை ஆத்ம குணங்களைப் பற்றிக் கூறியிருக்கிறார். அனைத்து உயிர்களிடத்தும் கருணை,

பொறுமை, பொறாமையின்மை, தூய்மை, சோம்பலின்மை, மங்களம் பொருந்தியிருத்தல், உலோபமின்மை மற்றும் பற்றின்மை ஆகியவையே அந்த எட்டு ஆத்ம குணங்கள். இப்பொழுது பற்றின்மை என்ற குணத்தை மட்டும் எடுத்துக் கொள்வோம். சாதாரண ஜனங்களுக்கு இந்தக் குணம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட வேடிக்கையான கதை ஒன்றுள்ளது.

வீட்டைத் துறந்து ஸந்யாஸியாக வேண்டும் என்று ஒருவன் நினைத்து, அதற்கான நல்ல நேரத்தை யோசித்துக் கொண்டிருந்தான். “வீட்டிற்குள் நுழைவதற்கு நடத்தப்படும் ‘கிரஹப் பிரவேசம்’ என்னும் நிகழ்ச்சிக்குத்தான் மங்களகரமான நேரத்தைப் பார்ப்பார்கள்; வீட்டைத் துறந்து வெளியில் செல்வதற்கு நேரம், காலம் பார்க்க வேண்டாம்” என்ற முடிவுக்கு வந்தான் அவன். உடனே வீட்டை விட்டு வெளியில் கிளம்பி விட்டான். அப்பொழுது அவனது பேரக்குழந்தை, “தாத்தா, தாத்தா, எங்கே போகிறாய்?” என்று அழ ஆரம்பித்து விட்டது. உடனே இவன், “இல்லை, இல்லை! உன்னைவிட்டு நான் எப்பொழுதும் பிரிந்து போகமாட்டேன்” என்று மிகவும் பாசத்துடன் அக் குழந்தையை அணைத்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பி விட்டான். இது வைராக்கியம் ஆகுமா?ஆகவே ஆகாது.

வாழ்க்கையின் எப்படிப்பட்ட கஷ்டமான தருணங்களிலும், பருவங்களிலும் கடைப்பிடிக்கும் நல்ல குணங்கள்தான் போற்றத் தகுந்தவையாகும். ஆசார்யாளிடம் ஆத்ம குணங்கள் அனைத்தும் நன்கு விளங்கின என்பதை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகள் பல அவருடைய வாழ்க்கையில் நடந்துள்ளன.

பிறருக்கு எந்த ஒரு விதத்திலும் இடரிழைக்க ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் விரும்பியதே இல்லை. மனிதரோ, மிருகமோ அது யாராக இருந்தாலும் துன்புற்றுத் தவித்தால் அதைக் கண்டு ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் மனம் உடனடியாக உருகிவிடும். அத்துடன் நிற்காமல் அத்துன்பத்தை நீக்குவதற்குத் தம்மால் ஏதேனும் செய்ய இயலுமா என்று யோசித்து, அதை நிறைவேற்றுவதற்கும் உடனே

முனைவார். ஒருமுறை ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் நண்பன் தனது பள்ளிப் பரீட்சையை சரியான முறையில் செய்யவில்லை. இதைக் கண்டு அவனது தந்தைக்குக் கோபம் வந்துவிட்டது. அவனை தண்டிக்க வேண்டும் என்று முடிவு செய்த அவர் அந்தப் பையனைக் குனியவைத்து அவன் முதுகில் ஒரு பெரிய கல்லை வைத்து விட்டார். அந்தச் சிறுவனுக்கு தண்டனை அவசியம்தான். ஆனாலும் இப்படிப்பட்ட அளவுக்கு ஒரு தண்டனையைக் கொடுத்தது நியாயமில்லை. அது தேவையில்லைதானே. அந்தக் கல்லின் பாரத்தைத் தாங்க முடியாமல் அந்தச் சிறுவன் அழ ஆரம்பித்துவிட்டான். இவனது அழுகுரலைக் கேட்ட ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் அங்கு உடனே வந்தார். சிறுவனின் நிலையைக் கண்டு அவரது மனம் பரிதவித்துப் போய்விட்டது. அவர் அச்சிறுவனின் தந்தையை நோக்கி, “தாங்கள் என்னைவிட வயதிலும் அறிவிலும் முதிர்ந்தவர். உங்களது மகன் வலியால் துடிக்கிறான். பாவம், அவன் சிறிதுநேரம் ஓய்வெடுத்துக் கொள்ளட்டும். அதுவரை அந்தக் கல்லை என் முதுகில் வையுங்கள். நான் சுமக்கிறேன்” என்று கூறினார். இதைக் கேட்ட அந்த மனிதர் மிகவும் நெகிழ்ந்து போய் விட்டார். உடனடியாக பையனை தண்டனையிலிருந்து விடுவித்துவிட்டார். ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் கருணை எந்த அளவிற்கு இருந்தது என்றால், மற்றவர்களுக்காக தாம் கஷ்டப்படவும் தயாராக இருந்தார். அது மட்டுமல்லாமல் வயதில் தன்னைவிட மூத்தவர் ஒருவரிடம் எப்படி மரியாதையாகப் பேசுவது என்றதொரு விஷயம் அவருக்குத் தெரிந்திருந்ததையும் இந்நிகழ்ச்சி காட்டுகிறது.

அந்த சிறு வயதிலும் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனுக்கு மிகுந்த பொறுப்புணர்ச்சி இருந்தது. அவரது வயதை ஒத்த மற்ற சிறுவர்கள் வேறு எதைப்பற்றியுமே கவலைப்படாமல் விளையாட்டில் ஈடுபட்டிருந்த போதிலும் அவர் தமது இல்லத்திலேயே இருந்து தமது அன்னையாருக்கு எத்தனையோ விதங்களில் உதவி செய்வதுண்டு. அன்னையாருக்குப் பாத்திரங்களைக் கழுவிக் கொடுப்பது, வீட்டைக் கூட்டுவது, கைக்குழந்தையான தமது தம்பி தொட்டிலில் இருக்கும்போது அவனைப் பார்த்துக் கொள்வது

போன்ற பற்பல விஷயங்களில் அவர் தமது தாய்க்கு உதவினார். இதுபற்றிக் குறிப்பிடுகையில் ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் ஒரு முறை கூறியதாவது: "தாயார் சமையலறையில் வேலையாக இருக்கிறார்கள். அவருக்கு எனது மூத்த சகோதரி உதவி செய்து கொண்டிருக்கிறார். இந்நிலையில் இந்தக் குழந்தையை யார் பார்த்துக் கொள்வது? நானும் அதைச் செய்யவில்லை என்றால் தாயாருக்குத்தானே கூடுதல் சிரமம்."

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் பொறுமையே வடிவானவர். ஒருமுறை அவரது நண்பர்கள் அவரது பொறுமையைச் சோதித்துப் பார்க்க விரும்பினார்கள். இந்நிலையில் ஒருநாள் அனைவரும் விளையாடிக் கொண்டிருக்கும்போது, அவர்கள் ஒரு கம்பை எடுத்து வந்து, ஸ்ரீ ஸ்ரீனிவாஸனை தாறுமாறாக அடிக்கத் தொடங்கினார்கள். அத்தனை அடிகளையும், எந்தவித எதிர்ப்புமில்லாமல் ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் தாங்கிக் கொண்டார். கடைசியில் அடிப்பதை நிறுத்திய சிறுவர்கள் அந்த அடியால் அவருக்கு ஏற்பட்ட காயத்தைப் பார்த்து மனம் அதிர்ந்து போய் விட்டார்கள். ஆனாலும் தமது துன்பத்தை வெளிக்காட்டாது ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் அவர்களுக்கு ஒரு கதையைச் சொல்ல ஆரம்பித்தார். "ஒருமுறை அரசன் ஒருவன் ஒரு புத்த துறவியை படாதபாடு படுத்தினான். அவர் அனைத்தையும் பொறுமையாகவே சகித்துக் கொண்டு வந்தார். இறுதியில் இதைப் பார்த்த அரசனுக்கு மனது மாறிவிட்டது. தனது தவறை எண்ணி வெட்கப்பட்டான். தான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக அந்தத் துறவிக்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றனவோ அத்தனையையும் பூர்த்தி செய்து கொடுத்துவிட்டான். இம்மாதிரியாகத் தனக்குத் துன்பம் இழைக்கப்படும் போது அதை எதிர்த்து எதையும் செய்யாமல் அமைதி காத்ததினால் அந்தத் துறவி அரசனையே மனம் மாறச் செய்துவிட்டார்." இந்தக் கதையை ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் சொன்ன பொழுது அதைக் கேட்ட அனைத்து சிறுவர்களும் வெட்கத்தால் தலைக் குனிந்து, ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்டவர்களாக தங்களது இல்லங்களுக்குத் திரும்பினர்.

ஒரு முறை ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் புகைவண்டியில் ஒரு புத்தகத்தை வைத்துப் படித்தவாறே பயணித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் சென்றவுடன் அவருக்குத் தூக்கம் வந்துவிட்டது. சற்றே கண்ணயர்ந்தவுடன் அவர் கையிலிருந்த அந்தப் புத்தகம் கீழே விழுந்தது. அவரது அருகில் அமர்ந்திருந்த ஒரு மனிதர் அது என்ன புத்தகம் என்று பார்க்க வேண்டுமென்ற ஆர்வத்தில் அதை எடுத்துப் பக்கம் பக்கமாகப் புரட்டத் துவங்கினார். சிறிது நேரத்தில் ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் விழித்துப் பார்க்கையில் புத்தகத்தைக் காணாமல் அது எங்கே எனச் சுற்றுமுற்றும் பார்க்கத் துவங்கினார். அந்த மனிதரின் கையிலிருந்த புத்தகம் அவரது கவனத்தை ஈர்த்தது. மென்மையான குரலில் அவர் அந்த மனிதரிடம், "நான் வாசித்துக் கொண்டிருந்த புத்தகம்தானே இது?" என்று கேட்டார். அந்த மனிதரும் 'ஆமாம்' என்று பதிலளித்து அந்தப் புத்தகத்தை ஸ்ரீ ஸ்ரீனிவாஸனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார். அதன் பிறகு ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் அந்த மனிதரை நோக்கி, மென்மையான குரலில், அந்த மனிதரின் உணர்வுகள் பாதிக்கப்படாவண்ணம், "எனக்குச் சொந்தமான புத்தகத்தை தாங்கள் என்னிடம் தெரிவிக்காமல் எடுத்தது அவ்வளவு சரியல்ல அல்லவா?" என்று வினவினார். ஏதோ கோபத்தால் அவர் இந்த வார்த்தைகளைப் பேசவில்லை. நேர்மையாக இருப்பதில் அவருக்கு இருந்த நம்பிக்கையே அவரை இம்மாதிரியாகப் பேசச் செய்தது.

மற்றொரு நாள் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனும் அவரது நண்பர்களும் ஓர் இல்லத்தில் உணவை உட்கொண்டிருந்த சமயம், ஒரு குறிப்பிட்ட பதார்த்தத்தில் அதிக அளவில் மிளகாய்கள் சேர்க்கப்பட்டதால் அவர்களுக்கு உறைக்கத் துவங்கி விட்டது. உடனே அந்த நண்பர்கள் தண்ணீர் வேண்டும், வெல்லம் வேண்டும் என்றெல்லாம் கூக்குரலிடத் தொடங்கி விட்டனர். ஸ்ரீ ஸ்ரீனிவாஸனோ எந்தவித உணர்ச்சிகளையும் வெளிக் காட்டாது அமைதியாக அமர்ந்திருந்தார். பிறகு அவர் தமது மற்ற நண்பர்களைப் பார்த்து, "இப்படி வெல்லம் வேண்டும் என்றெல்லாம் கூக்குரலிடுவது தேவைதானா?" என்று கேட்க, நண்பர்களுக்கோ கோபம் தாங்கவில்லை. 'என்ன இது! நாமோ

நாக்கு எரிந்து கொண்டிருக்கிற நிலையில் அதைத் தணிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். இவன் என்னடாவென்றால் எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போன்று பேசிக் கொண்டிருக்கிறானே' என்று அவர்களுக்குத் தோன்றி விட்டது. உடனே அவர்கள் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனை நோக்கி, "இப்படிப் பேசுகிறாயே, ஒரு கை நிறைய மிளகாய்களை உன்னிடம் கொடுத்தால் ஒரு சிறு எதிர்ப்போ, முணுமுணுப்போ இல்லாமல் அவை அனைத்தையும் உன்னால் சாப்பிட முடியுமா?" என்று கேட்டார்கள். "முடியும்" என்று ஸ்ரீ ஸ்ரீனிவாஸனும் பதிலளித்தார். உடனடியாக ஒரு பையன் சென்று கை நிறைய மிளகாய்களை அள்ளிக்கொண்டு வந்தான். அந்த வீட்டிலிருந்த பெரியோர்கள் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனை மிளகாய்களைச் சாப்பிட வேண்டாம் என்று சொல்லித் தடுப்பதற்கு முயன்றும் ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் அவற்றைக் கண்டு கொள்ளாமல் தான் கூறியபடியே மிளகாய்களை ஒன்றன்பின் ஒன்றாகச் சாப்பிடத் துவங்கிவிட்டார். அனைத்து மிளகாய்களும் சாப்பிடப்பட்டு விட்டன. ஆயினும் எந்த ஒரு பாதிப்பும் அவரது முகத்தில் தெரியவே இல்லை. எப்பொழுதும் போல புன்னகை பூத்த வண்ணமே அவரது முகம் இருந்தது. மற்ற பிள்ளைகளெல்லாம் அதைப் பார்த்துத் திகைத்து விட்டனர். பிறகு அவர்களைப் பார்த்து ஸ்ரீ ஸ்ரீனிவாஸன், "இந்த மாதிரி காரத்தை இந்த அளவிற்குச் சாப்பிட வேண்டும் என்பது ஒன்றும் அவசியமில்லை. என்னால் சாப்பிட முடியுமா என்று நீங்கள் கேட்டீர்கள். அதனால் நான் சாப்பிட்டுக் காண்பித்தேன். அது எதற்காக என்றால், என்ன சாப்பிடக் கிடைக்கிறதோ அதை வைத்துக் கொண்டேகூட ஒருவன் திருப்தியடைய முடியும் என்பதைக் காட்டுவதற்காகத்தான் நான் இதைச் செய்தேன்" என்று கூறினார். எந்த ஒரு விஷயத்திலும் பற்றுதல் இல்லாதவராகவே அவர் திகழ்ந்தார் என்பதையே இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

எட்டுவித ஆத்ம குணங்கள் மட்டுமில்லாமல் மேலும் பற்பல அரிய குணங்களும் ஆசார்யாளிடம் குடி கொண்டிருந்தன. அவற்றுள் ஒன்று 'அஹிம்சை'. மற்றொன்று 'தீவிரமான இறை பக்தி'. பின்வரும் உரையாடல்களே இவற்றிற்கு சான்றாக விளங்குகின்றன.

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் : விலங்குகளை வேட்டையாடுவது தவறான தொரு செயலாகும்.

நண்பன் : மாமிச பட்சிணிகள் அவற்றைவிட வலுவில் குறைந்த மிருகங்களை அடித்துச் சாப்பிடுகின்றன. அதனால் அவற்றை வேட்டையாடுவதில் என்ன தவறு?

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் : சில மிருகங்களை மற்ற சில மிருகங்களுக்கு உணவாகக் கடவுளே படைத்திருக்கிறார். அதன்படிதான் அனைத்தும் நடக்கின்றன. இதனால் மனிதன் இயற்கையின் நியதிகளில் தனது மூக்கை நுழைத்து விலங்குகளை வேட்டையாடுவது என்பதை மேற்கொள்ளக் கூடாது.

ஸ்ரீ ஸ்ரீனிவாஸனும் அவரது நண்பர்களும் அன்றாட விளையாட்டுக்கள் முடிந்தவுடன் ஓரிடத்தில் அமர்ந்து ஒருவருக்கொருவர் நீதிக்கதைகளைப் பரிமாறிக் கொள்வது வழக்கம். ஒவ்வொரு கதையும் முடிந்தவுடன் கதையைக் கூறுபவர் ஒரு நீதியைச் சொல்வதுண்டு. இந்த மாதிரி சமயங்களில் புராணங்களில் காட்டப்பட்டிருக்கும் பற்பல கதைகளை மிகத் தெளிவாக அழகாகக் கூறுவது ஸ்ரீ ஸ்ரீனிவாஸனுக்குக் கைவந்த கலை. இதேபோல் ஒரு நாள் மாலை நண்பர்கள் அனைவரும் ஓரிடத்தில் அமர்ந்து கேள்வி - பதில் நிகழ்ச்சி ஒன்று நடத்திக் கொண்டிருந்தனர். அதன் ஓர் அங்கமாகப் பின்வரும் உரையாடல் நடைபெற்றது.

நண்பன் : நீ வயதான பிறகு என்ன செய்வதாக உத்தேசித்துள்ளாய்?

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் : நான் கடவுளைப் பார்ப்பதற்கு முயற்சி செய்வேன்.

நண்பன் : எதற்காக எப்பொழுதும் இதையே சொல்லிக் கொண்டிருக்கிறாய்?

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் : ஏனெனில் அதுதான் நமக்கு நல்லது.

நண்பன் : கடவுள் இருக்கிறார் என்று உனக்கு எப்படித் தெரியும்? நீ கடவுளைப் பார்த்திருக்கிறாயா அல்லது கடவுளைப் பார்த்த யாரையாவது நீ சந்தித்திருக்கிறாயா?

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் : கடவுள் இல்லை என்று உன்னால் நிரூபிக்க முடியுமா? ஒரு பொருள் பார்க்கப்படவில்லை என்பதால் மட்டுமே அது இல்லவே இல்லை என்று தீர்மானித்துவிட முடியுமா? உதாரணமாக நீ பம்பாய் நகரத்தைப் பார்த்திருக்கிறாயா?பார்க்கவில்லை என்றால் 'பம்பாய் என்று ஒன்று இல்லவே இல்லை' என்று ஆகிவிடுமா?

நண்பன் : நான் பம்பாயைப் பார்த்ததில்லை. ஆனால் பம்பாயைப் பார்த்த பலரை நான் பார்த்திருக்கிறேன். அதனால் பம்பாய் என்ற ஒன்று இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் : மிக நல்லது. அதேபோலத்தான் நம்முடைய முன்னோர்களும் முனிவர்களும் கடவுளைப் பார்த்து அந்த அனுபவத்தைப் பற்றிய மிகத் தெளிவான விளக்கங்களை நமக்கு அளித்திருக்கிறார்கள். அவர்களுடைய வார்த்தைகளை நம்புவதால் என்ன தவறு வந்து விடப்போகிறது? அவர்களுக்கு உண்டான அனுபவங்களை நாம் மறுத்துவிட முடியாதே. ஆகையால், கடவுள் இருக்கிறார் என்று இதன் மூலமாக நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இம்மாதிரியாக அந்த சிறு வயதிலேயே தாம் கடவுளின் மீது அசையாத பக்தி கொண்டிருந்ததோடு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் அதேபோல் பக்தி ஏற்படுவதற்கு ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் ஒரு துண்டுகோலாக இருந்தார்.

நாளைடைவில் ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் தமது நண்பர்களிடம் ‘இந்த உலகத்தைத் துறக்க வேண்டும் என்பதே என்னுடைய ஆசை’ என்று அடிக்கடி கூறத் தொடங்கினார். முதலில் அவரது நண்பர்கள் அவர் சொல்லுவதை எல்லாம் ஏதோ வேடிக்கையாகப் பேசுகிறார் என்று எண்ணி அதனைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால் விரைவிலேயே அவர் அந்த விஷயத்தில் மிகவும் உறுதியாக இருக்கிறார் என்பதை அவர்கள் தெளிவுற உணர்ந்து கொண்டார்கள். ஒரு சமயம் நண்பன் ஒருவன் அவரிடம், “ஒரு ஸந்யாசியாவதில் என்ன பயன் இருக்கிறது? ஒரு ராஜாவாக ஆனாலோ ஒரு பெரிய அந்தஸ்து நமக்கு வந்துவிடுகிறது அல்லவா?” என்று கேட்டான். இதற்கு ஸ்ரீ ஸ்ரீனிவாஸன், “அப்படி நினைக்காதே. அது தவறு. ஒரு ராஜாவாக ஆவதில் நிரந்தரமான பயன் என்ன இருக்கிறது? ஒரு மன்னன் எத்தனை நாள் தனது சுகத்தை அனுபவிக்க முடியும்? எத்தனை நாட்கள் அவர் அந்தப் பதவியில் இருக்கிறாரோ அத்தனை நாட்கள்தானே. என்றாவது ஒருநாள் அதற்கு ஒரு முடிவு வந்துவிடுமே. ஆனால் நான் ஒரு ஸந்யாஸியானாலோ தொடர்ந்து இறைவனை தியானம் செய்து அதன் மூலமாக எவ்விதக் கவலையுமின்றி சந்தோஷமாக இருக்க முடியுமே. இது மட்டுமில்லாமல் இவ்வாறு இருப்பதால் கடவுளை தரிசனம் செய்வதற்குக்கூட ஒரு வாய்ப்புக் கிட்டுமே. அதன் விளைவாக எப்பொழுதும் கடவுளால் நாம் பாதுகாக்கப்படும் ஒரு நல்ல சந்தர்ப்பம் எனக்கு ஏற்படுமே” என்று பதிலளித்தார். இந்த நிகழ்ச்சியைப் படிக்கும்போது நமக்கெல்லாம் யமனையே நேரில் சென்று சந்தித்த நசிகேதஸ் எனும் சிறுவனின் கதை ஞாபகத்திற்கு வருகிறதல்லவா?

# 3

# சிறந்த சீடர்

**ரா**மா சாஸ்திரியின் குடும்பத்தை வறுமை மிகவும் வாட்டியது. ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் தாயாருக்குக் குடும்பத்தைச் சரிவர நிர்வகிப்பதில் மிகவும் சிரமம் ஏற்பட்டது. இதைக் கண்டு மனம் வருந்திய ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் தனது தாயாரிடம், "எனது உபநயனத்தை நடத்தி விடுங்களேன். அதன் பிறகு நான் சென்று எனக்கு பிக்ஷையாக எது கிடைக்கிறதோ அதைக் கொண்டு வருகிறேன். அதை வைத்துக்கொண்டு உங்களது உணவுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாமே" என்று மிகக் கருணையுடன் ஆலோசனை தெரிவித்தார். அவரது தாயார் இதைக் கேட்டு மிகவும் மனம் நெகிழ்ந்தார். உபநயனத்தை நடத்த முடியுமா என்பது அவருக்கு ஒரு பெரிய கேள்விக்குறியாகவே இருந்தது. ஆயினும் இறைவனின் திருவுள்ளம் மற்றொரு வகையில் இதற்கு ஒரு வழி வகுத்தது.

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் அப்போதைய குருநாதராக இருந்த ஸ்ரீ சந்திரசேகர பாரதி மஹாஸ்வாமிகள் (பரமாசார்யாள்) தமது நேரத்தை மேலும் தவத்திலேயே கழிப்பதற்கு விரும்பினார்கள். ஆகையால் அச்சமயத்தில் மடத்திற்கு தமது

வாரிசாக ஒருவரை நியமித்து மடத்து நிர்வாகப் பொறுப்புக்களை அவரிடம் கொடுத்துவிட வேண்டிய அவசியம் இருப்பதாகவும் கருதினார்கள். தமது உள்ளக்கிடக்கை மடத்து நிர்வாக அதிகாரியாக இருந்த ஸ்ரீகண்ட சாஸ்திரியிடம் ஜகத்குருநாதர் தெரிவிக்கவே, அவரும், இயல்பாகவே ஸந்யாஸம் வாங்கிக் கொள்ள வேண்டும் எனும் ஆர்வமுடைய பாலகர்களின் விவரங்களைத் தேடுவதற்கு முனைந்தார். இந்த ரீதியில் ஸ்ரீகண்ட சாஸ்திரி பல்வேறு ஜோதிடர்களைக் கலந்து ஆலோசித்தார். அவர்களுள் வெங்கடராம சாஸ்திரியும் ஒருவர். ஸ்ரீகண்ட சாஸ்திரியின் விருப்பத்தை அறிந்த வெங்கடராம சாஸ்திரி ஸ்ரீகண்ட சாஸ்திரியிடம் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் ஜாதகத்தை உடனடியாக ஒப்புவித்தார். ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் உபநயனம் இன்னும் நடத்தப்படவில்லை என்பதைக் கேட்டறிந்த ஸ்ரீகண்ட சாஸ்திரி அதை சிருங்கேரியிலேயே வைத்து நடத்தி விடுவதாக முடிவெடுத்து, அதன் செலவுகளையும் மடமே ஏற்றுக் கொள்ளலாமென்றும் தீர்மானித்தார். இது உண்மையிலேயே இறைவனால் செய்யப்பட்ட ஓர் ஏற்பாடாகவே ராமா சாஸ்திரிகள் குடும்பத்தாருக்குத் தோன்றியது. பின்னர் ராமா சாஸ்திரிகளும் அவரது குடும்பத்தினரும் பெங்களூரிலிருந்து கிளம்பி சங்கரஜெயந்தி உற்சவம் நடந்து கொண்டிருக்கும் சமயம் சிருங்கேரியை அடைந்தனர். சிருங்கேரியில் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் உபநயனம் 1930ம் வருடம் மே மாதம் 4ம் தேதியன்று நடைபெறுவதாக முடிவாகியது. உபநயனம் சாரதாம்பாள் கோவிலில் வைத்து நடைபெற்ற சமயம், ப்ரஹ்மோபதேசம் நடந்த அதே சமயத்தில் அம்பாளின் ஆலய மணியும் ஒலிக்க அதை மிக நல்ல சகுனமாக அனைவரும் கருதினர்.

உபநயன சடங்குகள் அனைத்தும் முடிந்தவுடன் ராமா சாஸ்திரியும் அவரது குடும்பத்தினரும், பரமாசார்யாளை தரிசிப்பதற்காக நரஸிம்மவனத்திற்குச் சென்றனர். நரஸிம்மவனம் என்பது துங்காநதியின் தென்புறம் உள்ள ஒரு புனிதமான இடம். இங்குதான் சிருங்கேரி ஜகத்குருக்கள் தங்கும் ஆசிரமம் உள்ளது. தாய் தந்தையருடன் அங்கு சென்ற ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் மேல்

ஜகத்குருநாதரின் கருணாகடாக்ஷம் விழுந்தது. அப்பொழுது குருநாதருக்கும், அந்த அற்புதமான சீடருக்குமிடையே ஒரு தெய்வீக நாடகமொன்று நடைபெறத் துவங்கியது. ஆனால் இதன் ஸாராம்சத்தை மற்றவர்கள் அறிந்திருக்கவில்லை.

பரமாசார்யாள் : நீ இப்பொழுது உபநயனம் முடிந்து பிரஹ்மச்சாரியாகி விட்டாய். ஆகையால் நீ இல்லம் திரும்பி பிரஹ்மச்சாரிக்கான கடமைகளைச் செய்ய வேண்டியது அவசியம் அல்லவா?

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் : இல்லை. எனக்கு இங்கேயே தங்கிவிடத்தான் விருப்பம்.

பரமாசார்யாள் : நீ ஆங்கிலப் படிப்புக்களைப் படித்து ஒரு நல்ல வேலையை அடைந்து சம்பாதிக்க வேண்டாமா? ஆகையால் நீ ஊருக்குப் போக வேண்டியது அவசியம்தான் இல்லையா?

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் : மேற்படிப்பையோ அல்லது ஓர் உத்யோகத்தையோ நான் விரும்பவில்லை. இங்கேயே தங்கி சம்ஸ்க்ருதம் படிப்பதற்குத் தான் எனக்கு விருப்பம் உள்ளது.

ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் இந்தப் பதிலைக் கேட்டு பரமாசார்யாள் நிச்சயமாக மிகவும் சந்தோஷப்பட்டிருப்பார் என்றாலும் அவர் தமது மகிழ்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. மேற்கொண்டு தொடர்ந்து பற்பல கேள்விகளை ஸ்ரீ ஸ்ரீனிவாஸனிடம் பரமாசார்யாள் கேட்டார். அவை ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் பள்ளிப் படிப்புகளான நளசரித்திரம், வரலாறு, பூகோளம் ஆகியவற்றிலேயே இருந்தன. பரமாசார்யாள் கேட்கும் அத்தனை கேள்விகளுக்கும் உடனடியாக மிகச் சரியான பதிலை ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் தருவதைக் கண்டு ராமா சாஸ்திரிக்கு திகைப்பு தாங்கவில்லை. குருவுக்கும் சிஷ்யருக்கும் உரையாடல் தொடர்ந்தது.

பரமாசார்யாள் : உனக்கு பற்பல நீதிகளைச் சொல்லிக் கொடுத்திருப்பார்களே. மிகவும் முக்கியமான நீதி என்று நீ நினைக்கும் ஒன்றை சொல்லு பார்ப்போம்.

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் : நல்ல நண்பர்களை நாடி, தீய நண்பர்களை தவிர்க்க வேண்டும்.

இந்தப் பதில் பரமாசார்யாளை மிகவும் சந்தோஷப் படுத்தியது. பிறகு பரமாசார்யாள், "நீ இங்கேயே தங்கிப் படிக்கிறாயா?" என்று கேட்டார். ஒரு கணமும் தாமதியாமல் ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் அதற்கு தன் சம்மதத்தைத் தெரிவித்தார். அடுத்த நிமிடம் தமது பெற்றோர்களைப் பார்த்து அவர், "நீங்கள் இல்லம் திரும்புங்கள். நான் இங்கேயே தங்கி படிக்கப்போகிறேன்" என்று கூறினார். பெற்றோரும் தங்கள் ஆசை மகனை பரமாசார்யாளின் அன்பான கவனிப்பில் விட்டுவிட்டு பெங்களூர் திரும்பினார்கள்.

அதிகாலை 4.30 மணிக்கு எழுந்திருக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார் ஸ்ரீ ஸ்ரீனிவாஸன். அதன் பிறகு குளித்து தமது நித்ய கர்மங்களை மிகக் கவனத்துடன் செய்து முடிப்பார். உப்புமா அல்லது அவல் மற்றும் பால் ஆகியவை அடங்கிய ஓர் எளிய சிற்றுண்டிக்குப் பிறகு மீண்டும் படிக்கத் துவங்கி விடுவார். மதிய வேளைகளில் அவரது கர்மாக்களை முடித்த பிறகு நரஸிம்ம வனத்திலேயே அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உணவை உட்கொள்வார். மதிய நேரங்களில் தூங்கும் பழக்கம் அவருக்கு இல்லை. அப்பொழுதும் அவர் படித்துக்கொண்டுதான் இருப்பார். இரவு அவர் படுக்கச் செல்லும்போது மணி 10.30 ஆகியிருக்கும்.

1958ம் வருடம் மதுரையில் ஒரு சமயம் ஆசார்யாள் உபந்யாஸம் செய்த பொழுது சீடனுக்கு உரிய தகுதிகளாகச் சிலவற்றைக் குறிப்பிட்டார். அவை பின்வருமாறு: "நல்ல மனதுள்ளவன், மஹான்களுக்குச் சேவை செய்பவன், சரியான நடத்தை உள்ளவன், தத்துவத்தை அறிய ஆர்வம் உள்ளவன், குருவின் சேவையையே கருத்தில் கொண்டிருப்பவன்,

அகந்தையற்றவன், நமஸ்கரிப்பதற்கு ஆர்வமுடன் இருப்பவன், கேள்விகளை வினவ தக்க தருணத்தை எதிர்நோக்குபவன், மனவடக்கம் பொருந்தியவன், புலனடக்கம் வாய்க்கப் பெற்றவன், பகைமை அற்றவன், குருவிடம் சரணடைந்தவன், சாஸ்திரத்தில் நம்பிக்கை கொண்டிருப்பவன், செய்நன்றி உடையவன் மற்றும் வைக்கப்பட்ட பரீக்ஷைகளில் தேர்ச்சியடைந்தவனுமான சீடனுக்கு உயர்ந்த தத்துவம் கற்றுத்தரப்பட வேண்டும்.''

மேற்கண்ட அத்தனை குணங்களும் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனிடம் அபரிதமாக மிக அற்புதமாகப் பொருந்தியிருந்தன. பாடசாலையில் படிக்கும் வித்யார்த்திகளின் முன்னேற்றத்தைப் பரமாசார்யாள் அடிக்கடி பரிசோதனை செய்வது வழக்கம். அச்சமயங்களிலெல்லாம், இலக்கியங்களிலாகட்டும் அல்லது சாதாரண பாடங்களாகட்டும், மற்ற வித்யார்த்திகளைவிட ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் அனைத்து படிப்புகளிலும் சிறந்து விளங்குவதை அவர் கவனித்தார். இது மட்டுமல்லாது ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் மிகப் பொருத்தமான முறையில் பதில் அளிப்பதற்காகவே சில தருணங்களையும் உருவாக்கினார். இதற்கு உதாரணமாக பின்வரும் நிகழ்ச்சியைக் கூறலாம். ஒரு சமயம் பரமாசார்யாள் சுலோகம் ஒன்றை இயற்றினார். அதன் அர்த்தமாவது ''ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ரூபமாக அவதரித்த ஸ்ரீ பரமேஸ்வரன் தம்முடைய மௌனம், சின்முத்திரை ஆகியவற்றின் மூலமாக, ஆத்மா என்பது இரண்டற்றது; அறிவு வடிவானது; மற்றும் எங்கும் நிறைந்தது என்பதைச் சுட்டிக் காட்டினார். இதையேதான் அவரது கரங்களிலுள்ள புத்தகம், பாம்பு மற்றும் நெருப்பு முதலியவை விளக்கி நிற்கின்றன'' என்பதாகும்.

மடத்தைச் சேர்ந்த பண்டிதர்கள் இதற்கு வழக்கமான அர்த்தத்தையே கொடுத்தனர். அதில் ஒருவர், புத்தகம் என்பது அத்வைதத்தைக் குறிக்கிறது; பாம்பானது அறிவையும், நெருப்பானது எங்கும் பரவிய தன்மையையும் குறித்து நிற்கின்றன என்று உறுதிபடக் கூறினார். புத்தகத்தின் பக்கங்கள் வெவ்வேறாக இருந்தாலும், அவை அனைத்துமே ஒன்றாகச் சேர்ந்து தனியொரு

புத்தகமாகக் காட்சியளிப்பதன் மூலமாக, பல்வேறு காட்சிகளுக்கு இடையே இருப்பது ஒன்றே என்ற அத்வைதக் கோட்பாடு விளக்கப்படுகிறது. பாம்பின் உதாரணமும் அனைவரும் அறிந்ததே. அதாவது தவறான அறிவு மறையும்போது சரியான அறிவு தோன்றுகிறது என்பதைக் காட்டும் 'கயிற்றில் பாம்பு' என்ற அனைவருக்கும் நன்கு தெரிந்த உதாரணத்தைக் காண்பிப்பதற்காகவே ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் கையில் பாம்பு இருப்பதாக அந்தப் பண்டிதர் கூறினார். நெருப்பு என்பது இயற்கையாகவே, எங்கும் நிறைந்த தன்மையைக் குறித்து நிற்கிறது. எப்படி உலகமனைத்தும் நெருப்பின் உஷ்ணத்தால் நிறைக்கப்பட்டு இருக்கின்றதோ அதேபோல் ஆத்மாவும் எங்கிலும் நிறைந்திருக்கிறது என்பதைக் குறிப்பதற்காகவே நெருப்பு காட்டப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான விளக்கங்கள் தரப்பட்டபோது பரமாசார்யாளுக்கு இவை அவ்வளவு திருப்திகரமாகத் தெரியவில்லை. ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் தமது விளக்கத்தைக் கொடுத்தார். அவரது விளக்கத்தின்படி புத்தகம் என்பது சாஸ்திரத்தையும், பாம்பு என்பது யுக்தியையும் (ஆராய்ந்து பார்த்தல்), நெருப்பு என்பது அனுபவத்தையும் குறித்து நிற்கின்றன என்று சொன்னார். அது பரமாசார்யாளை வெகுவாகக் கவர்ந்தது.

பொதுவாகவே, பரமாசார்யாள் பல சமயங்களில் வித்யார்த்திகளின் நலம் சரியாகப் பேணப்படுகிறதா என்பதை அறிந்து கொள்ளும் வண்ணம் அவர்களிடம், "இன்று உணவு திருப்திகரமாக இருந்ததா? இன்று என்னென்ன உணவுகள் பரிமாறப்பட்டன? அவையனைத்தும் ருசியாக இருந்தனவா? உப்பு அதிகமா? அல்லது காரம் அதிகமா?" என்பது போன்ற பல கேள்விகளைக் கேட்பது வழக்கம். வித்யார்த்திகளனைவரும் அவரவர்க்குத் தோன்றிய விடைகளை அளிப்பார்கள். ஆனால் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனோ இம்மாதிரியான தருணங்களில் அமைதி காத்து விடுவார். எந்த ஒரு பதிலையும் தருவதில்லை. இதைக் கவனித்து வந்த பரமாசார்யாள் ஒருநாள் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனிடம், "எல்லாருமே என்னுடைய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் நீ மட்டும் ஏன் பதிலளிக்கவே மாட்டேனென்கிறாய்?" என்று கேட்டார். ஸ்ரீ

ஸ்ரீநிவாஸன், "இங்கு எங்களுக்கு என்னென்ன கிடைக்கிறதோ அவை அனைத்தும் ஆசார்யாளின் பிரசாதம். ஆகையால் அவை என்றுமே ருசிகரமாகத்தான் இருக்கின்றன" என்று பதிலளித்தார். இதைக் கேட்டவுடன் பரமாசார்யாளுக்கு மிகுந்த சந்தோஷமாகி விட்டது. ஏனென்றால் இம்மாதிரியான கேள்விகளை அவர் கேட்டதன் நோக்கமே எந்த அளவிற்கு வித்யார்த்திகள் தங்களுடைய நாக்கிற்கு அடிமையாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதற்காகத்தான்.

வித்யார்த்திகள் அனைவரும் மடத்திலுள்ள மான்குட்டிகள், மயில்கள் மற்றும் கன்றுக்குட்டிகள் இவற்றோடு விளையாடுவது வழக்கம். ஒருநாள் மாலை பரமாசார்யாள் சச்சிதானந்த விலாசத்தின் (சிருங்கேரி ஜகத்குரு தங்குமிடம்) மாடியில் நின்று கொண்டு ஒரு ஜன்னல் வழியாக இவர்களது விளையாட்டைக் கவனித்துக் கொண்டிருந்தார். ஸ்ரீ ஸ்ரீநிவாஸனும் அவர்களுடன் ஒருவராக விளையாடிக் கொண்டிருந்தார். மற்ற வித்யார்த்திகளனைவரும் தங்கள் மிருகங்களை எளிதாகவே கையாண்டனர். ஆனால் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் இளம் வயதினராகவும் பலவீனமாகவும் இருந்ததால் தம் முன்னே நின்ற மானை அவரால் அடக்கவே முடியவில்லை. அது அவரை முட்டிக் கீழேயும் தள்ளிவிட்டது. இச்சமயத்திலே பரமாசார்யாள் மேலே நின்று கவனிப்பதை இவர் பார்த்துவிட்டார். வெட்கம் தாங்கவில்லை போலும். ஆகையால் அங்கிருந்து அவர் ஓடி தம்முடைய அறைக்குள் சென்று ஒளிந்து கொண்டார். அன்று இரவு அவருக்கு சரியான காய்ச்சல் உண்டாகி விட்டது. மடத்து சமையல்காரர் ஆயுர்வேத கஷாயம் ஒன்றைத் தயாரித்து இவருக்கு அளித்த போதிலும் பலன் ஒன்றும் ஏற்படுவதாக இல்லை. காய்ச்சல் மேலும் அதிகரித்துவிட்டது. நோய் மேலும் தீவிரமடைந்தபோது அவருக்கு வாய் குளற ஆரம்பித்து விட்டது. அப்படி அவர் திக்கித் திக்கிப் பேசிய வார்த்தைகளில் "குருநாதா, நீங்களே என்னுடைய புகலிடம். நானே சிவன். நானே சிவன்" என்று பற்பல விதமாகப் பேசிக் கொண்டிருந்தார். அடுத்த நாள் இம்மாதிரி இவருக்கு உடல் நலம் சரியில்லாத விஷயம் பரமாசார்யாளுக்குத் தெரிவிக்கப் பட்டது. அவரோ அதெல்லாம் சரியாகிவிடும் என்று

பதிலளித்துவிட்டார். இப்படியே மூன்று நாட்கள் நடைபெற்றன. உடல் நலம் சரியில்லாத போது ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் என்னவெல்லாம் பேசினார் என்பதை அறிந்து கொள்வதிலேயே பரமாசார்யாள் குறியாக இருந்தார். ஸ்ரீ ஸ்ரீனிவாஸனுக்கோ பெருத்த ஏமாற்றம், மனவருத்தம். ஏனெனில் தமது குருநாதரிடமிருந்து விபூதி பிரசாதம் வரும் என்று அவர் நம்பிக் கொண்டிருந்தார். வித்யார்த்திகள் யாரேனும் உடல் நலம் சரியில்லாமல் இருந்தால் பொதுவாகவே பரமாசார்யாள் விபூதியை மந்திரித்து அனுப்பி வைப்பது வழக்கம். ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் விபூதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற விஷயம் பரமாசார்யாளுக்குத் தெரிவிக்கப்பட்ட போதும், பரமாசார்யாள், "கவலைப்பட வேண்டாம். அனைத்தும் கடைசியில் சரியாகிவிடும்" என்றே பதிலளித்தார்.

அடுத்த நாள் மதிய நேரம், பரமாசார்யாள் நதிக்கு நீராடச் சென்று கொண்டிருந்த சமயம் ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் தொடர்ந்து செய்து கொண்டிருந்த மந்திர ஜபங்கள் அவருக்குக் கேட்டன. சுற்று முற்றும் ஒருமுறை பார்த்துக் கொண்ட பரமாசார்யாள், அங்கு யாரும் இல்லை என்பதை அறிந்து உடனடியாக ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் அறைக்குள் நுழைந்தார். பரமாசார்யாள் அங்கு வந்ததைக் கண்ட ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் உடனடியாக எழுந்து, பரமாசார்யாளின் திவ்ய பாதங்களில் தமது தலை தொடும் வண்ணம் அவரை நமஸ்கரித்தார். பரமாசார்யாள் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனை தூக்கி நிறுத்தி தமது கரங்களை தமது சீடனின் தலையில் வைத்தார். பிறகு மிக மென்மையான குரலில் அவர் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனிடம், "இன்னும் உனக்குக் காய்ச்சல் இருக்கிறதாப்பா, கவலைப்படாதே. போய்ப் படுத்துக்கொள்" என ஆறுதலாகக் கூறினார்.

பரமாசார்யாளின் தெய்வீகக் கரம் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் தலைமீது பட்ட உடனேயே ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் நோய் அவரை விட்டு அகன்று விட்டது. அவர் சாதாரண நிலைக்குத் திரும்பி விட்டார். ஆயினும் இந்த சம்பவமோ அவரது மனதில் ஒரு பெரிய மாற்றத்தை உண்டாக்கி விட்டது. அன்று முதல்,

விளையாட்டுத்தனமாகவோ அல்லது வீணாகவோ பேசுவதை அவர் தவிர்த்து தமது கவனம் முழுவதையும் படிப்பிலேயே செலுத்தத் துவங்கி விட்டார்.

ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் மனதில் வைராக்யத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும் என்பதற்காக பரமாசார்யாள் அடிக்கடி வைராக்யத்தைப் போதிக்கும் அந்தாக்ஷரீ ஸ்லோகங்களைக் கூறுவதுண்டு. அவ்வகை ஸ்லோகங்களுள் ஒன்றின் அர்த்தமானது கீழே தரப்பட்டுள்ளது.

“சாவு எப்பொழுது ஒருவரை எடுத்துக் கொள்ளும் என்பது யாருக்குத்தான் தெரியும்? வாழ்க்கை என்பது நிரந்தரமல்ல. ஆகையால் இளமையாக இருக்கும்பொழுதே தர்மத்தைப் பின்பற்ற வேண்டும். குழந்தைப் பருவத்தில் பகுத்தறிவு சக்தி ஒருவனுக்கு இருப்பதில்லை. இளமைப் பருவத்திலேயோ புலனின்பத்திலேயே மனது சென்றுவிடுகிறது, பின்னர் வயது முதிர்ந்தவுடன் பகுத்தறிவு தோன்றினால் யாருக்கு என்ன நன்மை? அதன் மூலம் எதைத்தான் நாம் ஸாதிக்க முடியும்?”

இதே ரீதியில் பரமாசார்யாள் அடிக்கடி ப்ரஹ்மசர்யம் மற்றும் ஸந்யாஸத்தின் இன்றியமையாமையைப் பற்றிப் பேசுவதுண்டு. யாருக்குப் புலனின்பத்தை அனுபவிப்பதில் ஆசை இருக்கிறதோ, அவர்களுக்கே விவாஹம் என்பது அவசியமாகிறது. யாருக்கு வைராக்யம் நன்கு கூடியிருக்கிறதோ அவர்களுக்கு இல்வாழ்க்கை என்பது அவசியமில்லை. மேலும், வைராக்யம் உடைய ஒருவன் திருமணம் செய்து கொண்டே ஆகவேண்டுமென்ற வேத விதி எதுவுமில்லை. ஆசைகளை ஒழிப்பதற்குத் தேவையான உபாயங்களை வேதங்கள் அளிக்கின்றனவே தவிர அவை என்றுமே ஆசைகளைப் பூர்த்தி செய்யும் விஷயத்தில் ஊக்கம் எதுவும் அளிப்பதில்லை. பாசமிகு பெற்றோர்கள், தமது குழந்தையானது தீயை மிதிப்பதற்குச் சென்றால் அதைக் காப்பாற்றத்தான் முனைவார்கள். மாறாக, தீயில் குதிக்கும்படி அதை ஒருபோதும் தூண்டமாட்டார்கள்.

அதேபோலத்தான் வேதங்களும். மனிதர்கள் தீய வழிகளில் செல்வதை விடுத்து உத்தமமான பாதையில் செல்வதற்கு உதவி செய்கின்றன. ஒரு மனிதன் ப்ரஹ்மச்சாரியாக இருந்தாலும் சரி, இல்லறத்தில் இருந்தாலும் சரி, காட்டில் வசிக்கும் வானப்ரஸ்தனாக இருந்தாலும் சரி, மனதில் வைராக்யம் வந்துவிட்டால், அப்போதே அவன் துறவறம் மேற்கொள்ளலாம். இம்மாதிரியான விஷயங்களைப் பல தருணங்களில் பரமாசார்யாள் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனுக்குத் தெரிவித்திருக்கிறார். ஒவ்வொரு தருணத்திலும் அவரால் தரப்படும் உபதேசமானது எந்த அளவிற்கு ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதையும் அச்சிறுவனின் முகபாவங்களிலிருந்து கவனித்தே வந்தார். ஸந்யாசம் வாங்கிக்கொள்வதே உத்தமம் என்ற மிகத் தீவிரமான எண்ணத்திலிருந்த ஸ்ரீ ஸ்ரீனிவாஸனுக்கு இம்மாதிரியான வார்த்தைகள் அமிர்தத்துக்கு ஒப்பாகவே இருந்தன என்பதைக் கூறவும் வேண்டுமோ? ஒருமுறை பரமாசார்யாளுடன் ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் சென்று கொண்டிருந்த பொழுது தனது மகனை இழந்த ஒரு தாய் கதறி அழுவதைக் கேட்டார். அதைப் பார்த்த சமயம் அவரது உதடுகள், "வாழ்க்கையின் அர்த்தம் இவ்வளவு தானா? இந்த மாதிரி அவல நிலையைக் கொண்ட இந்த வாழ்க்கை எனக்கு வேண்டவே வேண்டாம்" என்று முணுமுணுத்தன.

ஸ்ரீ ஸ்ரீனிவாஸனையே தமது அடுத்த வாரிசாக பீடத்திற்கு நியமிக்க வேண்டும் என்ற தமது எண்ணத்தை பரமாசார்யாள் வெளிப்படையாகக் கூறவில்லையாயினும் தாம் தினமும் செய்து வந்த ஸ்ரீ சந்திரமௌலீச்வர பூஜையின்போது அவர் பின்வருமாறு பிரார்த்தனை செய்யத் துவங்கினார். "சிவனுக்குப் பிரியமானவளே, ஸ்ரீ ஸ்ரீனிவாஸனை மிக விரைவில் ஸர்வக்ஞனாக மற்றும் என்னிடம் பக்தி கொண்ட சிஷ்யனாக மாற்றி அருள்வாயாக."

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன்தான் அடுத்த பீடாதிபதி என்று ஒரு நாள் பரமாசார்யாள் தீர்மானித்து விட்டார். அன்றைய தினம் இரவு அவருக்கு ஒரு கனவு வந்தது. அதில் அவருடைய குருநாதரான

பரமேஷ்டி ஆசார்யாள் தோன்றி பரமாசார்யாளின் முடிவுக்கு தமது பூரண சம்மதத்தை அளித்தார். இப்பேற்பட்ட அபூர்வ கனவானது பரமாசார்யாளுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. அடுத்த நாள் காலை மடத்து அதிகாரியான ஸ்ரீகண்ட சாஸ்திரிகளிடம் பரமாசார்யாள் தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினார். பரமாசார்யாளின் இந்த முடிவு பெங்களூரில் வசித்து வந்த ஸ்ரீ ஸ்ரீனிவாஸனின் பெற்றோர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர்களும் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தனர். வெங்கடலக்ஷ்மி அம்மாள் தமது மகன் ஸந்யாசம் பெற்றுக்கொள்வதற்கு தமது மனப்பூர்வமான சம்மதத்தைக் கொடுத்தார்.

மிகப் புனிதமான சிஷ்ய ஸ்வீகார நிகழ்ச்சி 1931ஆம் வருடம் மே மாதம் 22ம் தேதியன்று சிருங்கேரியில் நடைபெறுவதாக முடிவு செய்யப்பட்டது. ராமா சாஸ்திரியும் அவரது மற்ற குடும்பத்தினரும் பெங்களூரிலிருந்து சிருங்கேரிக்கு நிகழ்ச்சியைக் காணுவதற்காக வந்து சேர்ந்தனர். அச்சமயம் குடும்பத்தினர் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனிடம் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களுள் ஒருவர் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனிடம், "நீ விரைவில் ஒரு ஜகத்குருவாகி விடுவாய். அதற்குப் பிறகு எங்களையெல்லாம் மறந்து விடாதேயப்பா" என்று கூறினார். இதைக் கேட்ட ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் உடனடியாக ஒரு பதிலைத் தந்தார். அதாவது, "ஒருவன் விதையை விதைத்து அதிலிருந்து ஒரு செடி முளைத்து மரமாகி காய் தந்து பிறகு கனிந்து அந்தப் பழங்களை சாப்பிட வேண்டுமென்ற எண்ணத்துடன் இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஆனால் விதையை விதைத்ததற்கு அடுத்த நாளே அந்தப் பழங்களை எல்லாம் சாப்பிட்டாக வேண்டுமென்று அவன் நினைத்தால் அது எவ்வளவு சிறுபிள்ளைத்தனமான ஓர் ஆசை" என்று கூறினார். "இந்தப் பீடத்திற்கு வருபவர்களுக்கு ஸ்ரீ சாரதாம்பாளின் அனுக்ரஹம் அதிகமாகவே உண்டு. ஆயினும் அந்த அனுக்ரஹமே அனைத்தையும் செய்துவிடாது. அந்த அனுக்ரஹத்தைப் பயன்படுத்தி அந்த நபர் தனது முயற்சியினால் வாழ்க்கையில் எதை அடைய வேண்டுமோ அந்த லக்ஷ்யத்தை அடைய முற்பட

வேண்டும். அப்படி அவர் செய்யவில்லை என்றால், கிடைத்த அனுக்ரஹத்தை அவர் வீணாக்கி விட்டதாகத்தான் அர்த்தம்" என்றே ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் நினைத்தார்.

சிஷ்ய ஸ்வீகார தினத்திற்கு ஒரு நாள் முன்னதாக மடத்து அதிகாரியான ஸ்ரீகண்ட சாஸ்திரி ஸ்ரீ ஸ்ரீனிவாஸனிடம், "நாளைக்கு நீ ஸந்யாஸம் பெற்றுக்கொள்ளப் போகிறாய். அதற்குப் பிறகு உனது தாய் தந்தையரை நீ நமஸ்கரிக்க முடியாது. ஆகவே இப்பொழுதே சென்று அவர்களை நமஸ்கரித்துவிடலாம்" என்று கூறினார். ஸ்ரீ ஸ்ரீனிவாஸனுக்கு சிறிதளவும் கர்வமும் அஹங்காரமும் இல்லை. அவர் உடனடியாகச் சென்று தாய், தந்தையரான வெங்கடலக்ஷ்மிக்கும் ராமா சாஸ்திரிக்கும் நமஸ்காரம் செய்து அவர்களது ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் கண்ட ஒரு கனவு, ஸ்ரீ சாரதாம்பாளின் தெய்வீக அனுக்ரஹம் மிகப் பெரிய அளவில் அவருக்குக் கிடைக்கப் போகிறது என்பதை முன்கூட்டியே தெரிவித்தது. ஸ்ரீ சாரதாம்பாளை தரிசிக்க கோவிலுக்குச் செல்வதாக ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் கனவு கண்டார். அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுன் ஒருவராக ஸ்ரீ ஸ்ரீனிவாஸனும் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய குரு அவரை சாரதாம்பாளின் கர்பக்ரஹத்திற்குள் செல்லுமாறு பணித்தார். இவரும் அதை சிரமேற்கொண்டு செய்து முடித்தார். இவர் உள்ளே சென்றதும் கர்பக்ருஹத்தின் கதவுகள் மூடப்பட்டன. சாரதாம்பாள் அங்கு இவர் முன் தோன்றி இவரைத் தூக்கித் தமது மடியில் அமர்த்திக் கொண்டு, " உனக்கு நல்ல காலம் பிறக்கப் போகின்றது. அரசர்கள் உனக்கு மரியாதை செலுத்துவார்கள். மனத்தில் கர்வத்திற்கு இடம் கொடுத்து விடாதே. என்னை இடைவிடாது தொழுது வருவதோடு உனது குருநாதரிடமிருந்து ஒரு கணம்கூடப் பிரியாமல் இருப்பாயாக. இந்த ஸ்படிக மாலையை எனது நினைவாக அணிந்து கொள்" என்று மிகவும் கனிவுடன் கூறினாள். இவ்வாறு கூறியவாறே அம்பாள் அந்த மாலையை ஸ்ரீ

ஸ்ரீநிவாஸனின் கழுத்தில் அணிவித்து அவருக்கு விடைகொடுத்து அனுப்பி வைத்தாள். அதற்குப் பிறகு தீபாராதனை நடைபெற்றது. இதற்கிடையில் அம்பாளால் அணிவிக்கப்பட்ட அந்த மாலை மறைந்துவிட்டது. ஏன் இது மறைந்துவிட்டது என்று ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் ஆச்சரியப்பட்டார். அத்துடன் கனவு முடிந்து விட்டது. ஸ்ரீ சாரதாம்பாளைத் தமது இதயக் கமலத்திலேயே நிரந்தரமாக இருத்திக் கொண்டுவிட்ட ஸ்ரீ ஸ்ரீநிவாஸனுக்கு அம்பாளின் நினைவாக ஒரு வெளிப்புற ஸ்படிகமாலை துளிக்கூட அவசியமில்லை என்று அம்பாள் நினைத்தாள் போலும். அதனால்தான் அந்த மாலை மறைந்து விட்டதோ என்னவோ!

தமது ஸந்யாசம் ஸம்பந்தப்பட்ட நிகழ்ச்சி ஒன்றை ஆசார்யாள் ஒரு சமயம் விவரித்தார். ஸந்யாஸம் பெற்றுக்கொண்ட பிறகு நரஸிம்மவனத்தில் அவர் ஒருமுறை நடந்து சென்று கொண்டிருந்தபோது, அவ்வழியில் நுழைந்த பாம்பு ஒன்று ஆசார்யாளின் பாதாரவிந்தங்களுக்கு மேலே படமெடுத்து நின்றது. சிறிதுகூட பாம்பைக் கண்டு பயப்படாமல், அதனுடைய அழகையே அவர் அசையாமல் ரசித்துக் கொண்டிருந்தார். பாம்போ, தனது பங்கிற்கு, அசையாமல் அவரின் பாதாரவிந்தங்களின் அழகை ரசித்தது போலும்! சிறிது நேரத்தில் ஆசார்யாளுக்கு நமஸ்காரம் செய்வது போலத் தனது தலையைக் கீழே தாழ்த்தி விட்டுப் பிறகு அங்கிருந்து அந்தப் பாம்பு சென்று விட்டது. ஏதோ தாம் அஹிம்சையைக் கடைப்பிடிப்பவர் என்பதால் அந்தப் பாம்பு அவரைக் கண்டு பயப்படாமல் அங்கு வந்து சென்றுவிட்டது என்பதாக தாம் நினைக்கவில்லை என்று கூறிய ஆசார்யாள், "அந்தப் பாம்பை அங்கு அந்த நேரத்தில் கண்டது ஒரு நல்ல சகுனமாகவே எனக்குத் தோன்றியது. இதனால் எனக்கு மிக்க மகிழ்ச்சியும் உண்டாகியது" என்றும் தெரிவித்தார்.

# 4

# இணையற்ற குருபக்தி

ஆசார்யாளின் குணாதிசயங்களிலும் பரமாசார்யாளின் குணாதிசயங்களிலும் சில வித்தியாஸமான அம்சங்கள் இருந்தன. உதாரணமாக, பரமாசார்யாளுக்கு பலத்துச் சிரிக்கும் பழக்கமே கிடையாது; அதிகபட்சம் புன்னகை புரிவார், அவ்வளவுதான். ஆனால், என்றுமே புன்னகை தவழும் முகத்தைக் கொண்ட ஆசார்யாள் உரக்க சிரிக்க தயங்கியதே இல்லை. பரமாசார்யாள் சாஸ்திரங்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களில்தான் ஆர்வம் காட்டுவார். ஆசார்யாள் புராதனமான சாஸ்திரங்களின் கருத்துக்களில் மட்டுமின்றி நவீனக் கருத்துக்களிலும், அவற்றின் நடைமுறை உபயோகத்திற்கேற்ப ஆர்வம் காட்டியதுண்டு. பரமாசார்யாள் விசார மார்க்கமாக ப்ரம்ம தத்துவத்தை அடைந்தார். ஆசார்யாளோ யோக மார்க்கத்தின் மூலமாக ஞானத்தையும் ஜீவன்முக்தி நிலையையும் அடைந்தார். இருவரது குணாதிசயங்களும் இவ்வாறு இருப்பினும், அவர்களுக்கிடையே இருந்த அபாரமான குரு-சிஷ்ய உறவே அலாதிதான்.

1923ம் வருடத்திலிருந்து பரமாசார்யாள் ‘அந்தர்முக அவஸ்தை’ என்றழைக்கப்படும் ஒருவித உள்திரும்பிய மனநிலையுள்ளவராய் அவ்வப்போது ஆழ்ந்து விடுவார்.

இம்மாதிரி நேரங்களில் அவருடைய நடவடிக்கைகள் எப்படி இருக்கும் என்பதை எவராலும் யூகித்துச் சொல்ல முடியாது. அவருடைய இந்த மாற்றங்கள் பலருக்கு கவலையைத் தந்தன. எப்பொழுது நீராடுவார், எப்பொழுது சாப்பிடுவார் என்பதே தெரியாத அளவிற்கு அவர் அந்த நிலையிலேயே ஆழ்ந்து இருந்தார். காலம் அவருக்கு ஒரு பொருட்டாகவே இல்லை. ஆன்மீகத்திலும் சரி, உலக ரீதியிலும் சரி, எந்தவிதமான கட்டுப்பாடுகளுக்கும் அவர் உட்படவேயில்லை. அவர் நாட்கணக்கில் , ஸ்நானம் செய்வது , உண்பது, உறங்குவது எனும் அனைத்தையும் மறந்தவராய் அந்த உன்னத நிலையிலேயே இருந்துவிடுவார். உணவு உட்கொள்ளாத நிலையில் அவரது உடல் மெலியத் துவங்கிய போதும், அவருக்கே உரித்தான அந்த தெய்வீக ஒளி அவரை நீங்கவே இல்லை.

இம்மாதிரியாக இருக்கும் நிலைகளில் பரமாசார்யாளை மிகுந்த கவனத்துடன் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சிலசமயம் அவர் அப்படியே எழுந்து ஆற்றங்கரைப் பக்கமாக சென்றுவிடுவார். அவரது அருகில் செல்ல எவருக்குமே தைரியம் இருந்தது கிடையாது. இம்மாதிரியான நேரங்களில் ஆசார்யாள் மட்டுமே அங்கு சென்று அவரை சச்சிதானந்த விலாஸத்தின் உட்புறத்திற்கு பாதுகாப்பாக அழைத்து வருவதுண்டு. இவ்விஷயங்களைப் பற்றி ஆசார்யாள் பலமுறை நினைவு கூர்ந்து இருக்கிறார். பின்வருவது அவற்றுள் ஒரு நிகழ்ச்சி ஆகும்.

பரமாசார்யாள் (ஆசார்யாளைப் பார்த்து): நீங்கள் ஏன் வந்திருக்கிறீர்கள்?

தம்மைத் தனியாக விட்டுவிட வேண்டும் என்று பரமாசார்யாள் மிக உறுதியாக நினைத்திருந்த போதிலும்கூட, தமது பாலசிஷ்யரான ஆசார்யாளிடம் அவர் வைத்திருந்த அளவற்ற அன்பின் காரணத்தால், ஆசார்யாளின் முன்னிலையில் தமது உறுதியை தளர்த்திக்கொண்டு விடுவார்.

ஆசார்யாள் : தங்களை சச்சிதானந்த விலாஸத்திற்கு திரும்பி வர வேண்டும் என்று வேண்டிக் கொள்வதற்காக வந்திருக்கிறேன்.

பரமாசார்யாள் : நான் ஏன் திரும்பி வர வேண்டும்?

ஆசார்யாள் : தாங்கள் இல்லாமல் நான் தனிமையில் வாடுகிறேன்.

பரமாசார்யாள் : ஏன்? மற்றவர்கள்தான் இருக்கிறார்களே.

ஆசார்யாள் : ஆனாலும் ஆசார்யாள் இருந்தால்தான் என் மனதிற்கு சந்தோஷம் உண்டாகிறது.

பரமாசார்யாள் : அப்படியா? சரி.

இதன் பிறகு பரமாசார்யாள் ஆசார்யாளுடன் சச்சிதானந்த விலாஸத்திற்கு வந்துவிடுவது வழக்கம்.

சில சமயங்களில், பரமாசார்யாள் சாதாரண நிலையிலிருந்தாலும் திடீரென அந்தர்முக நிலையில் ஆழ்ந்து விடுவதுண்டு. அவர் துங்கா நதியைக் கடந்து கொண்டிருக்கும் பொழுது திடீரென்று அந்தர்முக நிலைக்கு மாறியவராய் எதைப் பற்றியும் கவலைப்படாமல் தமது ஆடைகளையெல்லாம் களைந்து அவதூதராய் மாறியதும் உண்டு. அம்மாதிரியான சமயங்களில் குழப்பத்தைத் தவிர்க்க ஆசார்யாள் ஆடைகளை எடுத்துக்கொண்டு தமது குருநாதருக்கு உடுத்திவிடுவதற்காக விரைந்து செல்வது வழக்கம். இதுதவிர, அம்மாதிரியான சமயங்களில் பரமாசார்யாளின் அருகிலேயே இருந்து, அவரது தேவைகளைக் கவனித்துக் கொள்வதும் ஆசார்யாளின் வழக்கமாக இருந்தது. சாதாரண நிலையில் குரு இருக்கும்போது அவருக்கு சேவை செய்வது என்பது அவ்வளவு கடினமான விஷயமல்ல. ஆனால் இம்மாதிரியான தருணங்களில் குருவிற்கு சேவை செய்வதற்கு அதிகப்படியான பொறுமை, விடாமுயற்சி, செயல்திறன் ஆகியவை மிக அவசியம்.

ஆசார்யாள் இந்தமாதிரி சமயங்களில் பரமாசார்யாளை மிக அக்கறையுடன் கவனித்துக் கொண்டு வந்தது அவருக்கு தமது குரு விஷயத்தில் எவ்வளவு பக்தி இருந்தது என்பதையே காட்டுகிறது.

பரமாசார்யாளைப் பொறுத்தவரையில், ஆசார்யாளை அவர் தமது குருநாதரின் மறு அவதாரம் என்றே நிச்சயமாக நம்பினார். அதனால் பக்தர்கள் ஆசார்யாளை 'ஸ்வாமிகள்' என்று கூப்பிடுவதைக்கூட அவர் தடை செய்தார். ஆசார்யாளை தமது குருநாதரின் மறு அவதாரம் என்று கருதியதால் ஆசார்யாளுக்கு தமது மரியாதைகளைச் செலுத்துவதற்குக்கூட அவர் தயங்கியது இல்லை. எப்படி என்றால், சில சமயங்களில் ஆசார்யாள் வரும் போது கதவைத் திறந்துவிடுவார். சில சமயங்களில் ஆசார்யாள் வரும்பொழுது எழுந்து நிற்பார். பல தருணங்களில் அவர் ஆசார்யாளை தமது குருநாதரின் மறு அவதாரமாக தாம் நினைப்பதை ஆசார்யாளிடமே கூறியும் இருக்கிறார். ஆனால் நம் ஆசார்யாளோ தமது குருநாதர் தம் மேல் வைத்திருந்த அளவற்ற அன்பின் காரணமாகவே இம்மாதிரியாக தம்மைப் பற்றி நினைத்துக் கொள்கிறார் என்றே கருதுவார்.

ஆசார்யாளின் தர்க்க பாடம் முன்னேறத் துவங்கியவுடன் பரமாசார்யாள் ஆசார்யாளை சாதுர்மாஸ்ய நேரங்களில் சிருங்கேரியில் நடைபெறும் "வித்வத் சதஸ்" ஸில் (வித்வான்களின் சபையில்) கலந்துகொண்டு பேசுமாறு கூறுவார். அம்மாதிரி தருணங்களைப் பற்றி ஆசார்யாள் ஒருமுறை குறிப்பிடுகையில் மிகுந்த தன்னடக்கத்துடன் பின்வருமாறு கூறினார் : "என்னை என் குருநாதர் வித்வத் சதஸ்ஸில் பேசுமாறு கூறுவார். ஆரம்ப காலங்களில் அவரே, நான் என்ன தலைப்புகளில் பேச வேண்டுமோ அதை முடிவு செய்வார். நாளடைவில் அவர் என்னிடம், "நீங்கள் சபாவில் இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள். எங்கே, சாஸ்திரார்த்தம் செய்யுங்கள் பார்ப்போம்" என்று கூறுவதுண்டு. நானும் எனக்குத் தெரிந்ததைத் தட்டுத்தடுமாறி துவங்குவது உண்டு. தேவைப்படும்

பொழுதெல்லாம் அவர் உகந்த திருத்தங்களை எனக்கு அளிப்பார். அம்மாதிரி நான் முன்னதாகவே பயிற்சி செய்துவந்ததால் சபையில் பேசும்பொழுது பிரச்சினைகள் ஏற்பட்டதில்லை. காலம் செல்லச் செல்ல, அம்மாதிரியான முன்பயிற்சியின் தேவை நின்றுவிட்டது.''

இம்மாதிரி அடக்கத்துடன் தம்மைப்பற்றி கூறிக்கொள்ளும் ஆசார்யாளின் பாண்டித்யத்தில் பரமாசார்யாளுக்கு எந்த அளவிற்கு ஒரு நம்பிக்கை இருந்தது என்பதை ஒரு நிகழ்ச்சியின் மூலம் நாம் அறியலாம். ஆசார்யாளின் தர்க்கப் பாடங்கள் முடிவடையாத நிலையில் ஒருநாள் வடஇந்தியாவிலிருந்து ஒரு தர்க்கப் பண்டிதர் சிருங்கேரிக்கு வந்திருந்தார். அவருக்கு தர்க்க சாஸ்திரத்தில் சில சந்தேகங்கள் இருந்தன. அதை பரமாசார்யாளிடம் கேட்டு நிவர்த்தி செய்து கொள்வதற்காக அவர் வந்திருந்தார். பரமாசார்யாளோ அந்தப் பண்டிதரை நம் ஆசார்யாளிடம் அனுப்பி சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு பணித்தார். பண்டிதர் அதற்கு இணங்காமல் பரமாசார்யாளே தன்னுடைய சந்தேகங்களை தீர்த்து வைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். பரமாசார்யாள் அவரைப் பார்த்து, ''நீங்கள் முதலில் என் சிஷ்யரிடம் செல்லுங்கள். அவர் இதற்குத் தேவையான விளக்கங்களை அளிக்கட்டும். அந்த விளக்கங்களைக் கேட்ட பின்பும் உங்களுடைய சந்தேகங்கள் தீரவில்லை என்றால் நான் தீர்த்து வைக்கிறேன்'' என்று கூறினார். அரைமனதாக அந்தப் பண்டிதர் நம் ஆசார்யாளிடம் சென்றார். ஏதோ ஒரு கற்றுக்குட்டியிடம் நாம் சென்று கேட்க வேண்டிய நிலை வந்து விட்டதே என்பது போல் அவரது எண்ணங்கள் இருந்தன. ஆயினும், அவர் ஆசார்யாளிடம் சென்று தனது சந்தேகங்களை தெரிவித்த பொழுது, மடைதிறந்த வெள்ளமென ஆசார்யாளின் முக கமலத்திலிருந்து வெளிவந்த மிகவும் நுணுக்கமான கருத்துக்களைக் கேட்டு அவர் திகைத்து விட்டார். அவருடைய சந்தேகங்கள் முற்றிலும் நீங்கிவிட்டன. ஆசார்யாளின் அறிவுத்திறனைப் பற்றி தாம் குறைவாக மதிப்பிட்டதை எண்ணி அவர் மிகவும் வருந்தியதோடு அல்லாமல், ஆசார்யாளிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

சிருங்கேரியில் ஒருமுறை வித்வத் சதஸ்ஸின்போது தர்க்க சாஸ்திரத்தில் கடினமான ஒரு பகுதிக்கு ஆசார்யாள் ஒரு வித்தியாசமான விளக்கத்தை அளித்தார். அதைக் கேட்ட பரமாசார்யாளின் முகம் மிகவும் பிரகாசமாகி விட்டது. அளவு கடந்த மகிழ்ச்சி அடைந்த அவர் அன்று முழுவதுமே ஆசார்யாளை தம்மை விட்டு எங்கும் செல்ல விடவில்லை.

குரு உணவு எடுத்துக்கொள்வதற்கு முன்பாக சிஷ்யர் சாப்பிடக்கூடாது என்னும் சாஸ்திர விதியை தாம் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் ஆசார்யாளுக்கு இருந்தது. பிற்பகலில் பரமாசார்யாள் தமது பிக்ஷையை மிகத் தாமதமாக எடுத்துக் கொள்வது வழக்கம். ஆகவே பரமாசார்யாள் உணவு எடுத்துக் கொள்ளும்வரை ஆசார்யாள் காத்திருக்கத் துவங்கினார். ஆசார்யாளுக்கு என தனியாக ஒரு சமையல் அறை ஏற்பாடு செய்யப்பட்டு அவரது உணவு விஷயங்களை தனிப்பட்ட முறையில் பார்த்துக் கொள்வதற்கும் உத்தரவாகி இருந்த போதிலும் தமது குருநாதர் சாப்பிட்டு முடிக்கும்வரை அவர் காத்திருக்கத் துவங்கினார். இதனை அறிந்த பரமாசார்யாள் ஆசார்யாளின் உடல் நலத்தில் கவனம் கொண்டவராக, அந்த தனி சமையல் அறை ஏற்பாட்டையும் ரத்து செய்துவிட்டு தாமும் மிக விரைவாகவே பிக்ஷையை எடுத்துக்கொள்ளும் பழக்கத்தைத் துவக்கினார்.

பொதுவாக பரமாசார்யாள் நடந்து செல்லும்போது மெதுவாக நடப்பது வழக்கம். ஆனால் ஆசார்யாளோ மிக விரைவாக நடப்பார். அது எப்படி என்றால் அவருடன் வரும் மடத்து சிப்பந்திகள் ஓடவே வேண்டியிருக்கும். ஆயினும், பரமாசார்யாளுடன் செல்லும் சமயங்களில் ஆசார்யாள் எப்பொழுதுமே மிக மெதுவாக பரமாசார்யாளின் பின்னால் நடந்து செல்வார். தமது குருவை ஆசார்யாள் எப்பொழுதுமே கடந்து சென்றது இல்லை.

பீடாதிபதிக்குரிய கடமைகளை முற்றிலுமாகத் துறந்து அவை அனைத்தையும் ஆசார்யாளிடமே தந்துவிட பரமாசார்யாள்

திருவுளம் பூண்டார். தனியே இருந்து கடும் தவத்தில் ஈடுபட வேண்டும் என்ற அடக்க முடியாத ஆவல் ஆசார்யாளின் மனதில் இருந்த போதிலும் தம்முடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் பரமாசார்யாளின் இந்த முடிவை முழு மனதுடன் ஏற்று அதன்படியே செயல்பட அவர் தீர்மானித்தார். உண்மையான சிஷ்யர் அல்லவா அவர்! சந்திரமௌளீஸ்வரர் பூஜையைச் செய்யும் முழுப்பொறுப்பையும் உடனடியாக ஆசார்யாளிடமே ஒப்படைத்துவிட்ட பரமாசார்யாள், 'ஆசார்யாள் எவ்வளவு சிரத்தையாக அந்தப் பூஜையை செய்கிறார்' என்று பலரும் கூறுவதைக் கேட்டு மிகவும் திருப்தி அடைந்தார். இப்பொழுது பீடாதிபதிக்குரிய அனைத்து பணிகளும் ஆசார்யாளிடமே தரப்பட்டுவிட்டதால், தொடர்ந்து எல்லாவற்றுக்கும் பரமாசார்யாளை அண்டி அவரது அனுமதியைக் கோரிப் பெறும் அவசியம் ஆசார்யாளுக்கு இல்லைதான். ஆயினும் தமது குருநாதர் மேல் அவர் வைத்திருந்த விசுவாஸத்தின் காரணமாக மடத்து சம்பந்தப்பட்ட பூஜை மற்றும் எவ்வித நிகழ்ச்சிகளுக்கும் முன்னதாக அவர் பரமாசார்யாளை அணுகி நமஸ்கரித்து, "இன்று ஆசார்யாள் இந்த நிகழ்ச்சிக்கு வருகிறார்களா?" என்று கேட்பார். பரமாசார்யாள் "இல்லை," என்று சொல்லிவிடுவார். மீண்டும் மிகவும் பணிவுடன் ஆசார்யாள் கேட்பார். "அப்படியானால் ஆசார்யாளுக்கு எந்த விதத்திலேனும் நான் உதவிகரமாக இருக்க முடியுமா? அதற்கு நான் தயாராக இருக்கிறேன்." உடனே பரமாசார்யாள், அவரையே சென்று அந்த நிகழ்ச்சியை நடத்துமாறு கூறிவிடுவார். சில தருணங்களில் பரமாசார்யாள் ஒருசில நிகழ்ச்சிகளுக்கு வருவதாக ஒப்புக்கொள்வதுண்டு. அத்தருணங்களில் அந்த நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கும் இடங்களுக்கு ஆசார்யாள் மிக முன்னதாகவே சென்று அங்கு நடக்கும் ஏற்பாடுகளைக் கவனித்து பரமாசார்யாளின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பார். பரமாசார்யாள் ஆசார்யாளை துர்காம்பாள் கோவில் போன்ற இடங்களுக்கு பல்லக்கிலேயே செல்லும்படி பணித்துவிட்டு தாம் நடந்து செல்ல முற்படுவார்.

இனிமேல் ஆசார்யாளின் கருத்துக்கள் தம்முடைய கருத்துக்களாகவே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என பரமாசார்யாள் அரசாங்கத்திற்கு தெரிவித்துவிட்டார். இதன் மூலம் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு மடத்து சம்பந்தப்பட்ட எந்த ஒரு முடிவையும் ஆசார்யாளே எடுக்கலாம் என்ற நிலை ஏற்பட்ட போதிலும் ஆசார்யாள் பரமாசார்யாளை கலந்து ஆலோசிக்காமல் எந்த ஒரு முக்கிய விஷயத்திலும் முடிவு செய்தது இல்லை. ஆசார்யாளால் எடுக்கப்படும் முடிவு மிகச் சரியாகவே அமைந்திருந்தது. அது பரமாசார்யாளை பலவித இன்னல்களிலிருந்து காப்பாற்றியதோடு அவரை மிகவும் திருப்தி அடையவும் செய்தது. ஓர் உண்மையான சீடரானவர் தமது குருவிற்கு கீழ்ப்படியும் விஷயத்தில் சுயகௌரவத்திற்கோ, அஹங்காரத்திற்கோ அல்லது சம்பிரதாயங்களுக்கோ இடம் கொடுக்கக் கூடாது. பரமாசார்யாள் தீர்மானித்த எந்த ஒரு விஷயத்திலும் ஆசார்யாளுக்கு அதிருப்தி என்பது சிறிதளவும் இருந்ததில்லை. பரமாசார்யாள் என்ன சொல்கிறாரோ அது மிகச் சரியானதாகத்தான் இருக்கும் என்பதில் அதிதீவிர நம்பிக்கை இருந்தது அவருக்கு.

ஆசார்யாளுக்கும் சிஷ்யர் ஒருவருக்கும் நேர்ந்த கீழ்வரும் உரையாடல், ஆசார்யாள் எந்த அளவிற்கு பரமாசார்யாளுக்கு கீழ்ப்பணிந்து நடந்து கொண்டார் என்பதை தெள்ளத் தெளிவாக விளக்கும்.

சிஷ்யர் : தமது கருத்துக்களுக்கு பரமாசார்யாள் முக்கியத்துவம் தரவில்லை என்னும் எண்ணம் எப்பொழுதாவது ஆசார்யாளுக்கு இருந்ததுண்டா?

ஆசார்யாள் : இல்லவே இல்லை. என்னுடைய கருத்தை எனது குருநாதர் கவனத்தில் கொள்ளவில்லை என்ற ஓர் எண்ணம் எனக்குக் கற்பனையில்கூட இருந்ததில்லை. அம்மாதிரியெல்லாம் கற்பனை செய்து பார்க்கக்கூட எனக்கு என்ன

தகுதி இருக்கிறது? என்னைப் பொறுத்த மட்டிலும் எனக்கு எல்லாமே என் குருநாதர் தான். அவர் என்ன சொன்னாலும் அது சரியாகத்தான் இருந்தது. அப்படி மட்டும் பரமாசார்யாள் என்னை அவமரியாதைப் படுத்திவிட்டார் என்று எனக்கு ஓர் எண்ணம் ஏற்பட்டு இருந்ததேயானால் என்னைவிட ஓர் அற்பமான மானிடன் எவரேனும் இருக்க முடியுமோ?

இதைக் கூறும்போது ஆசார்யாளுடைய குரல் தழுதழுக்கத் தொடங்கிவிட்டது. என்னே ஓர் உண்மையான சீடர்!

# 5

# ஜகத்குருவாகப் பட்டாபிஷேகம்

இயல்பாகவே நம் ஆசார்யாளுக்கு கம்பீரமான இராஜயோக மார்க்கத்தில் மிகுந்த நாட்டம் இருந்து வந்தது. யோகத்தின் உச்சியை அடைய உதவும் படிகளாக எட்டு நிலைகளை மகரிஷி பதஞ்சலி எடுத்துரைக்கிறார். அவை, யமம் (அடக்குதல்), நியமம் (கடைப்பிடித்தல்), ஆஸனம் (யோகாஸனம்), ப்ராணாயாமம் (மூச்சை நெறிப்படுத்துதல்), ப்ரத்யாஹாரம் (புலனடக்கம்), தாரணை (மனதை ஒருநிலைப்படுத்துதல்), த்யானம் மற்றும் சமாதி ஆகியவையே ஆகும்.

நமது குருநாதருக்கு 15 வயதுகூட நிரம்பியிராத நிலையில், பரமாசார்யாள் அவரை த்யான மார்க்கத்தில் ஈடுபடச் செய்தருளினார். இதன் விளைவாக, ஆசார்யாளுக்கு தமது 16வது வயதிலேயே, ஆழ்ந்த ஆத்ம த்யானத்தில் ஈடுபடும் உயர்ந்ததொரு நிலை கைகூடிவிட்டது. பரமாசார்யாளால் சில தருணங்களில் அருளப்பட்ட சூசகமான ஒருசில குறிப்புகள் மட்டுமே நம் ஆசார்யாளுக்குப் போதுமானதாக இருந்தன. இவற்றைச் சரிவரப் பயன்படுத்திக்கொண்ட ஆசார்யாள் த்யானத்தில் முன்னேறி, விரைவில் ‘சவிகல்ப சமாதி’ (பரம்பொருளை உருவம் போன்ற

குணங்களுடன் கூடியதாக த்யானித்தல்) நிலையினை அடைந்தார். இந்நிலையினில் பூரணத்துவத்தை அடைந்த அவர், மென்மேலும் முன்னேறி யோகத்தின் சிகரமாம் 'நிர்விகல்ப சமாதி' (பரம்பொருளை குணங்களெதுவும் அற்றதாய் த்யானித்தல்) நிலையினையும் அடையப்பெற்றார். 20 வயது முடிவதற்குள்ளாகவே ஆசார்யாளுக்கு ஜீவன்முக்தி நிலை கைகூடிவிட்டது. தமது சாதனைகளின் ஒவ்வொரு நிலையிலும் தமது முயற்சிகள் பற்றிய விவரங்களை ஆசார்யாள் பரமாசார்யாளிடம் தவறாது தெரிவித்து வந்தார். இதைக் கேட்டு, பரமாசார்யாளும் மிகுந்த சந்தோஷமடைந்தார். யோகத்தில் பூரணத்துவத்தை அடைந்து விட்ட போதிலும், விளையாட்டாக ஆசார்யாள் பற்பல த்யான செயல்முறைகளை பரிசோதித்துப் பார்த்து வந்தார். இம்மாதிரியான பரிசோதனைகளின் மூலம் அவருக்கு உண்டான அனுபவங்கள், பிற்காலத்தில் அவரை த்யானம் சம்பந்தப்பட்ட எந்தவொரு விஷயத்தையும் அதிகாரபூர்வமாகப் பேச வைத்தது மட்டுமல்லாமல், தம்மை நாடிவரும் பக்தர்களின் த்யான அனுபவங்களைக் கேட்டு அவர்களுக்கு தக்க உபதேசங்கள் வழங்கவும் உதவின.

20 வயதிற்குள்ளாகவே தத்துவ ஞானத்தை அடைந்துவிட்ட ஆசார்யாளுக்கு முறையான வேதாந்த பாடங்கள் துவங்கியதோ அவரது 30வது வயதில்தான்! ஆசார்யாளைப் பொறுத்த வரையில், முன்னரே தாம் பெற்றுவிட்ட ஆத்மானுபவத்தை ஊர்ஜிதப்படுத்தும் விதமாகத்தான் இந்தப் பாடங்கள் பயன் பட்டனவேயன்றி, ஞான சாதனங்களாக அல்ல!

1954ம் ஆண்டில், தமது பணி நிறைவு பெற்றுவிட்டதாக எண்ணிய பரமாசார்யாள், தம் தேஹத்தை மேலும் தரித்திருக்க விரும்பாதவராய், அதனைத் துறக்க முடிவு செய்ததுடன், அதுபற்றி மற்றவர்களுக்கு குறிப்பால் உணர்த்தவும் செய்தார். ஆயினும் அவ்வகையான குறிப்புகள் அவ்வளவு வெளிப்படையாக இல்லாததால் அவற்றை எவரும் கவனத்தில் கொள்ளவில்லை. 1954ம் வருடம் செப்டம்பர் 26ம் தேதி அதிகாலை துங்கா நதியுள் இறங்கிய பரமாசார்யாள் அங்கேயே தமது உடலைத் துறந்து

விட்டார். நவராத்திரி நிகழ்ச்சிகளுக்காக துங்கையின் வடகரையில் தங்கியிருந்த ஆசார்யாள் விஷயத்தைக் கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சேர்ந்தார். பரமாசார்யாளின் அசைவற்ற உடலைக் கண்டதும் அதிர்ச்சியடைந்த ஆசார்யாள் தேஹத்தின் அருகே வந்து மிகுந்த பாசத்தினால் அதை தடவிக் கொடுத்தார். தலைசிறந்ததொரு யோகியாக இருந்தபோதிலும், தமது குருநாதரின் உயிரற்ற உடலைக் கண்டதும் நொறுங்கிய இதயத்துடன் 'அம்பா' என்று கதறினார் ஆசார்யாள். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாது அங்குமிங்குமாக நடக்கத் துவங்கிய ஆசார்யாள் சிறிது நேரத்தில் தரையில் அமர்ந்து எதையும் செய்யத் தோன்றாதவராய் அப்படியே இருந்தார். ஆயினும், மிக விரைவாக உணர்ச்சிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்ட ஆசார்யாள், மடத்து சம்பிரதாயங்களின்படி மேற்கொண்டு செய்ய வேண்டிய சடங்குகளைச் செயற்படுத்துவதில் முனைந்தார்.

செப்டம்பர் மாதம் 26ம் தேதி நடந்த நிகழ்ச்சிகளை ஆசார்யாளின் வார்த்தைகளினாலேயே சொல்வதுதான் சிறந்தது. 25 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சியாயிருப்பினும் இவ்வார்த்தைகளைச் சொல்லும்போது அவரது குரல் உணர்ச்சியால் தழுதழுத்தது. ஆசார்யாள், "சில தருணங்களில் எனது குருநாதர் தாம் செய்து முடிக்க விரும்பியவற்றைச் செய்து முடித்து விட்டதாகவும், எனவே அதற்கு மேலும் அவ்வுடலைத் தரித்திருக்க விரும்பவில்லையென்றும் கூறிவந்தார். ஆயினும், எங்களில் எவருக்கும் அவர் தமது உடலை நீத்துவிட முடிவு செய்துவிட்டார் என்பது தெரியாமல் போய்விட்டது. மஹாளய அமாவாசை தினத்தன்று அதிகாலை அவர் ஸ்நானத்திற்காக நதிக்கரைக்குச் சென்றார். அப்பொழுது நீரோட்டம் வேகமாக இருந்ததென்றோ, ஆழம் அதிகமாக இருந்ததென்றோ கூறவியலாது. உடலை துறந்துவிட முடிவு செய்துவிட்ட அவர் ஆற்றிலிறங்கி பத்மாஸனத்தில் அமர்ந்து, ப்ராணாயாமத்தைச் செய்து, அப்படியே உடலை நீத்து, அதை ஆற்றுநீர் இழுத்துக் கொண்டு போகும்படி செய்துவிட்டார். அவருக்கு உதவியாக ஆற்றங்கரைக்குச் சென்ற

மஹாபலபட்டா ஆற்றினுள் குதித்து அவரது உடலைப் பற்றி, மறுகரையில் நின்றிருந்த மற்றொருவரது உதவியுடன் கரைக்கு எடுத்து வந்தார். விஷயத்தைக் கேள்விப்பட்ட நான் அவ்விடத்திற்கு ஓடோடிச் சென்றேன். ஆயினும் அனைத்தும் முடிந்துவிட்டது. எனது குருநாதர் உயிருடன் இருந்து இன்றளவும் தொடர்ந்து நம்மை வழிநடத்தியிருந்தால் அது எவ்வளவு நன்றாகயிருந்திருக்கும்! ஆயினும், அதற்கு வழியில்லாமல் அந்த ஜீவன்முக்தர் தமது உடலைத் துறந்துவிட்டார். என் விஷயத்தில் அவர் பொழிந்த அளவற்ற அன்பையும் அருளையும் என்னவென்று விவரிப்பேன்? அவருடைய சொந்தக் குழந்தையென என்னை வளர்த்து ஆளாக்கினார். அவரது மறைவால் எனக்கு ஏற்பட்ட துக்கம் அளவற்றது என்றாலும், அதன் விளைவாக இடிந்துபோய் நாட்கணக்கில் செயலற்று உட்கார்ந்துவிடவில்லை நான். ஏனெனில், நான் அப்படிச் செய்வதை ஆசார்யாள் (பரமாசார்யாள்) நிச்சயமாக விரும்பியிருந்திருக்க மாட்டார். ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதி ஸ்வாமிகளின் சமாதியினருகே எனது குருநாதரின் திருவுடலைப் புதைக்க ஆவன செய்தேன். அவருக்காக அமைக்கப்படவிருக்கும் சமாதி ஆலயமானது அவர் அவரது குருவிற்காக வடிவமைத்த சமாதி ஆலயத்தைப் போன்றே இருந்திடல் வேண்டும் என தீர்மானித்தேன். தினமும் அவரது சமாதிக்குச் சென்று வழிபட்டு எனது இதர பணிகளையும் நடத்தி வந்தேன். அவரது அருள் என்றும் எனக்கு உண்டு என்று நான் அறிவேன்.''

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 35வது பீடாதிபதியாக ஆசார்யாள் 1954ம் ஆண்டு அக்டோபர் 16ம் தேதி பொறுப்பேற்றுக் கொண்டார். ஆயிரக்கணக்கான பக்தர்களும், பிரமுகர்களும் பட்டாபிஷேக வைபவத்தில் கலந்துகொண்டு, ஜகத்குருவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டனர். அக்டோபர் 17ம் தேதி நடைபெற்ற விழாவில் சிறிது நேரமே உரையாற்றிய ஆசார்யாள், ''எனது இந்தப் புதிய பொறுப்பினை

சரிவர நிறைவேற்ற எனது குருநாதரின் திருவருள் அவசியம் தேவை. அதற்காக, நான் எனது குருவிடம் பிரார்த்தனை செய்து கொள்வேன்'' எனக் குறிப்பிட்டார்.

மேன்மை வாய்ந்த இராஜபீடமான சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்திற்கென சில சம்பிரதாயங்கள் தொன்றுதொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளன. நவராத்திரி போன்ற விழா காலங்களில் கிரீடம், பட்டாடை போன்றவற்றை தர்பார் நடக்கும் சமயங்களில் பீடாதிபதி அணிந்து கொள்வது வழக்கம். இத்தகைய பகட்டுக்கள் எல்லாம் ஸ்ரீமடத்தைத்தான் சார்ந்தது என்றும், தனிப்பட்ட முறையில், தமக்கும் அத்தகைய ஆடம்பரங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றே ஆசார்யாள் தீர்மானத்துடன் இருந்தார்.

மன்னர்களால் வணங்கப்பட்ட மிகவும் பெருமைவாய்ந்த சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் பீடாதிபதியாக தாம் கொலு வீற்றிருந்தாலும், தாம் ஓர் எளிய ஸந்யாசி என்ற ஓர் எண்ணத்தையே ஆசார்யாள் தம் மனதில் கொண்டிருந்தார். பக்தர்களிடம் மிகவும் அன்புகாட்டி எளிய முறையில் பழகுவார். இதற்கு ஓர் உதாரணமாக, ஆசார்யாள் பிரம்மசாரியாக சிருங்கேரியில் இருந்த சமயம் அவருடன் பயின்ற நண்பர் ஒருவர் நினைவுகூர்ந்த பின்வரும் சம்பவத்தைக் கூறலாம்: ''ஸந்யாசம் வாங்கிக்கொண்ட பிறகும் சரி, பீடாதிபதியாக ஆன பின்பும் சரி, ஆசார்யாள் என்னுடன் முன்போலவேதான் பழகி வருகிறார். சமயங்களில் என்னை விளையாட்டாக சீண்டிப் பார்ப்பதுமுண்டு. அவரது விஜய யாத்திரை ஒன்றின்போது ஓரிடத்தில் கடலில் நீராடுவதற்காகச் சென்றோம். கடலில் இறங்கி ஆசார்யாள் என்னையும் தம்முடன் வருமாறு அழைக்க, நீச்சல் தெரியாது எனக் கூறி நான் வர மறுத்தேன். எனது பதிலை சட்டையே செய்யாத அவர், எனது கையைப் பிடித்து கடலுக்குள் இழுத்துச் சென்று விட்டார். 'நாம் இப்போது நீந்தலாம்' எனக் கூறிய அவர் மறுகணம் நீரில் மிதக்கத் துவங்கிவிட, நானோ நீந்தத் தெரியாததால், மூழ்கிவிடத்தான் போகிறேன் எனக் கிலியடைந்து

விட்டேன். எனது நிலையை உணர்ந்துகொண்ட ஆசார்யாள் எனக்கு உதவிக்கரம் நீட்டி, என்னை பாதுகாப்பானதொரு பகுதிக்கு அழைத்துச் சென்றார்.''

இந்த மாதிரியான 'என்றும் மாறாத அன்பு' ஆசார்யாளுக்கே உரித்தானதொரு அற்புத குணமாகும். பக்தர்கள் இதைக் கடைப்பிடிக்க முயற்சி செய்வது உத்தமமானதொரு விஷயமாகும்.

மடத்து நிர்வாகத்தை மிகவும் திறம்பட நடத்தி வந்தார் நம் ஆசார்யாள். அதில் ஓர் அங்கமாக, நாள்தோறும் அவருக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பக்தர்கள் எழுதும் கடிதங்களைப் படித்து அவற்றிற்கு பதிலளித்தருள்வது இருந்து வந்தது. இச்சமயங்களில் ஆசார்யாள் செயல்படும் விதம் பார்ப்பதற்கு மிக சுவாரஸ்யமானதாக இருக்கும். ஒரு கடிதத்தைப் படித்தவாறே வேறுசில குறிப்புகளை எழுதிக் கொண்டிருப்பார். அதே சமயத்தில், ஏற்கெனவே தமக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்ட மற்றொரு கடிதத்துக்குரிய பதிலைக் கூறி தமது காரியதரிசியை எழுதிக்கொள்ளச் செய்வார். இத்தனைக்கும் நடுவில் அவரைக் காண எவரேனும் அங்கு வந்தால் அவரை அமரச் சொல்லி தலையையும் அசைப்பார். ஒரே சமயத்தில் இவை அத்தனையும் நடக்கும்! கடிதத்தின் சிறு பகுதியைப் படித்தவுடனேயே அக்கடிதத்தின் சாராம்சம் என்னவென்பதை உடனே கிரஹித்துக்கொண்டு விடும் திறன் படைத்தவராக ஆசார்யாள் திகழ்ந்தார். ஜகத்குரு எனும் மகுடம் இத்தகையதொரு திறமையாளரை அலங்கரித்ததில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது!

# 6

# ஆற்றிய அரும்பணிகள்

**பு**திதாக பீடத்தை அலங்கரித்த ஜகத்குருவை எதிர்நோக்கி ஏராளமான பணிகள் காத்திருந்தன. உதாரணமாக, அரசாங்கத்தின் வசம் இருந்த மடத்து நிர்வாகம் அவ்வளவு திருப்திகரமாக நடக்கவில்லை. மற்றும், மடத்தின் நிதி நிலைமையும் மிக மோசமாகவே இருந்தது. மடத்திற்கு தரிசனத்திற்காக வரும் பக்தர்கள் தங்குவதற்கான வசதிகளும் போதுமானதாக இல்லை. இவை தவிர புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டிய நிலையில் பற்பல ஆலயங்களும் கட்டிடங்களும் இருந்தன. மேலும் அகில இந்திய அளவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆசார்யாள் தங்களது இருப்பிடங்களுக்கு விஜயயாத்திரை செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்தனர். இத்தனை காரியங்களையும் தமக்கே உரித்தான தனித்ததொரு பாங்கில் நடத்தி முடிக்க ஆசார்யாள் முனைந்தார்.

பக்தர்களின் எதிர்பார்ப்பிற்கு அவர் முன்னுரிமை அளித்தார். இதன்படி 1956ம் ஆண்டு ஆசார்யாள் தமது முதலாவது தென்னிந்திய விஜயயாத்திரையைத் தொடங்கினார். கிராமம் கிராமமாக விஜயம் செய்த ஆசார்யாள் ஆயிரக்கணக்கான பக்தர்களை ஆசீர்வதித்து அருளினார். எத்தனையோ இடங்களில்

அவர் தங்குவதற்கான வசதிகள் மிக மிகக் குறைவாக இருந்தபோதிலும் அவர் அதையெல்லாம் பொருட்படுத்தவே இல்லை.

ஒரு தருணத்தில் வடஇந்தியாவிலுள்ள லங்கா என அழைக்கப்படும் ஓர் இடத்தில் அவர் முகாமிட வேண்டிய நிலை இருந்தது. அந்த இடத்திற்குச் செல்லும் முன்னர் கோதாவரி ஆற்றினைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. ஆயினும், இடைவிடாது பெய்த மழையால் ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஆகையால் இந்நிலையில் ஆற்றைக் கடக்க முயல்வது சரியான முடிவாக இருக்க முடியாது என்பது தீர்மானமாக, அங்கேயே ஓரிடத்தில் முகாம் இடுவது என முடிவாயிற்று. முன் அறிவிப்பு ஏதும் இன்றி முடிவெடுத்ததால் தேவையான வசதிகள் ஏதும் அங்கு இல்லை. சாதாரண குடில் ஒன்றுதான் இருந்தது. ஆயினும், அந்த ஒரே அறையுள்ள குடிலிலேயே முகாமிடப்பட்டு பூஜையும் முடிக்கப்பட்டது. அப்போது கனத்த மழை பெய்து கொண்டிருந்தது. பக்தர்களும் மடத்து சிப்பந்திகளும் ஆசார்யாளை அந்தக் குடிலுக்குள் தங்கிக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டனர். தாம் அந்தக் குடிலில் தங்கினால் மற்றவர்கள் அனைவருக்கும் தங்குவதற்கு வேறு எந்தவித வசதியும் இல்லாததால் அவர்கள் மழையில் நனைந்துகொண்டே இருக்க வேண்டியதுதான் என்பதை உணர்ந்துகொண்ட ஆசார்யாள் தம் பொருட்டு மற்றவர்கள் துன்பப்படுவதை விரும்பவில்லை. ஆகவே, ஆசார்யாள் மடத்து சிப்பந்திகளையும் மற்றவர்களையும் அந்தக் குடிலினுள் தங்கச் சொல்லிவிட்டு தாம் தம்முடைய காரில் உட்கார்ந்து கொண்டே இரவு முழுவதையும் கழித்தார். இந்த நிகழ்ச்சியானது, தமக்கு சிரமமாக இருந்தாலும் மற்றவர்களது சௌகரியமே தமக்கு முக்கியமானது என்று ஆசார்யாள் எண்ணி வந்ததைக் காட்டுகிறது.

தம்மை தரிசிக்க வரும் பக்தர்களின் உள்ளங்களில் தார்மீக இலட்சியங்களையும் ஆன்மிக நெறிகளையும் பரப்புவதில் ஆசார்யாள் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார். அவரது விஜய யாத்திரையின் போது ஆயிரக்கணக்கில்

உபந்யாசங்களைச் செய்தருளினார். அதாவது, எங்கெல்லாம் முகாம் இடுகிறாரோ அங்கு குறைந்தபட்சம் ஓர் அனுக்ரஹபாஷணமாவது நடந்துவிடும். தமது அனுக்ரஹபாஷணத்தின் போது பல்வேறு அம்சங்களை அவர் கையாண்டார். அவை அனைத்துமே ஆசார்யாள் ஏதோ தமது பாண்டித்தியத்தைக் காண்பித்துக் கொள்வதற்காக அருளப்பட்ட உபந்யாசங்கள் அல்ல. மற்றவர்கள் தங்களது வாழ்க்கையை நல்லபடியாக நடத்திக்கொள்ள வேண்டும் எனும் நோக்கத்தையே அவை கொண்டிருந்தன.

தர்மத்தைக் கற்றுத்தரும் ஒரு நல்ல ஆசிரியராக பணியாற்றுவதோடு மட்டும் ஆசார்யாள் நிறுத்திக் கொள்ளாமல் , ஒரு நல்ல மாணாக்கனாகவும் இருந்தார். விஜய யாத்திரை சமயத்தில் மடத்திற்கு உபயோகமான பற்பல விஷயங்களைக் கற்றுக் கொள்வதிலும் ஆசார்யாள் ஆர்வம் காட்டினார். குறிப்பாக கூறவேண்டுமாயின் விவசாய நுணுக்கங்களைப் பற்றி தெரிந்து கொள்வதில் ஆசார்யாளின் ஆர்வம் அதிகமாக இருந்தது. விவசாய நிலங்களை மற்றும் பண்ணைகளை வைத்துள்ள பற்பல பக்தர்களைச் சந்திக்க நேரும் போது அவர்களிடமிருந்து விவசாயம் பற்றிய பற்பல தகவல்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்வார். அவர்களும் மிக ஆர்வத்துடன் தமது குருநாதருக்கு இவ்விஷயத்தில் தங்களுக்குத் தெரிந்த அனைத்து வழிமுறைகளையும் தெரிவிப்பார்கள். தனிப்பட்ட ஆர்வம் மற்றும் கூர்மையான பார்வை போன்றவற்றின் மூலமே ஆசார்யாள் தமது அறிவை வளர்த்துக் கொண்டார். "சிறுவயது முதலே, ஒரு கருவி எப்படி வேலை செய்கிறது என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு அதை முழுவதுமாகக் கழற்றி, பரிசோதித்து, பிறகு மீண்டும் அதைப்பொருத்திவிடும் பழக்கம் எனக்கு இருந்தது" என்று ஆசார்யாள் ஒருமுறை குறிப்பிட்டிருக்கின்றார்.

1959ம் வருடம் அரசாங்கமே முன்வந்து மடத்தின் நிர்வாகப் பொறுப்பினை ஆசார்யாளிடமே அளித்துவிட்டது. அதன்பிறகு, உடனடியாக மடத்தின் மேம்பாட்டிற்காக தகுந்த திட்டங்களை ஆசார்யாள் வகுக்கத் துவங்கிவிட்டார். விருந்தினர் விடுதி ஒன்றை

மடத்தில் கட்டும் பணிகளைத் துவக்கி வைத்தார் ஆசார்யாள். மடத்து வளாகத்தில் உள்ள இடத்தைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் அங்கு இருந்த பற்பல சிறு ஆலயங்களை இடமாற்றம் செய்தார். மலஹானிகரேசுவரர் ஆலயத்திலிருந்த அம்பாள் மற்றும் கணபதி சன்னிதிகளைப் புதுப்பிக்க உத்தரவிட்டார். பகவத்பாதர் சன்னிதிக்கு புதியதொரு விமானமும் சாரதாம்பாள் ஆலயத்திற்கு ஒரு கோபுரமும் அவரது திட்டங்களில் அங்கம் வகித்தன.

'காகே ஹிண்டு' எனும் இடத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த மூங்கில் காட்டினை அகற்றி, அவ்விடத்தை ஒரு விளைநிலமாக உருவாக்க முடிவு செய்தார் ஆசார்யாள். இப்பணி துவங்கிய தருவாயில் அவர் விஜயயாத்திரை கிளம்பிவிட்ட போதிலும், இப்பணியைப் பற்றிய தகவல்களை கேட்டுப் பெற்று வந்த அவர், அப்பணி மேம்படும் வகையில் உபயோகமான பல ஆலோசனைகளையும் அருளி வந்தார். நாளடைவில் அவரது கனவு நனவாகியது. மூங்கில் காடு இருந்த இடம் பச்சைப்பசேல் என்ற விளைநிலமாக உருவெடுத்தது.

வெப்பம், குளிர், மழை என எதையும் பொருட்படுத்தாமல், நரசிம்மவனத்தின் அருகேயுள்ள நரசிம்மபுரம் எனும் இடத்தில் நடைபெற்று வந்த பணிகளை மேற்பார்வையிட ஆசார்யாள் அடிக்கடி சென்று வருவது வழக்கம். முட்கள் நிறைந்த இடங்களுக்குச் செல்லவும், பாம்புகள் இருக்கும் இடம் எனக் கருதிய பகுதிகளுக்குச் செல்லவும் ஆசார்யாள் என்றுமே தயங்கியதில்லை. அங்கு காணப்பட்ட மண்ணின் தன்மையை ஆராய்ந்த அவர் அங்கு தென்னங்கன்றுகளை நட உத்தரவிட்டார். ஆனால் அவ்வூர் மக்கள் தென்னைக்கு அவ்விடம் உகந்தது இல்லை என்று வெகுவாக நம்பினர். கடைசியில், ஆசார்யாளின் கணிப்பு சரியாகத்தான் இருந்தது. சிருங்கேரியில் முதல் தென்னந்தோப்பு அங்கே உருவாகியது. நாளடைவில் நரசிம்மபுரம் மற்றும் நரசிம்மவனத்தின் பல பகுதிகளை அலங்கரிக்கத் துவங்கிய தென்னை மரங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே

தேங்காய்களைக் கொடுத்தன. மரங்களையும் பயிர்களையும் பராமரிக்கும் விஷயத்தில் மிகுந்த அக்கறை காட்டிய ஆசார்யாள், பூச்சிக்கொல்லிகளைப் பற்றிய பல விவரங்களையும் சேகரித்து, அவற்றைத் தமது தோட்டங்களை பராமரித்து வந்த பணியாளர்களுக்கும் அளித்து வந்தார்.

நரசிம்மவனத்தில் காணப்படும் பாதைகளுக்கான இடங்களையும் அதன் அமைப்புகளையும் ஆசார்யாளே முடிவு செய்தார். நீர்ப்பாசனம் அத்யாவசியமாகியதால், தேவையான கால்வாய்களை உருவாக்கி, அவற்றில் உரிய வகையில் நீரோட்டத்தை உண்டாக்கும் விஷயங்களிலும் ஆசார்யாள் அதிக அக்கறை காட்டினார். சிருங்கேரியில் பருவகாலங்களில் கனத்த மழை பெய்வது வழக்கமென்றாலும், செயற்கை நீர்ப்பாசன முறைகளும் அவசியமே எனக் கருதிய ஆசார்யாள், நரசிம்மபுரம் தோப்பிற்குப் பெரிதும் பயன்படும் வகையில் சிறந்ததொரு கால்வாய் பாசன முறையை வடிவமைத்தார்.

கட்டிடம் ஒன்றை வடிவமைக்கத் திட்டமிடும் சமயங்களில், ‘அதில் தங்குவோரின் தேவைகள், இடம் வீணாகாமை, பல்வேறு குறிக்கோள்களை நிறைவேற்றுதல், பின்னர் அக்கட்டிடத்தை விரிவாக்கத் தேவையான வடிவமைப்பு மற்றும் குறைந்த கட்டுமானச் செலவு’ ஆகிய விஷயங்களுக்கு ஆசார்யாள் முக்கியத்துவம் அளிப்பார். “நான் பொறியியல் கல்வியைக் கற்றதில்லை. ஆயினும், உரிய முறையில் கேள்விகளை எழுப்பி, செயல்முறைகளை கவனித்து, அதன்படி பயிற்சி செய்து என் அறிவை வளர்த்துக் கொள்ள நான் என்றும் தயாராகத்தானிருக்கிறேன். ஆரம்ப காலங்களில் எனது கட்டுமான உத்திகளில் பிழைகள் இருந்து வந்தன. இதனால் பற்பல மாற்றங்களைச் செய்ய வேண்டி வந்தது; செலவும் சற்றே கூடியது. ஆயினும், இதனாலெல்லாம் மனந்தளராது நான் தொடர்ந்து விஷயங்களைக் கற்றுக்கொள்ள முனைந்தேன். தற்போது அம்மாதிரியான பிரச்சினைகள் எதுவும் வருவதில்லை” என்று ஆசார்யாள் கூறியுள்ளார்.

இவ்விடத்தில் நீர்த்தொட்டியை நிறுவுவது கடினம் எனக் கருதப்படும் இடங்களிலேயே அத்தொட்டியை வெற்றிகரமாக நிறுவும் முயற்சி, பிரவசன மந்திரத்திற்கான கூரை வடிவமைப்பு, மடத்து நிர்வாக அலுவலகத்திற்காக மிக அழகானதொரு கட்டிடம் ஆகிய பொறியியற் பணிகளுடன் மட்டுமே ஆசார்யாளின் வளர்ச்சித் திட்டங்கள் நின்றுவிடவில்லை. சிருங்கேரியிலிருந்த வேதபாடசாலையை புதுப்பித்து அங்கிருந்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பற்பல வசதிகளைச் செய்து கொடுத்தார் ஆசார்யாள். உலக ரீதியான கல்வியையும் ஆதரித்த ஆசார்யாள், சிருங்கேரியில் பெண் குழந்தைகளுக்கென ஒரு பள்ளியையும் நிறுவினார். காலடியில் செயல்பட்டு வந்த சங்கரா கல்லூரியின் போஷகராகவும் விளங்கினார் ஆசார்யாள். சிருங்கேரியில் 'சாரதா தன்வந்தரி' எனும் மருத்துவமனையை அவர் உருவாக்கி, சிருங்கேரிக்கும் சுற்றுப்புற கிராமங்களுக்கும் மருத்துவ உதவி கிட்டிட வகை செய்தார். தாம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் ஆசார்யாளே காரணம் என்று இவையெல்லாம் பறைசாற்றுகின்றன.

ஒரு தலைசிறந்த நிர்வாகியாகவும் ஆசார்யாள் திகழ்ந்து வந்தார். 1936ல் அரசாங்கம் எடுத்துக்கொண்ட மடத்து நிர்வாகத்தை, 1959ல் ஆசார்யாள் திரும்பப் பெற்றுக் கொண்டதே அவருடைய நிர்வாகத் திறமைக்கு ஒரு சான்றாகும். மடத்து நிர்வாகப் பொறுப்புகளை அரசாங்கம் திரும்ப அளித்துவிட்ட போதிலும், மடத்துக்குச் சொந்தமான ஜாகீர்களை தானே வைத்துக் கொண்டு விட்டது. மடத்திற்கு இது ஒரு பெருத்த இழப்புதான். ஏனெனில், சிருங்கேரியைச் சுற்றிலும் ஆறு மைல் சுற்றளவிலுள்ள நிலங்களிலிருந்து மட்டுமல்லாது, பல கிராமங்களிலிருந்தும் மடத்திற்கு வந்து கொண்டிருந்த வருமானம் முற்றிலும் நின்று போய், அதன் இடத்தில் இழப்பீடு என்ற பெயரில், அரசாங்கத்தால் ஒவ்வொரு வருடமும் தரப்பட்டு வந்த சில லட்ச ரூபாய்களை மட்டுமே வைத்துக்கொண்டு மடம் திருப்திபட்டுக் கொள்ள வேண்டியதாயிற்று. இவ்விஷயத்தை, மடத்து அதிகாரிகள் மிகவும் வேதனையுடன் ஆசார்யாளிடம் தெரிவித்த போது அவர்,

“பகவத்பாதாள் காலத்தில் இந்த ஜாகீர்களெல்லாம் இல்லவேயில்லையே. இவையெல்லாம் மடத்திற்கு தானமாகத் தரப்படுவதற்கு முன்னரும் மடம் நல்லபடியாகத்தான் இயங்கி வந்தது. அதே போல் இப்போதும் இயங்கி வரும். இது குறித்து கவலையேதும் கொள்ளத் தேவையில்லை,” எனப் பதிலளித்தார். அவரது எண்ணம் போலவே, பக்தர்களின் ஒத்துழைப்பு மற்றும் நன்கொடையினால் மடம் நல்லபடியாகவே இயங்கி வந்தது.

முதலில் ஒரு சிலரிடமே மையமாக இருந்துவந்த மடத்து நிர்வாக அதிகாரத்தை, ஆசார்யாள் பலருக்குப் பகிர்ந்தளித்து, நிர்வாகச் சிக்கல்களை அகற்றினார். நிர்வாக விஷயங்களில் பாரபட்சம் காட்டுவது ஒரு ஸ்தாபனத்தை திறம்பட நிர்வகிக்க இயலாததாகிவிடும் என்பதை நன்கு உணர்ந்திருந்த ஆசார்யாள், பாரபட்சத்திற்கு சிறிதும் இடம் கொடுக்கவில்லை. இது விஷயத்தில் யாருமே விதிவிலக்கில்லை!

எளிய வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையுமே ஒரு மஹானின் லட்சணங்களாக விளங்குகின்றன. ஆசார்யாளைப் பொறுத்தவரை தமது சொந்த வேலைகளைத் தாமே செய்துகொண்டு விடுவார். மிகவும்தேவைப்பட்டாலோ அல்லது மடாதிபதி எனும் ஸ்தானத்திலிருந்து ஆற்ற வேண்டிய பணிகள் விஷயத்திலோதான் அவர் மடத்து சிப்பந்திகளின் உதவியைப் பெற்றுக்கொள்வார். எதையும் முறைப்படி செய்வதில் ஆசார்யாளுக்கு நிகர் அவரேதான்.

ஒருமுறை பக்தரொருவர் ஆசார்யாளை அணுகி, “எனக்கு சிவபூஜை செய்யவேண்டுமெனத் தோன்றுகிறது. ஆகவே, முன்னர் நான் ஆசார்யாளிடம் சமர்ப்பித்திருந்த சிவலிங்கத்தை இப்போது திரும்பப் பெற்றுக்கொள்ளலாமா?” எனக் கேட்டுக் கொண்டார். உடனடியாக அந்த லிங்கத்தை எடுத்துவரச் செய்து அந்தப் பக்தரிடம் அதை அளித்த ஆசார்யாள், “நீங்கள் இதை என்னிடம் சமர்ப்பித்த போது, இது பின்னர் உங்களுக்கு வேண்டியிருக்கும் என நீங்கள் கூறவில்லை. இப்படிக் கூறியிருந்தீர்களானால் நான் இதைக் குறிப்பிட்டதொரு இடத்தில் வைத்திருந்திருப்பேன். நீங்கள் இந்த லிங்கத்தை என்னிடம் கொடுத்து இருபத்தியேழு

வருடங்களாகின்றன. ஆகவே, சிவபூஜை செய்ய விரும்பி என்னை அணுகியிருக்கும் ஏதாவது ஒரு பக்தருக்கு நான் இந்த லிங்கத்தைக் கொடுத்திருக்க வாய்ப்புகள் அதிகம். அதனால், எதிர்காலத்தில் நீங்கள் என்னிடம் சமர்ப்பிக்கும் எதையும் திரும்பப் பெற்றுக் கொள்ளும் யோசனை இருக்குமாயின், தயவுசெய்து என்னிடம் முன்னதாகவே தெரிவித்து விடுங்கள்'' என்று கூறினார்.

மிகச் சாதாரண விஷயங்களைக்கூட மிகத் துல்லியமாக நினைவுகூர ஆசார்யாளால் முடிவதைப் பற்றி அவரிடம் கேட்கப்பட்ட போது, ஆசார்யாள் கூறியதாவது: ''எனது முன்னிலையில் நடைபெறும் அனைத்து காரியங்களையும் நான் நினைவில் வைத்துக்கொள்வதுண்டு. உதாரணமாக, எனது முன்னிலையில் கட்டுமானப்பணி ஒன்று நடந்திருக்குமானால், அப்பணியின்போது எவ்வளவு ஆணிகள் பயன்படுத்தப்பட்டன என்பது மட்டுமல்லாது, ஒவ்வொரு ஆணியும் எத்தனை முறை அடித்து இறக்கப்பட்டது என்பதையும்கூட என்னால் மிகச் சரியாகக் கூற இயலும்.''

தவறு செய்த பணியாளரைத் தண்டிக்கும் விஷயத்தில்கூட ஆசார்யாளின் இரக்க குணமே மேலெழும். ஒருமுறை, மடத்து சிப்பந்தி ஒருவர் தமது பணியில் அலட்சியமாக இருந்து வந்த படியால், மடத்திற்கு கணிசமானதொரு இழப்பு உண்டாயிற்று. அப்போதைய மடத்து நிர்வாக அதிகாரியானவர், இழப்புத் தொகையை அந்த சிப்பந்தியின் மாதாந்திர சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ள முடிவு செய்தார். இதுபற்றிப் பின்னர் அந்த அதிகாரி ஆசார்யாளிடம் தெரிவித்தபோது, ஆசார்யாளோ இரக்கம் மேலிட்டவராக, ''தண்டனையளிக்க வேண்டியது அவசியம்தான். ஆயினும், நீங்கள் முடிவு செய்திருக்கும் சம்பளப் பிடிப்புத் தொகை அதிகப் படியானதாகும். அந்த சிப்பந்திக்கோ, அவரது குடும்பத்திற்கோ இதனால் துன்பமேதும் வராதிருக்க வேண்டுமென்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதுவரை ஓரளவிற்கு சம்பளப் பிடித்தத்தைச் செய்திருக்கின்றீர்கள். அதுவே போதுமானது. மேற்கொண்டு எதையும் பிடித்து அவரது குடும்பத்தைத் துன்பத்திற்குள்ளாக்க வேண்டாம்'' எனக் கூறிவிட்டார்.

சுயகௌரவமெதையும் பாராமல் பிறர்க்கு உதவி செய்வதற்கு ஆசார்யாள் எப்பொழுதும் தயாராகவே இருந்து வந்தார். ஆசார்யாளின் உதவியாளர்களில் ஒருவர் ஒருசமயம் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த வேளையில் அவரது உடலை ஏராளமான கொசுக்கள் மொய்த்தவண்ணம் இருந்தன. அதிகாலையிலேயே எழுந்திடும் வழக்கம் கொண்டிருந்த ஆசார்யாள் அன்றும் தமது உதவியாளர் விழிக்கு முன்பே எழுந்து தமது அறையை விட்டு வெளியே வந்த போது, அந்த நபரை கொசுக்கள் சூழ்ந்திருப்பதைக் கண்டார். தமது கைக்குட்டையை ஒரு விசிறியாகப் பயன்படுத்தி விசிறி அக்கொசுக்களை விரட்டிவிட்டு, பின்னர் அங்கிருந்து சென்றார். விசிறியதால் உண்டான காற்றானது அந்நபரை உறக்கத்திலிருந்து எழுப்பி விட்டது. எழுந்தவர், ஆசார்யாள் சென்று கொண்டிருப்பதைக் கண்டு, நடந்ததை யூகித்தவராய், திகைத்துப் போனார்.

மரங்கள், வயல்கள், தோட்டங்கள் மற்றும் காற்றுச் சூழலை பாதுகாத்தல் போன்ற பல விஷயங்களில் ஆசார்யாளுக்கு ஈடுபாடு இருந்து வந்தது. ஒருமுறை, பெங்களூர் மடத்தைச் சேர்ந்த தோட்டக்காரருக்கு ரோஜா செடிகளைப் பற்றிய சில ஆலோசனைகளை ஆசார்யாள் அளித்தார். அவர் கூறியவற்றைச் செயல்படுத்திய தோட்டக்காரருக்கு விரைவிலேயே நல்ல பலன் கிடைத்தது. ஆனால், அதற்கு முன்னரே ஆசார்யாள் பெங்களூரை விட்டுக் கிளம்பி சிருங்கேரி சென்றுவிட்டிருந்ததால், இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை ஆசார்யாளுக்குக் கூற இயலவில்லை. ஆயினும், மனம் தளராத அந்நபர் ரோஜாச் செடித் தொட்டிகளை மடத்து லாரியில் ஏற்றி, தாமும் அதிலேயே பயணித்து சிருங்கேரியை அடைந்தார். ஆசார்யாளின் இருப்பிடத்தை அவர் அடைந்த சமயம் ஆசார்யாள் சில பக்தர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். ரோஜா தொட்டியுடன் இந்நபர் வந்ததைக் கண்டதும், தமது ஆஸனத்திலிருந்து விரைந்து எழுந்த ஆசார்யாள் இவரை நோக்கி வந்தார். தொட்டியைக் கீழே வைக்கும்படி தோட்டக்காரரிடம் கூறிய ஆசார்யாள், பிறகு மிக வாஞ்சையுடன், செடியில் காணப்பட்ட ரோஜா மலரின் இதழ்களை தமது

மென்மையான விரல்களால் வருடி மகிழ்ந்தார். பிறகு அங்கு கூடியிருந்த பக்தர்களை அழைத்த ஆசார்யாள், அவர்களுக்கு அந்த மலரைப் பற்றி விளக்கிக் கூறினார்.

பக்தை ஒருவர் ஒருமுறை ஆசார்யாளுக்கு, மிக அரிய ரோஜாச் செடியொன்றை அர்ப்பணித்தார். இளஞ்சிவப்பு (Pink) நிறம் கொண்ட அம்மலர்களின் இதழ்கள் புள்ளிகளுடன் காணப்பட்டன. அச்செடியை வளர்ப்பது எவ்வளவு கடினமானது என்பதையும் அப்பெண்மணி ஆசார்யாளுக்கு எடுத்துரைத்தார். அவர் மறுமுறை சிருங்கேரிக்கு வருகை புரிந்த சமயம், அத்தகைய ரோஜா மலர்கள் நூற்றுக்கணக்கில் மடத்து தோட்டத்திலிருந்து பூஜைக்கு எடுத்துவரப்படுவதைக் கண்டு ஆச்சர்யப்பட்டார். இவர் வந்திருப்பதைக் கண்ட ஆசார்யாள், அம்மலர்களிலிருந்து இரண்டையெடுத்து தமது வசீகர புன்னகையுடன் இப்பெண்மணிக்கு கொடுத்தருளினார்.

பச்சைப்பசேலென விரிந்திருக்கும் நரசிம்மவனக் காட்டில் ஆசார்யாளுடன் நடந்து சென்றிடும் வாய்ப்பினைப் பெற்ற எவரும், சிருங்கேரிக்கென இயற்கை அன்னை வழங்கியுள்ள மனதைக் கொள்ளைகொள்ளும் காட்சிகளைக் காண்பதில் ஆசார்யாளுக்கு எந்த அளவிற்கு மகிழ்ச்சியுண்டாகியது என்பதை நன்றாக அறிவர். அம்மாதிரி காட்சிகளைக் காணும் சமயம் தமது இரு கரங்களையும் கூப்பியவாறே ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர் இயற்றிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் ஒன்பதாவது சுலோகத்தை ஆசார்யாள் கூறத் துவங்கிவிடுவார். இந்த சுலோகத்தில், இறைவனின் அம்சமாகவே இயற்கை போற்றப்பட்டுள்ளது.

# 7

# நிகரில்லா குரு

ஆசார்யாளின் வழிகாட்டுதலையும் கருணையையும் வேண்டி நாள்தோறும் பற்பல பக்தர்கள் வருவதுண்டு. இவர்களுள் ஆசார்யாள் தங்களது நோயினைத் தீர்க்கவல்ல தெய்வீக மருத்துவராகக் கருதி வருபவர்களும், தங்களுக்கு ஏற்பட்டுள்ள குடும்ப மற்றும் சமூக பிரச்சினைகளை ஆசார்யாளிடம் தெரிவித்து அதற்கானத் தீர்வினை அறிந்துகொள்ள விழைபவர்களும், ஆன்மிக மார்க்கத்தில் முன்னேற்றம் அடைய விரும்பி அதற்காக ஆசார்யாளின் வழிகாட்டுதலை நாடுபவர்களும், ஆத்ம ஞானமடையப்பெற்ற ஞானிகளும் ஆசார்யாளை தரிசனம் செய்வதற்கு வருபவர்களுள் அடங்குவர். இவர்கள் அனைவரிடத்திலுமே அவரவர் தேவைக்கேற்ப ஆசார்யாள் கருணை புரிவதுண்டு.

பக்தர்களை அனுக்ரஹிக்கும் விஷயத்தில் ஆசார்யாள் தமக்கென்று எவ்விதக் கட்டுப்பாடுகளையும் வைத்துக் கொள்வதில்லை. ஜாதி மத பேதமின்றி, சிரத்தையுடன் தம்மை நாடி வருவோர் அனைவருக்கும் ஆசார்யாள் அருள்பாலிப்பார்.

ஒருமுறை இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த இசைக் கலைஞர் ஒருவர் சிருங்கேரிக்கு வந்து, பரமாசார்யாளின் சன்னிதியில் தமது இசைக் கருவியைப் பயன்படுத்தி கீதம் இசைப்பதைக் கண்டார் ஆசார்யாள். அக்கலைஞரது சிரத்தையை மெச்சியவராய், தமது இரவு பூஜையின்போது அவரை வாசிக்கச் சொன்னார் ஆசார்யாள். இம்மாதிரியான இசை நிகழ்ச்சிகளெல்லாம் பொதுவாக வேதமந்திரங்களைக் கூறி முடித்தபின் உள்ள இடைவெளிகளின் சமயமே அனுமதிக்கப்படுவதுண்டு. ஆயினும் இந்தக் கலைஞர் விஷயத்திலோ, ஆசார்யாள் மந்திர உச்சாடனங்களை முழுவதுமாக நிறுத்தச் சொல்லிவிட்டு, பூஜை நேரம் முழுவதுமே அக்கலைஞரை இசைக்கச் சொன்னார். பூஜைக்கான மந்திரங்கள் முழுவதையும் ஆசார்யாள் தாமே மனதிற்குள் கூறியபடி பூஜையைச் செய்தார். தனக்குக் கிடைத்த அந்த எதிர்பாராத பாக்கியத்தைக் கண்ட அந்தக் கலைஞர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

ஆன்மிகப் பாதையில் செல்ல நாட்டமுடையோர்க்கு ஆசார்யாள் மிகுந்த முன்னுரிமை தருவதுண்டு. ஒருநாள் ஆசார்யாளுக்கு உடல்நலம் மிகவும் குன்றியிருந்தது. அதனால் ஆசார்யாள் தரிசனம் தரும் நேரமும் மிகவும் குறைக்கப்பட்டு இருந்தது. அப்பொழுது 20 வயது மதிக்கத்தக்க ஆன்மிக ஸாதகர் ஒருவர் நீண்ட தூரத்திலிருந்து ஆசார்யாளை தரிசிக்க சிருங்கேரி வந்திருந்தார். அவர் அடுத்த நாளே ஊர் திரும்புவதாகவும் கூறியிருந்தார். இதனை ஆசார்யாளிடம் தெரிவித்தபோது, உடனே அந்த இளைஞனை அழைத்த ஆசார்யாள், அவர் சொன்ன விஷயங்களையெல்லாம் பொறுமையோடு கேட்டுக்கொண்டு, அவர்க்கு உகந்த பல ஆன்மிக போதனைகளை தமக்கே உரிய கருணையோடு கூறி அவரை அனுக்ரஹித்தார்.

சீடர்களுக்கு மந்திர உபதேசம் செய்வதுடன் ஆசார்யாள் நிறுத்திக் கொள்வதில்லை. அவ்விஷயத்தில் அவர்களுக்கு உண்டாகும் சந்தேகங்களை தெரிவித்தால் மனப்பூர்வமுடன் அவைகளுக்கு விளக்கமருளுவார். உதாரணமாக, ஒரு சமயம், அன்பரொருவர் ஆசார்யாளை அணுகி குறிப்பிட்டதொரு

மந்திரத்திற்கான தியான ஸ்லோகத்தை விளக்கியருளுமாறு வேண்டிக் கொண்டார். தமது கண்களை மூடியபடி அந்த ஸ்லோகத்தை ஆசார்யாள் விளக்கத் துவங்கியவிதமானது என்னவோ ஆசார்யாள் அந்த தியான ஸ்லோகத்திற்கான தேவதையை நேரில் பார்த்தபடியே வர்ணித்துக் கூறுவது போலவே இருந்தது. ஆச்சர்யமடைந்த அந்த அன்பர் ஆசார்யாளிடம் "தங்களுடைய அற்புதமான இந்த விளக்கத்தைக் கேட்டபோது எனக்கு அந்த தேவதையை நேரிலேயே பார்ப்பது போல தோன்றியது" என்று கூறினார். அதற்கு ஆசார்யாள் அளித்த பின்வரும் பதில் அந்த அன்பரை மெய்சிலிர்க்க வைத்தது: "தியான ஸ்லோகத்தை வெறுமனே மொழிபெயர்ப்புச் செய்து கூறுவதற்கு நான் முனைந்தால், அதில் என்ன பயனிருக்கிறது? தியான ஸ்லோகத்தில் விவரிக்கப்பட்டுள்ள தேவதையின் உருவத்தை நான் எனது கண் முன்னே பார்த்தபடியேதான் உனக்கு விவரிக்கத் துவங்கினேன். அந்த தெய்வீக உருவத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் நன்கு கவனித்துக்கொண்டே உன்னிடம் அதை விவரித்துக் கொண்டிருந்தபடியால்தான் நான் மெதுவாக பேசிக் கொண்டிருந்தேன்."

ஆசார்யாளின் கருணையானது, உணர்ந்து வியக்கத்தக்க ஒன்றே தவிர வார்த்தைகளால் விவரித்துக் கூறவியலாத ஒன்றாகும்!

பல வருடங்களுக்கு முன், ஆசார்யாளைத் தரிசிக்க வந்த ஆயுர்வேத மருத்துவ நிபுணர் ஒருவர் தாம் உருவாக்கியிருந்த அரியதொரு களிம்பு ஒன்றை ஆசார்யாளின் பிரத்யேக உபயோகத்திற்கென அளித்தார். அம்மருந்தைத் தயாரிக்கும் முறையினை எவருக்கும் தெரிவிக்காது தம்முடனே ரகசியமாக வைத்துக்கொண்டிருந்த அந்நிபுணர் ஆசார்யாளிடம் அதை சமர்ப்பிக்கையில், "இம்மருந்து எப்பேர்ப்பட்ட காயத்தினையும் மிக விரைவில் ஆற்றிவிடும் வல்லமை படைத்தது" என்றும் தெரிவித்திருந்தார். களிம்பின் அளவு மிகக் குறைவாகவே இருந்ததால் மிக பத்திரமாக அதை வைத்து பாதுகாக்கப்பட

வேண்டியிருந்தது. ஒருநாள், மிகக் கடுமையான காயத்துடன் துடித்துக் கொண்டிருந்த நாய் ஒன்றினை ஆசார்யாள் காண நேர்ந்தது. யாரோ அதைக் கத்தியால் மிக ஆழமாகக் குத்தியிருப்பதை உணர்ந்த ஆசார்யாள், தாங்கவியலாத வலியில் அது துடிப்பதைக் கண்டு மனம் இளகியவராய், சற்றும் தாமதியாது, அந்த அரிய ஆயுர்வேத களிம்பினை எடுத்துவரச் செய்து அந்த நாயின் காயத்தின் மேல் தடவச் செய்தார். ஆசார்யாளின் எதிர்கால உபயோகத்திற்கென பிரத்யேகமாக அளிக்கப்பட்டிருந்த அந்த அரிய மருந்தானது நாயொன்றின் காயத்தைப் போக்குவதற்கென பயன்படுத்தப்படும் என்பதை யார்தான் எண்ணியிருந்திருக்க முடியும்? மேலும் ஓரிரு நாட்களுக்கு அம்மருந்து நாயின் காயம்பட்ட இடத்தில் தடவப்பட நாயின் காயம் மிக விரைவிலேயே மறைந்து அது பூரணமாக குணமடைந்தது. தமக்கென அளிக்கப்பட்டிருந்த அரியதொரு மருந்தினை அச்சிறு உயிரின் இன்னலைத் தீர்ப்பதற்கென கொடுத்தருளிய ஆசார்யாளின் கருணைதான் என்னே!

தமது பயண சமயங்களிலும்கூட, எவருக்கேனும் உதவி ஏதாவது தேவைப்படுகின்றதா என்பதை ஆசார்யாள் கவனித்து வருவதுண்டு. ஒரு தருணத்தில், நகரொன்றின் வீதியிலே ஆசார்யாள் தமது காரில் பயணித்துக் கொண்டிருந்தபொழுது ஓரிடத்தில் பிச்சைக்காரன் ஒருவன் வலிப்பு நோயினால் பீடிக்கப்பட்டவாறு தெருவில் விழுந்து கிடப்பதைக் கண்ட ஆசார்யாள் அவனுக்கு உதவும் பொருட்டு, காரை நிறுத்தச் சொன்னார். வாகன ஓட்டியோ, “இம்மாதிரியான காட்சிகள் அடிக்கடி நடக்கும் ஒன்றுதான். முக்கால்வாசி சமயங்களில் வீதியில் செல்வோரின் இரக்கத்தைச் சம்பாதித்து அவர்களிடமிருந்து பணம் பெறுவதற்காக சில பிச்சைக்காரர்கள் இப்படியெல்லாம் நடித்து ஏமாற்றுவதுமுண்டு” எனப் பதிலளிக்கவே, ஆசார்யாள் அதைக் கண்டுகொள்ளாதவராக, “அவன் ஏமாற்றுகிறானா இல்லையா என்பது பற்றியெல்லாம் எனக்குக் கவலையில்லை. அவனுக்கு நான் உதவத்தான் போகிறேன்” எனத் தீர்மானமாகக் கூறிவிடவே, காரும்

நிறுத்தப்பட்டது. இந்நிலையில் வலிப்பு நின்று, உணர்வு திரும்பிய அம்மனிதன் தற்போது தாகத்தினால் தவிப்பதை அறிந்துகொண்ட ஆசார்யாள், கணமும் யோசிக்காது, உடனடியாக தமது உபயோகத்திற்கென காரில் வைக்கப்பட்டிருந்த குடிநீரை அம்மனிதனின் தாகத்தைத் தீர்ப்பதற்காகக் கொடுத்தனுப்பினார். இதற்கிடையில், அந்தப் பக்கமாக வந்த மற்றொரு கார் இம்மனிதனருகே நின்றதுடன் அதை ஓட்டி வந்தவர் உடனடியாக நீரை எடுத்துக் கொண்டு அம்மனிதனிடம் ஓடி, அவனுக்கு அதை அளித்து அவனது துன்பத்தைத் தீர்த்து வைத்தார். ஆக, ஆசார்யாள் அனுப்பிய குடிநீர் அம்மனிதனுக்கு அளிக்கப்படாமலே போய்விட்டது. மேற்கொண்டு பயணத்தைத் தொடர்ந்த ஆசார்யாள், உடன் வந்தவர்களிடம், "அந்தக் காரை ஓட்டி வந்தவர்தான் எவ்வளவு பாக்கியசாலி! நோய்வாய்ப்பட்ட அம்மனிதனுக்கு உதவும் பாக்கியம் அவருக்குக் கிடைத்துவிட்டது. பிறர்க்கு உதவ ஒரு சந்தர்ப்பம் கிடைத்தும் அதைப் பயன் படுத்திக்கொள்ள முடியாத நான் ஒரு துரதிர்ஷ்டசாலியே" என மனம் வருந்திக் கூறினார்.

'செய்நன்றியறிதல்' என்பது ஆசார்யாளின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பல பாடங்களில் ஒன்று. நமது குருவிற்கு தர்க்க சாஸ்திர பாடங்களைக் கற்றுத் தருவதற்காக ஸ்ரீராமச்சந்திர சாஸ்திரிகள் என்பவரை பரமாசார்யாள் நியமித்தார். பாடங்கள் யாவும் பரமாசார்யாள் காலத்திலேயே முடிந்து விட்டன. பரமாசார்யாளுக்குப் பிறகு பீடத்தின் பொறுப்பை ஏற்ற ஆசார்யாள், மிக்க புலமை வாய்ந்த ஸ்ரீராமச்சந்திர சாஸ்திரிகளை 'ஆஸ்தான வித்வான்' என்ற ரீதியில் மட்டுமின்றி தமது ஆசிரியர் எனும் பாவனையுடனே ஆசார்யாள் மதித்து வந்தார். ஸ்ரீ சாஸ்திரிகளுக்கு ஏதேனும் விஷயங்களைத் தெரிவிக்க வேண்டியிருக்கும் சமயங்களில் தமது கைப்பட தாமே அவருக்குக் கடிதங்களை எழுதியனுப்பினார். அக்கடிதங்களில் ஸ்ரீ சாஸ்திரிகளை உபாத்யாயர் (ஆசிரியர்) என்றே நம் ஆசார்யாள் குறிப்பிட்டும் வந்தார்.

லௌகிகமான மிகச் சாதாரண விஷயங்களில்கூட ஆசார்யாளின் காரியங்கள் மிக நேர்த்தியாகவே இருந்து வந்தன. உதாரணமாக, தரிசனத்திற்காக அமர்ந்திருக்கையில் சில சமயம் ஆசார்யாள் தமது கைக்குட்டையை மடித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். முழுவதுமாக மடிக்கப்பட்டவுடன் அதைப் பார்த்தால், துணியின் ஓரங்கள் எல்லாம் ஒன்றாய் இணைந்திருக்கும் - என்னவோ அது அப்போதுதான் இஸ்திரி போடப்பட்டு வந்தது போலவே காட்சியளிக்கும்! கசங்கல் என்பது அதில் ஒரு சிறிதும் தெரியாது! ஆசார்யாள் அதை கையால் மடித்து வைத்ததைப் பார்த்திராத ஒருவர்க்கு அது என்னவோ கிரமமாக இஸ்திரி செய்யப்பட்ட பிறகே ஆசார்யாளிடம் வந்திருப்பதாகவே தோன்றும். இத்தனைக்கும் ஆசார்யாள் அதை மடித்து வைக்கும் விஷயத்தில் விசேஷ கவனம் எதையும் செலுத்துவதில்லை. பல சமயங்களில் பிறருடன் பேசிக் கொண்டிருக்கும் போதும், அல்லது பிறர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதும்கூட சகஜமாக தமது கைக்குட்டையை மடித்து வைப்பார். கசங்கிய துணியை பிறர் மடித்து வைப்பதைப் போலவேதான் ஆசார்யாளும் தமது கைக்குட்டையை மடித்து வைப்பார் என்றாலும், ஆசார்யாளின் மடிப்பில் அசாதாரணமான நேர்த்தி இருக்கும்! ஆப்பிள் பழமொன்றின் தோலை ஆசார்யாள் கத்தியால் சீவிடும் போது சரியாக தோல்பகுதி மட்டும் வெளியேறுமே தவிர, சதைப்பகுதியின் ஒரு சிறிதும் வெட்டப்பட்டு வெளியேறாது! இத்தனைக்கும் பழத்தோலை பெரும் கவனத்துடன் சீவிடும்போது தான் இப்படி நடக்கும் என்பதில்லை. சர்வ சாதாரணமாகவே ஆசார்யாள் இக்காரியத்தைச் செய்வார். ஆயினும் அது மிக நேர்த்தியாகவே அமையும். சில சமயம் ஆசார்யாள் ஆப்பிள் பழத்தைத் துண்டுகளாக வெட்டி தமது சிப்பந்திகளுக்கு விநியோகிப்பது உண்டு. அனைத்துத் துண்டுகளுமே சம அளவு கொண்டதாகவே இருக்கும்!

ஆசார்யாள் சிருங்கேரிக்கு வந்தபோது அவருக்கு நீச்சல் தெரியாது. ஆனால் சிறிது சிறிதாக நீச்சலைக் கற்றுக்கொண்டு அதில் மிகுந்த தேர்ச்சியையும் அடைந்தார். ஒரு மீனைப் போல் மிக

அழகாக நீந்துவார். காட்டாற்றின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க, இவருக்கு நீரின்மேல் உள்ள ஆசையும் அதிகரிக்கும். மழைக்காலங்களில் துங்காநதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். அம்மாதிரியான தருணங்களிலும்கூட, உயர்ந்த மரக்கிளைகளில் ஏறி அங்கிருந்து துங்காவில் குதித்து நீண்ட தூரம் நீந்துவது என்பது அவருக்கு மிகவும் பிடிக்கும். பல ஆபத்தான சூழ்நிலைகளை சந்திக்கவும் ஆசார்யாள் தயங்கியதில்லை.

அகில இந்திய விஜயயாத்திரையின் போது, கங்கையின் வெண்மை நீரும் யமுனையின் கருமை நீரும் சேரும் பிரயாகைக்கு ஆசார்யாள் படகில் ஏற்றிச் செல்லப்பட்டார். நீர் பரப்புக்குக் கீழே மிக வலிமை வாய்ந்த நீரோட்டம் கொண்ட அந்த இடத்தில் ஆசார்யாள் குதித்தார். நீரோட்டத்தின் சக்தியை உணர்ந்த ஆசார்யாள் சிறிது நேரத்தில் மீண்டும் படகில் ஏறிக்கொண்டார். தம்முடன் வந்திருந்த சிலருக்கு நீச்சலில் அவ்வளவு அனுபவம் இல்லையென உணர்ந்த ஆசார்யாள் அவர்களை நீரில் குதிக்க வேண்டாம் எனவும், மீறிச் சென்றால் விபரீதமாகி விடும் என்றும் எச்சரித்தார். நமது நாட்டின் பல்வேறு நதிகளிலும் கடல்களிலும் குளிப்பதற்கு கிட்டிய வாய்ப்பை ஆசார்யாள் என்றுமே நழுவவிட்டது கிடையாது.

தாம் கற்றறிந்து கொண்டதைத் தம்முடனேயே வைத்துக் கொள்வதை ஆசார்யாள் என்றுமே விரும்பியதில்லை. தர்க்க சாஸ்திரத்தை பலருக்கும் கற்றுக் கொடுத்திருக்கிறார். வேதாந்த விளக்க வகுப்புக்களை நடத்துவதில் ஆசார்யாளுக்குப் பெரிதும் விருப்பம் இருந்தது. பாடங்களில் சந்தேகங்களை எழுப்புவோரைப் பெரிதும் வரவேற்கும் ஆசார்யாள், அச்சந்தேகங்களை நீக்கும் விஷயத்தில் பல்வேறு நூட்களைத் தருவிக்கவும் தயங்கியதேயில்லை. தாம் நடத்திய வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்புகின்ற அனைவரையும் அவர் அனுமதித்தே வந்தார். இது குறித்து ஒருமுறை அவர் குறிப்பிடுகையில், “சாஸ்திர விஷயங்களைக் கேட்பதே பெரும் புண்ணியத்தைத் தருகின்றது என்பதால் எனது வகுப்புகளுக்கு வந்திருந்து சாஸ்திர

வாக்கியங்களைக் கேட்க விரும்புபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான அவசியம் இல்லை என்றே எண்ணுகிறேன். ஓர் உதாரணத்திற்கு, சுமார் இருபது நபர்கள் எனது வகுப்பிற்கு வருவதாக வைத்துக்கொள்வோம். அவர்களுள் குறைந்தது ஓரிரு பேராவது சாஸ்திர பாடங்களை மிகக் கவனத்துடனும் ஆர்வத்துடனும் கவனித்து, அதன் மூலமாக விசேஷ பலன்களை அடையும் வாய்ப்பு உண்டாகும் அல்லவா?" என்றார்.

ஆசார்யாளின் பல உபந்யாஸங்கள் அவர்தம் ஆத்மானுபவத்தின் முத்திரையுடனேயே விளங்கின. 'சாஸ்திர விதிகளை சிரத்தையுடன் கடைப்பிடிப்பவர்களே அவற்றைப் பற்றி உபதேசிக்கும் தகுதியுடையவர்கள்' என ஆசார்யாள் பெரிதும் கருதியதால், தமது அனுஷ்டான நியமங்களை மிகுந்த சிரத்தையுடன் செய்து வந்தார். சூரிய உதயத்திற்கு முன்பாகவே எழுந்துவிடும் ஆசார்யாள், நீராடி முடித்து தமது காலை அனுஷ்டானங்களைச் செய்யத் துவங்கி விடுவார். இது முடிவதற்கு காலை 9 மணி ஆகிவிடும். அதன் பிறகே தரிசனம் தருவார். தீர்த்தப் பிரஸாதத்தை அளித்து முடித்து, பக்தர்கள் செய்யும் பாதபூஜை மற்றும் பிக்ஷாவந்தனத்தை ஏற்று முடிக்கையில் மதியம் துவங்கிவிடும். பிறகு, நீராடி, தமது மதிய வேளைக்கான அனுஷ்டானத்தைச் செய்து முடிப்பார். அதன் பிறகே தமது உணவை உட்கொள்வார். மாலையில் தவறாது நீராடி, தமது மாலைநேர அனுஷ்டானத்தைச் செய்து முடிப்பார். தர்மத்தைத் தாமும் கடைப்பிடித்து பிறருக்கும் எடுத்துச் சொல்ல இப்படிப்பட்ட ஆசார்யாளைவிட சிறந்த வேறு ஒருவரை நினைத்துப் பார்க்கவும் முடியுமா?

ஆசார்யாள் தமது சீடர்களுக்கு உபதேசிக்கும் முறைகள் மிக அலாதியானவை. அவை ஒவ்வொன்றும் சம்பந்தப்பட்ட சீடருக்கு மிகவும் பொருத்தமானதாகவே அமைந்திருக்கும். இளம் வயதினரான சீடர் ஒருவர் தாம் பணி செய்து வந்த நிறுவனத்தில் தமக்குக் கீழ் பணியாற்றி வந்த ஊழியர்களிடம் குறைபாடுகள் ஏதேனும் காணப்பட்டால் அவர்களை மிகவும் கடிந்து கொள்வது

வழக்கம். அவ்வூழியர்களில் சிலர் வயதில் இவரைவிட மூத்தவர்கள்; இவருக்குத் தந்தையாக இருக்குமளவிற்கு வயது கொண்டவர்கள். இவர்களையும் கடிந்து கொள்வதென்பது இவர்களை அவமதிப்பது போலல்லவா ஆகிறது என்னும் தீராத மனக்குழப்பம் அந்த சீடருக்கு ஏற்பட்டுவிட, இது குறித்து தமது குருநாதரிடம் தெரிவித்து உரிய தீர்வினைப் பெற்றுக்கொள்ள விரும்பி அவர் சிருங்கேரிக்கு வந்தார். ஆசார்யாளை இவர் தரிசித்த சமயம், இவர் ஏதும் பேசுவதற்கு முன்னரே தமது இருக்கையிலிருந்து திடீரென எழுந்துகொண்ட ஆசார்யாள், தம்மைப் பின்தொடருமாறு இவருக்குச் சைகை காட்டிவிட்டு வேகமாக நடக்கத் துவங்கினார். சற்றுநேரத்தில் இருவரும், புதிதாக கோபுர வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சாரதாம்பாள் ஆலயத்தை அடைந்தனர். அங்கே கோபுரப் பணியைச் செய்யாமல் சிலர் வீணாக ஏதேதோ பேசிப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தனர். பணிகளுக்கென அமைக்கப்பட்டிருந்த மரப் படிகளின் வழியாக லாவகமாக விரைந்து ஏறிய ஆசார்யாள், கோபங்கொண்டவராய் கடுஞ்சொற்களால் அவ்வூழியர்களை சினந்துகொள்ள, அவர்களனைவரும் உடனடியாக தத்தம் பணிகளைச் செய்யத் துவங்கிவிட்டனர். கோபம் சற்றும் குறையாத முகத்துடன் அங்கிருந்து கீழிறங்கி ஆசார்யாள் நடக்கத் துவங்க, இந்தச் சீடரும் அவரைப் பின்தொடர்ந்தார். சற்று தூரம் சென்ற ஆசார்யாள் நின்று, திரும்பி இவரைப் பார்த்தார். ஆசார்யாளின் முகத்தைப் பார்த்த இந்த சீடருக்கோ பேராச்சர்யமே ஏற்பட்டது. ஏனெனில், சற்று முன்பு ஆசார்யாளின் முகத்தில் தெரிந்த கோபப் பிழம்பு தற்போது இருந்த சுவடு தெரியாமல் மறைந்துபோய், முகத்தில் அமைதி பொங்க காட்சியளித்தார் ஆசார்யாள்! அலுவலகப் பணிகளைச் செயற்படுத்தும்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை அந்தப் பக்தர் அன்று ஆசார்யாளிடமிருந்து சொற்களின் பரிமாற்றம் ஏதுமின்றியே கற்றுக் கொண்டார்.

பொறியியல் கல்வியை மேற்கொண்டிருந்த இளம் வயதினரான சீடர் ஒருவர் தமது இறுதியாண்டில் (Honours elective) விருப்பப்பாட தேர்வினை எழுத வேண்டியிருந்தது.ஆயினும்

திடீரென அந்தச் சீடருக்கு ‘ஏற்கெனவே உபயோகமற்ற B.E. என்ற இரண்டெழுத்து சான்றிதழுக்காக ஐந்து வருடங்களை ஒருவன் செலவழிக்கிறான். இன்றைய தேர்வின் பலனாகக் கிடைக்கப்போவ தென்னவோ B.E. என்ற இரண்டெழுத்துக்களுடன் Honours என்பதான சில கூடுதல் எழுத்துக்களே. இதனால் பெரிதாக என்ன சாதிக்கப்படப் போகிறது?’ எனும் எண்ணம் தோன்றியது. ஆகவே, இந்தத் தேர்வினை எழுதாமல் விட்டுவிட்டு சிருங்கேரிக்கு கிளம்பிவிட எண்ணிய அவர், அதற்கான அனுமதியை ஆசார்யாளிடம் கோரியபோது, அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. பின்னர், அவர் ஆசார்யாளை தரிசனம் செய்த சமயம், ஆசார்யாள் அவரிடம் கூறியதாவது: “நீ அந்தத் தேர்வினை எழுதாமல் விட்டுவிடக்கூடாது என்பதால்தான் உன்னை சிருங்கேரிக்கு உடனே வரவேண்டாம் என்று சொன்னேன். எடுத்துக் கொள்ளப்பட்ட எந்த ஒரு பணியையும், அது முக்கியமானதோ அல்லது முக்கியமற்றதோ, நாம் செய்து முடித்து விடுவதுதான் நல்லது.”

ஆசார்யாளுக்கெனச் செய்யப்படும் எந்தவொரு நல்ல காரியத்தையும் அது அளவில் சிறியதாயினும் சரி பெரியதாயினும் சரி, ஆசார்யாள் அதை என்றும் மறப்பதேயில்லை. சென்னையில் ஆசார்யாள் முகாமிட்டிருந்த சமயம், அவரை தரிசித்த பக்தையொருவர் குறிப்பிட்டதொரு கோவிலுக்கு ஆசார்யாள் விஜயம் செய்யவிருக்கும் சமயத்தில், கோவிலின் அருகே உள்ள தன்னுடைய இல்லத்திற்கும் வந்தருளுமாறு வேண்டிக் கொண்டார். அது தம்முடைய நிகழ்ச்சி நிரலில் இல்லாதபோதும், அந்தப் பக்தையின் பிரார்த்தனைக்கிரங்கிய ஆசார்யாள் அவரது இல்லத்திற்கு விஜயம் செய்து அவரையும் அவரது குடும்பத்தினரையும் ஆசீர்வதித்தார். இதனால் மிகவும் ஆனந்தமடைந்த அந்தப் பக்தை தமது நன்றியுணர்ச்சியை சிறிதளவிலேனும் ஆசார்யாளுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பி, பின்னர் ஆசார்யாளை தரிசனம் செய்யும் வாய்ப்புக் கிட்டிய சமயம், சர்க்கரை நிரம்பிய சிறியதொரு வெள்ளிக் கோப்பையை ஆசார்யாளிடம் சமர்ப்பித்தார். பெருமனதுடன் அதை

ஏற்றுக்கொண்ட ஆசார்யாள் அந்தப் பக்தையிடம், "உங்களுடைய பக்தி என்னை மிகவும் சந்தோஷப்படச் செய்தது. அதனால் இந்த மாதிரியான எந்தவொரு காணிக்கையும் இன்றியே உங்களது இல்லத்திற்கு நான் வருகை புரிந்திருப்பேனம்மா" எனக் குறிப்பிட்டார். மற்றொரு சமயம் இந்தப் பக்தை ஆசார்யாளை தரிசனம் செய்ய சிருங்கேரிக்குச் சென்றிருந்தபோது, கூடியிருந்த பக்தர்களிடம் இவரைச் சுட்டிக்காட்டி ஆசார்யாள் கூறியதாவது: "நான் இவர்களது வீட்டிற்கு வந்தேன் என்பதற்காக ஒரு பெரிய வெள்ளிப்பாத்திரத்தை மடத்திற்கு காணிக்கையாக இவர் கொடுத்துவிட்டார்." அப்பெண்மணி கொடுத்ததோ ஒரு சிறிய டம்ளர். ஆனால் ஆசார்யாள் அதை ஏற்றுக்கொண்டதோ, ஒரு வெள்ளிப் பாத்திரமாக! இந்தப் பெண்மணி மறுமுறை சிருங்கேரிக்குச் சென்றிருந்த சமயத்திலும்கூட ஆசார்யாள் இவரது தாராள மனப்பான்மையைப் பற்றி வெகுவாக உயர்த்திப் பேசினார். ஸ்படிகம் போன்ற தூய மனத்தினரான நமது குருவால் மகாபாரத யுதிஷ்டிரரைப் போல, பிறரிடமுள்ள நல்ல குணங்களை மட்டுமே கவனிக்க முடிந்தது.

# 8

# மஹா சமாதி

*சி*ருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 35வது ஜகத்குருவாக 1954ம் வருடம் பொறுப்பேற்றுக் கொண்டது முதல் மடத்தின் மேம்பாட்டிற்காகவும் மற்றும் ஸனாதன தர்ம பிரச்சாரத்திற்காகவும் இடைவிடாது கடினமாக உழைத்து வந்த ஆசார்யாள் பற்பல அரிய விஷயங்களைச் சாதித்து முடித்தார். உதாரணமாக, காஷ்மீரிலிருந்து கன்யாகுமரி வரையிலான அகில இந்திய விஜய யாத்திரையை இருமுறை மேற்கொண்டதுடன், பற்பல சிறிய அளவிலான யாத்திரைகளையும் செய்து, ஆஸ்திக ஜனங்களை ஆசீர்வதித் தருளினார். இவ்விஜய யாத்திரைகளின் விளைவாக, ஆசார்யாளை சந்திக்க நேர்ந்த பற்பல மதத்தலைவர்கள் அவரது கருணாமயமான தோற்றத்தாலும், அன்பான அணுகுமுறையினாலும் கவரப்பட்டவர்களாக அவருடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

சிருங்கேரியிலும் பற்பல மகத்தான பணிகளை ஆசார்யாள் செய்து முடித்தார். உதாரணமாக, பரமாசார்யாள் அதிஷ்டான ஆலயம், சாரதாம்பாள் கோவிலுக்கு ராஜகோபுரம், சகல

வசதிகளுடன் கூடிய மருத்துவமனை, மலஹானிகரேசுவரர் கோவிலின் புனர் நிர்மானம் மற்றும் கும்பாபிஷேகம் எனப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

1974 ம் வருடம் நவம்பர் மாதம் 11ம் தேதியன்று தமது வாரிசாக ஒரு சீடரை ஆசார்யாள் தேர்ந்தெடுத்து அவருக்கு 'ஸ்ரீ பாரதி தீர்த்தர்' எனும் யோகப்பட்டத்தைச் சூட்டினார். (ஸ்ரீ ஸ்ரீ பாரதி தீர்த்த மஹாஸ்வாமிகளே சிருங்கேரி சாரதா பீடத்தில் 36வது பீடாதிபதியாக தற்போது அலங்கரித்து வரும் ஜகத்குரு.) குருவும் சீடருமாகச் சேர்ந்து பற்பல இடங்களுக்கு விஜய யாத்திரை செய்து தர்ம பிரச்சார பணிகளை மேற்கொண்டனர். தமது சீடரான ஸ்ரீ பாரதி தீர்த்தரைப் பற்றி ஒருமுறை குறிப்பிடுகையில் ஆசார்யாள் பின்வருமாறு கூறினார். "1982-ல் நான் டெல்லியில் முகாமிட்டிருந்த சமயம், எனது சீடரும் என்னுடன் வந்திருந்தார். ஒரு சீடரானவர் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமோ அவ்விதமே அவர் நடந்து கொண்டார். வித்வத் சதஸ் (வித்வான்கள் சபை) சமயத்தில் அங்கு கூடியிருந்த பண்டிதர்களைக் காட்டிலும் தமக்கு அதிக ஞானம் உள்ளது என்பதை அவர் நிரூபித்துக் காட்டினார்." மேலும், பிறிதொரு உபந்யாசத்தின்போது ஆசார்யாள் குறிப்பிட்டதாவது: "எப்படி சுடர் விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஒரு தீபமானது மற்றொரு தீபத்தை ஏற்றி தன்னைப் போல் மற்றதையும் பிரகாசிக்கச் செய்கிறதோ அதேபோல் சிருங்கேரி குரு பரம்பரையில் வரும் ஒவ்வொரு குருவும் பரம்பரையின் பாரம்பர்ய மகத்துவத்தைத் தமது சீடருக்கு அளித்து அவரையும் தம்மைப் போலவே பிரகாசிக்கச் செய்கிறார்."

ஆசார்யாள்ஆரம்பித்த பல்வேறு காரியங்களில் துங்கா நதியின் குறுக்கே பாலம் ஒன்றினை அமைப்பதும் அடங்கும். ஒரு சமயம் இதுபற்றி புகழ்பெற்ற கட்டுமான நிறுவனம் ஒன்றின் இயக்குநர் ஒருவருடன் ஆசார்யாள் உரையாடிக் கொண்டிருந்தார். அதுசமயம் ஆசார்யாள், இந்திய நாட்டில் உள்ள புகழ்பெற்ற பல்வேறு பாலங்களைப் பற்றிக் குறிப்பிட்டதோடு, அமெரிக்கா,

இங்கிலாந்து, ஃப்ரான்ஸ் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளில் உள்ள பாலங்களின் சிறப்பம்சங்களைப் பற்றியும் எடுத்துக் கூறினார். இத்துடன் நில்லாது, தமது ஊழியர் ஒருவரை அனுப்பி புகைப்பட ஆல்பம் ஒன்றினை எடுத்து வரச்செய்து, அதில் தாம் அதுவரை சேகரித்து வைத்திருந்த பற்பல பாலங்களின் புகைப்படங்களையும், அவற்றின் புள்ளி விவரங்களோடு அந்நிறுவன இயக்குநரிடம் காண்பிக்கவே, அவரோ ஆசார்யாளின் சிரத்தையையும் செயல் தூய்மையையும் கண்டு மிகவும் வியந்து போனார். இது போன்று எந்த ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அது சம்பந்தப்பட்ட சகல விவரங்களையும் தெரிந்துவைத்துக்கொள்ளும் மனப்பாங்குடனே ஆசார்யாள் திகழ்ந்து வந்தார்.

தமது ஸ்தூல உடலின் மூலம் தாம் செய்து வரும் பணிகள் நிறைவு பெறும் காலம் நெருங்கி வருவதை ஆசார்யாள் சூசகமாக உணர்த்தத் துவங்கினார். ஒருமுறை அவர் தமது உதவியாளரிடம், "நான் 1992-ம் வருடம் வரை இருக்க நேர்ந்தால், மருத்துவமனை, துங்கையின் குறுக்கே ஒருபாலம் எனப் பற்பல காரியங்களை மடத்திற்கெனச் செய்து முடிக்க முடியும். பாலத்தைப் பார்க்க நான் இருப்பேனோ இருக்க மாட்டேனோ" என்று கூறினார்.

ஆசார்யாளின் உபந்யாஸங்களும் தமது ஸ்தூல உடலை துறந்துவிடும் நேரம் நெருங்கி வருகிறது என்பதை சூசகமாக உணர்த்தும் வண்ணமே அமைந்திருந்தன. உதாரணமாக, 1986-ம் வருடம் ஆசார்யாள் சென்னைக்கு விஜயம் செய்திருந்த சமயம் அருளிய உபந்யாஸம் ஒன்றில், "பிரம்மமானது அறிவு வடிவில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. எவர் இதை தமது அனுபவத்தில் பரிபூரணமாக உணர்ந்து கொள்கின்றாரோ, அவர் மனிதப் பிறவியை எடுத்ததன் முழுப் பயனையும் அடைந்து விடுகிறார். சாஸ்திரங்களும் இதையே கூறுகின்றன. அனுபவமும் கூட இப்படித்தான் இருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு பிரம்மத்திலேயே நிலைத்திருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு

நமக்கு, ‘பிரபஞ்சத்தில் பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அவ்வளவும் வெறும் மாயை விளையாட்டு’ எனத் தோன்றும்” எனக் குறிப்பிட்டார். 1989ம் வருடம் ஜூலை மாதம் பெங்களூரில் அவர் அருளிய உபந்யாஸமானது ஒரு ஞானியின் நிலையிலிருந்து பேசப்பட்டதாக அமைந்திருந்தது. ஆசார்யாள் தாம் நிகழ்த்திய உபந்யாஸங்களைப் பற்றி கருத்து தெரிவிப்பது என்பது ஓர் அரிய நிகழ்ச்சியாகும். ஆனால் இந்த உபந்யாஸத்தைப் பற்றி 1989-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சிருங்கேரியில் ஒரு சீடரிடம் ஆசார்யாள் நினைவு கூர்ந்து, “நான் பெங்களூரில் இருந்த சமயம் ஒருநாள் ‘பாரதீய வித்யாபவன்’ என்ற இடத்திற்குச் சென்றது ஞாபகமிருக்கிறது. அன்று காலை நான் நீண்ட நேரம் நிர்விகல்ப சமாதியில் அமர்ந்திருந்தேன். வழக்கமான காரியங்களில் நான் ஈடுபட்டிருந்தபோதிலும் அன்றைய தினம் குறிப்பிடும் அளவிற்கு என் மனம் உள்நோக்கியிருந்தது. அதனால்தானோ என்னவோ அன்றைய உபந்யாசத்தின்போது தத்துவத்தை அறிந்த ஒருவரின் நிலையைப் பற்றியும், நிர்விகல்ப ஸமாதியைப் பற்றியும் பேசினேன் போலும். இத்தகைய ரீதியில் இனி நான் பேசப் போவதில்லை என்னும் உணர்வு எனக்கு இப்பொழுது ஏற்படுகிறது” என்று தமது கருத்துக்களைத் தெரிவித்தார்.

1989-ம் வருடம் செப்டம்பர் மாத இரண்டாம் வாரத்திலிருந்தே ஆசார்யாளின் உடல் நலம் குன்றத் துவங்கியது. இச்சமயத்தில் அவர் தமது காரியதரிசியிடம் மோஹமுத்கரம் (பஜகோவிந்தம்), சிவமானஸ பூஜா ஸ்தோத்திரம், ப்ரஹ்மானுசிந்தனம் முதலான சுலோகங்களை தமக்கு வாசித்துக் காட்டுமாறு கூறினார். “உடல் நலம் குன்றிய சமயங்களில் வருந்தி புலம்புவதற்குப் பதிலாக இம்மாதிரியான புனித நூட்களைப் படிப்பது நலம் பயக்கும். இதைத்தான் எனது குருநாதர் எனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். இப்போது அவற்றை நானே படித்துக் கொள்ள இயலாத நிலையிலிருப்பதால், நீ எனக்கு வாசித்துக் காட்டுவாயாக” என்று ஆசார்யாள் தமது காரியதரிசியிடம் கேட்டுக் கொண்டார்.

செப்டம்பர் 21ம் தேதி அதிகாலைப் பொழுதில் ஆசார்யாளுக்கு நெஞ்சு வலி ஏற்பட, அவர் ‘நாராயணா’ என இறைவனின் நாமத்தை உச்சரித்தார். இதைக் கேட்ட அவர் உதவியாளர் அங்கு விரைந்து வந்தார். அவரைப் பார்த்ததும் ஆசார்யாள், “உரக்கக் கூவி உனது தூக்கத்தைக் கெடுத்து விட்டேனா நான்?” என மிகவும் கரிசனத்துடன் விசாரித்தார். நோய்வாய்ப்பட்டிருந்த அந்த தருணத்திலும்கூட அவருக்கே உரித்தான அந்த உயர்ந்த கருணையானது அவரை விட்டு அகலவில்லை! அன்றைய தினம் முற்பகலின் கடைசியில் ஆசார்யாள் தமது ஸ்தூல உடலைத் துறந்தார்.

துங்கையின் குறுக்கே பாலக் கட்டுமானப் பணி முடிந்ததும் பாலத்தைக் காண ஆசார்யாள் தமது ஸ்தூல தேஹத்துடன் இல்லைதான். ஆயினும், தமது பக்தர்களனைவரையும் பிறவிப் பெருங்கடலைத் தாண்ட வைத்திட உதவும் மகத்தானதொரு பாலமாகவே விளங்கிடும் அவருக்கு துங்கையின் பாலத்தைக் காணாதது ஒருசிறிய விஷயமே!

# 9

# அருள் உபதேசங்கள்

1. நம்மில் பலரிடம், “நீ யார்?” எனும் கேள்வி கேட்கப்படும் பொழுது, உடனே வரும் பதில், “நான் ஒரு மலையாளி”, “நான் ஒரு பஞ்சாபி” என்பதாகவே உள்ளது. இது மிகவும் வருந்தத்தக்க ஒன்றே. “நான் ஓர் இந்தியன்” எனும் பதில்தான் உடனடியாக வரவேண்டிய ஒன்று. முதலில் இந்த உணர்வு ஏற்பட்டு, பிறகு உட்பிரிவுகளைப் பற்றிய சிந்தனை ஏற்படுமானால், நமது நாட்டிற்கு மிகப் பெரும் நன்மைகள் உண்டாவது மட்டுமல்லாது இன்றைய காலத்தில் காணப்படும் பிரிவினை சக்திகளும் செயலற்றுப் போய்விடும்.

2. நமது தேசமும் அதன் கலாசாரமும் மிகவும் புராதனமானது என்கிற விஷயத்தில் நாம் அனைவரும் பெருமை கொள்ள வேண்டும். மேலைநாட்டுக் கலாசாரத்தை முன்பின் யோசியாது அப்படியே கடைப்பிடிக்க முயல்வது நமக்கு நன்மையைத் தராது. உதாரணமாக, வயது முதிர்ந்த பெற்றோர்களைப் பேணுவது என்பது நமது நாட்டில் பாரம்பர்யமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற ஒன்று. நம்மைப் பெற்று வளர்த்தவர்களைப் பேணுவதைப் பெரிதாக

மதிக்காத சில மேலைநாட்டு சமுதாயக் கொள்கைகளைப் பின்பற்ற முனைந்து நமது கடமைகளை நாம் மறந்துவிடக் கூடாது.

3. கடவுளின் அருளால் நமக்கு மனிதப் பிறவியும், பகுத்தறியும் சக்தியும், தத்துவத்தைப் பற்றிக் கற்றுத்தரவல்ல மஹான் ஒருவரின் தொடர்பும் கிட்டிய பின்னரும், நாம் தொடர்ந்து இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாது சோம்பேறிகளாகவே இருப்போமேயானால், ஓர் அரிய சந்தர்ப்பத்தை வீணாக்கியவர்களாகி விடுவோம்.

4. எந்த மாதிரியான காரியங்களில் நாம் ஈடுபடுகிறோமோ அவை சம்பந்தப்பட்ட சுபாவமே நமக்கு உண்டாகிறது. ஆகையால் நல்லவிதமான வாழ்க்கையை நடத்த விரும்பும் ஒருவன் தீய செயல்களைச் செய்வதை விட்டு, நற்செயல்களையே தொடர்ந்து செய்துவர வேண்டும்.

5. ஓர் உண்மையான சீடனானவன் குருவின் வார்த்தைகளை அப்படியே செயற்படுத்த முனைவானேயல்லாது, "இவர் சொல்கின்றபடிச் செய்வதற்கு என்னால் இயலுமா? நான் வேறு எதையாவது முயற்சித்துப் பார்க்கட்டுமா?" என்றெல்லாம் எண்ண மாட்டான். நாம் நமது குருவின் உபதேசத்தைப் பின்பற்றுகிறோம் என்பதால் நாம் புத்தி சக்தியற்றவர்கள் என்று பொருளல்ல. அதற்குப் பொருள், நமது நன்மைக்காக நம்மைவிட உயர்ந்ததொரு சக்தியிடம் நாம் சரணடைந்திருக்கிறோம் என்பதேயாகும்.

6. விளக்கு ஒன்றின் ஒளியானது அதன் சுற்றுப்புறங்கள் அனைத்திலும் விழுகின்றது. அந்த வெளிச்சத்தில் ஒருவன் சாஸ்திரம் படிக்கலாம்; வேறொருவனோ அதைச் சிறிதும் பொருட்படுத்தாது தூங்கவும் செய்யலாம். இதேபோல், மஹான்கள் தங்களது அருளைப் பொழிந்த வண்ணம் இருக்கின்றார்கள். நாமும் நமது மனோபாவத்திற்கேற்றாற்

போல் அதனைப் பயன்படுத்திக் கொள்ளவோ அல்லது விட்டுவிடவோ செய்யலாம். ஒருவன் பெரியதொரு பாத்திரத்தை எடுத்துக் கொண்டு குளத்திற்குச் செல்லுவானானால் அதிக அளவு நீரைக் கொண்டுவர அவனால் முடியும். ஒரு சிறிய பாத்திரத்தில் சிறிய அளவே நீர் பிடித்து வர இயலும் என்பதால், ஏதோ அந்தக் குளத்திற்கே அந்த அளவு நீரைத்தான் தரும் சக்தி உள்ளது என ஆகிவிடாது.

7. ஒரு தலைசிறந்த சீடனானவன் தான் எதைச் செய்ய வேண்டும் என குரு விரும்புகிறாரோ அதை அவர் கூறுவதற்கு முன்பே தானே அறிந்து செய்து விடுகிறான். குருவிடம் பக்தி செலுத்துவதால் பிறவிப் பெரும் பயனையே ஒருவன் அடைந்து விடுகிறான். துரோணாச்சார்யார் நேரிலிருந்து எதையும் கற்றுக் கொடுத்திடாத போதிலும் அவரிடம் தனக்கு இருந்த ஆழ்ந்த குரு பக்தியின் காரணமாகவே ஏகலைவன் வில்வித்தையில் அபரிமிதமான தேர்ச்சியைப் பெற்றான். இந்த அளவிற்கு அசாத்தியமான தொரு பக்தியை எவர் தனது குருவினிடத்தில் வைத்துள்ளாரோ அவர் தமது ஆன்மிக முன்னேற்றம் குறித்த விஷயத்தில் எவ்வித பயத்திற்கும் இடம் கொடுக்க வேண்டிய அவசியமேயில்லை.

8. முற்பிறவிகளில் செய்யப்பட்ட கர்மாவின் வாஸனைக்கேற்ப இப்பிறவியில் கர்மாக்கள் செய்யப்படுமானால் அத்தகைய கர்மாக்களைச் செய்யும் விஷயத்தில் இடையூறுகள் உண்டாவதில்லை. மாறாக, கடந்த மற்றும் நிகழ்கால வாஸனைகள் வெவ்வேறாக இருந்தால், அவற்றுள் எதற்கு பலம் அதிகமாகவுள்ளதோ, அதை ஒட்டியே தற்கால கர்மா நடைபெறும். விடாமுயற்சியோடு ஒருவன் பிரயத்தனம் செய்தால், தனது பழைய வாஸனைகளை அவன் நிச்சயமாக வென்று விடலாம். எந்த அளவிற்கு ஒருவன் முயற்சி செய்ய வேண்டும் என்பதை முதலிலேயே அறிந்து கொள்வது

கடினமே. இடையூறுகள் ஏற்படும் சமயங்களில் எல்லாம், ஒருவன் வெற்றி அடையும்வரை, மென்மேலும் முயற்சி செய்து கொண்டே இருத்தல் வேண்டும்.

9. மனித முயற்சியைக் காட்டிலும் விதி பலமானது என எண்ணுவது சரியான கருத்தல்ல. ஏனெனில், பிராரப்தம் (விதி) என்பதே முற்பிறவியில் நாம் அறிந்து செய்த கர்மாவின் பலன்தானே. முற்பிறவிகளில் நாம் நமது முயற்சியை பயன்படுத்திச் செய்த கர்மவினையே இப்பிறவியில் விதிவடிவில் நம்மை வந்தடைந்திருக்கிறது. இப்படி எந்த முயற்சியைக் கொண்டு இப்பொழுது விதியாக நாம் வரவழைத்துக் கொண்டிருக்கிறோமோ, அந்த விதியை, இப்பொழுது செய்யும் முயற்சி போதுமானதாக இருக்குமேயானால், நிச்சயம் முறியடித்து விடும்.

10. செய்யும் செயல்களில் பற்றுதல் உள்ள மாணவன் ஒருவனும் செயல்களில் பற்றுதலே இல்லாத மாணவன் ஒருவனும் பரீட்சை ஒன்றை எழுதுவதாக வைத்துக் கொள்வோம். பற்றுதல் உள்ள மாணவன் ஒரு பரீட்சையை நன்றாக எழுதவில்லையென்றால் அது குறித்து கவலைப்படத் தொடங்கி, அதன் காரணமாக அடுத்த நாள் பரீட்சையையும் சரிவர எழுத மாட்டான். ஆனால், செயல்களில் பற்றுதலில்லாத கர்மயோகியான மற்ற மாணவனோ தனது செயல்களின் பலன்களை இறைவனுக்கு சமர்ப்பித்து எவ்விதக் கவலையுமில்லாமல் இரண்டு பரீட்சைகளுக்குமே சரிவர பயிற்சி செய்து தன்னைத் தயார் செய்து கொள்வான். கவலைகளெதுவும் இல்லாததால் பரீட்சைகளையும் நல்ல முறையில் எழுதிவிடுவான்.

11. தனது ஆன்மிக முன்னேற்றத்தைப் பற்றி எவரும் அவநம்பிக்கை கொள்ளத் தேவையில்லை. கவனத்துடன் விடாமுயற்சி செய்தால் ஆன்மிகத்தில் நல்ல முன்னேற்றத்தை அடைந்திட முடியும். பிரம்மாவானவர்

பிராரப்தத்தை ஒரு விதையுடன் ஒப்பிடுகிறார். விதையினால் மட்டும் நல்ல விளைச்சல் உண்டாகிவிடுவதில்லை. நிலத்தை நன்கு உழுது, சரியாக உரமிட்டு பராமரித்து வரும் பட்சத்தில் விளைச்சலும் நன்கு மேம்படுகிறது. அதேபோல் பிராரப்தத்தின்படியே தனது ஆன்மிக மார்க்கம் அமையட்டும் என ஒருவன் வெறுமனே இருந்துவிட்டால் அது அர்த்தமற்ற செயலாகும்.

12. “நான்” எனும் அஹங்காரமே பக்திக்கு முக்கியமான தடைக்கல்லாக இருக்கிறது. இவ்வஹங்காரம் நம்மை இறைவனிடத்தில் பரிபூரணமாக சரணடையவிடாமல் தடுக்கின்றது. ஆகவே, அஹங்காரத்தை அறவே ஒழித்திடும் மனிதனால்தான் இறைவனிடம் பரிபூரண சரணாகதி அடைய முடியும். திரும்பத் திரும்ப இறைவனை சிந்தித்து, தனது குரு கற்பித்த முறையிலேயே ஆன்மிக சாதனைகளில் ஈடுபட்டு வந்தால் அஹங்காரமும் நீங்கி பக்தியும் கைகூடிடும்.

13. இறைவனின் ஆற்றலில் சந்தேகம் கொள்வதோ அல்லது சாஸ்திரத்திற்குப் புறம்பாக தாம் செய்யும் காரியங்களை இறைவன் தொடர்ந்து கவனித்து வருவதில்லை என்றோ ஒருவன் எண்ணிக் கொள்ளக் கூடாது. கருணைக் கடலான இறைவன் நமது வெளித் தோற்றத்தை கவனிப்பதில்லை; உள் மனதில் நமது பாவனை எப்படி இருக்கிறது என்பதையே கவனிக்கிறான். ஆகவே பூஜையை மிகவும் சிரத்தையாகச் செய்துவர வேண்டும். பூஜையின் போது நம்மையறியாது உண்டாகும் தவறுகளைப் பற்றி நாம் பெரிதாக கவலைகொள்ளத் தேவையில்லை.

14. இறைவனை வழிபடும்போது ‘இது வேண்டும்; அது வேண்டும்’ என்றெல்லாம் வேண்டிக் கொள்ளாமல் இருப்பது மிக நல்லது. அப்படி உலக விஷயங்களை ஈச்வரனிடத்தில் வேண்டிக் கொள்வது நல்ல பழக்கமும்

அல்ல. நமக்கு எது நல்லது என்பதை இறைவன் நன்கு அறிவான். ஆகவே 'நமக்கு எது தேவை என்பதை இறைவனே தீர்மானிக்கட்டும்' என இருந்து விடுவது உத்தமமான செய்கை ஆகும். உண்மையான பக்திக்காகவே ஈச்வரனிடம் அன்பு காட்ட வேண்டுமே தவிர ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக பக்தியை உபயோகிக்கக் கூடாது. மஹான்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டால், தூய பக்தி வளரும். நமது செயல்கள் அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணித்துவிட வேண்டும். இறைவனுக்காகவே செயல்பட்டு, அனைத்துச் செயல்களின் பலன்களையும் இறைவனுக்கே சமர்ப்பிக்க வேண்டும்.

15. மனவடக்கம் என்பது மிக அவசியமான ஒன்று. உலக விஷயங்களில் ஈடுபட்டு இன்பமடைய விரும்பும் ஒருவனுக்கேகூட மனவடக்கம் மிக அவசியம் என்கையில், ஆன்மிக மார்க்கத்தில் மேம்பட விழையும் ஒருவனுக்கு மனவடக்கம் எவ்வளவு அவசியம் என்பதைக் கூறவும் வேண்டுமோ? சரிவர படிப்பதற்கோ, செயல்களைச் செய்வதற்கோ, ஏன் சரிவர விளையாடுவதற்கோகூட ஒருவனது மனம் தான் எடுத்துக்கொண்ட காரியத்தில் சரிவர ஈடுபட வேண்டும். இது மனவடக்கம் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும்.

16. பேரின்பமானது ஒருவனது ஆத்மாவிலிருந்துதான் உண்டாகின்றதே தவிர வெளியிலிருக்கும் எந்த ஒரு பொருளிலிருந்தும் உண்டாவதில்லை. இதை உணராத அவிவேகியான மனிதன் புறப்பொருட்களில் இன்பத்தைத் தேடுகின்றான். புறப்பொருட்களில் இன்பம் கிடைக்கின்றது என்றதொரு தவறான எண்ணத்தில்தான் மனமும் புறப்பொருட்களை நாடி ஓடிக்கொண்டிருக்கிறது.

17. ஜனங்களுக்கு பொதுவாகவே வைராக்யம் இருப்பதில்லை. விவேகம் (பகுத்தறியும் சக்தி) இல்லாமலிருப்பதே இதற்குக் காரணம். பேரிழப்புகள் ஏதேனும் உண்டாகும் சமயங்களில் மனிதர்களுக்கு வைராக்யம் உண்டாகும் என்றாலும், அது தற்காலிகமானதாகவே இருக்கும். விவேகத்தின் மூலமாக உண்டாகும் வைராக்யமே நிரந்தரமானதாக இருக்கும். அதனால்தான் வைராக்யத்தை மிகவும் முக்கியமானதாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மனதை அடக்கும் விஷயத்தில் மனிதர்கள் படாதபாடு படுவதன் முக்கிய காரணமே வைராக்யம் இல்லாததால்தான் என்று சொல்வது தவறாகாது.

18. ஆன்மிக மேம்பாட்டினை விரும்பும் மனிதர்கள் தங்களது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதில் அக்கறை செலுத்த வேண்டும். இதற்கு உடல் விஷயத்தில் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும் என்று பொருளல்ல; தேஹ ஆரோக்கியத்தை அலட்சியப்படுத்தி விடக்கூடாது என்றே பொருள். அதிகப்படியான தூக்கம் நல்லதல்ல; அதேபோல்தான் மிகக் குறைந்த அளவு தூக்கமும் நல்லதல்ல. ஆரோக்கியமான இளம் வயதினருக்கு ஆறிலிருந்து ஏழு மணி நேர தூக்கம் போதுமானது. இரவு 10 மணியிலிருந்து 10.30 மணிக்குள் உறங்கச் சென்று விடிகாலை 4.30 மணியிலிருந்து 5 மணிக்குள் விழித்தெழுவது நல்லதொரு பழக்கமாகும்.

19. காமம், க்ரோதம், லோபம் ஆகிய இம்மூன்றையும் நரகத்தின் மூன்று வாயில்கள் என பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் (கீதையில்) கூறுகிறார். இவை மூன்றுமே மனிதனின் மிகக் கெட்ட எதிரிகளாகும். இவற்றிற்கு மனிதன் பலியாகிவிடக் கூடாது. வைராக்யத்தின் மூலமாக ஆசையை வென்றுவிடலாம். ஆசைகள் அடைய முடியாதபோது உண்டாகிடும் மன எரிச்சலே க்ரோதம் (கோபம்) என்பதால், ஆசையை அடக்கும் பட்சத்தில் க்ரோதத்திற்கும் இடமில்லாமலேயே போய்விடும்.

'இருக்கும் அனைத்தும் இறைவனுக்கே சொந்தம்; இறைவனின் கைக் கருவியாக மட்டுமே நான் செயல்படுகிறேன்' எனும் எண்ணம் ஒருவனுக்கு வலுப்படுமாயின், அதனால் லோபத்தை ஒருவன் மிக எளிதில் வென்றுவிடலாம்.

20. குருவிடம் எதையும் கோரிப் பெறவேண்டிய அவசியமே இல்லை. அவரது கடைக்கண் பார்வை நம் மீது விழுந்து விட்டால் அதுவே போதுமானது. "இவன் உயர்ந்த மனிதனாக விளங்கட்டும்" என்று அவர் ஆசீர்வதிப்பாரேயானால், அதுவே போதும்; நமக்கு நல்ல பலன்கள் உண்டாகிவிடும்.